

WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

AKARAM

# அகரம்

14. ஆனி - 13. ஆடி 2012

சுவடி: 1.02 திருவள்ளுவர் ஆண்டு 2043 நந்தன வருடம்




FREE CIRCULATION:
GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

# பிரான்ஸ்

**Lycamobile**
Appelez le monde pour moins cher

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| அவுஸ்ரேலியா | 1 ct/min(1) | 19ct/min |
| மலேசியா | 1 ct/min(1) | 5ct/min |
| சிங்கப்பூர் | 1 ct/min(1) | 7ct/min |
| இந்தியா | 1 ct/min(1) | 6ct/min |

இணைப்புக் கட்டணம் 15ct

| | வீட்டு தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | 9ct/min(1) | 12ct/min |
| கனடா | 1 ct/min(1) | 8ct/min |
| ஐக்கிய ராஜ்ஜியம் | 1 ct/min(1) | 19ct/min |
| அமெரிக்கா | 1 ct/min(1) | 3ct/min |

| தேசிய அழைப்புகள் வீட்டு தொலைபேசி | தேசிய அழைப்புகள் கைத் தொலைபேசி | தேசிய SMS | சர்வதேச SMS |
|---|---|---|---|
| 9 cts/min | 15 cts/min | 9 cts | 9 cts |

இணைய இணைப்பு

## வரையறையற்ற இலவச(2) அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்கள்

Lycamobile லில் இருந்து ⟷ Lycamobile க்கு

### மேலதிக விபரங்களுக்கு
**www.lycamobile.fr 01 77 72 23 22**

(1) Offre et tarifs valables jusqu'au 30/06/2012 pour tout appel depuis la France Métropolitaine vers la destination correspondante, avec un coût de connexion de 0,15€. Appels facturés à la minute. Applicable aux détenteurs d'un numéro français Lycamobile. (2) Offre valable jusqu'au 30/06/2012 pour tout appel et SMS de Lycamobile à Lycamobile en France Métropolitaine, sans aucun coût de connexion. Pour bénéficier de l'offre « Appels et SMS gratuits et illimités de Lycamobile à Lycamobile », il suffit de recharger votre carte SIM Lycamobile tous les 7 jours, pour l'achat d'une recharge d'un montant de 5€ ou 10€, ou tous les 30 jours, pour l'achat d'une recharge d'un montant de 20€, 30€ ou 50€. Sans rechargement de votre carte SIM après 7 jours (pour l'achat d'une recharge d'un montant de 5€ ou 10€) ou après 30 jours (pour l'achat d'une recharge d'un montant de 20€, 30€ ou 50€), pour chaque appel de Lycamobile à Lycamobile en France Métropolitaine, seules les 15 premières minutes sont offertes, avec un coût de connexion de 0,09€. Au-delà, le tarif en vigueur s'applique. Appels facturés à la minute. Applicable aux détenteurs d'un numéro français Lycamobile. Visitez www.lycamobile.fr pour connaître nos offres et le détail des tarifs vers l'international.
Lycamobile SARL au capital social de 7.500€ – 47, boulevard de Courcelles 75008 Paris – RCS Paris 528 332 505

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்க www.lycamobile.fr

**Lyca mobile**
Appelez le monde pour moins cher

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்

Altadis · SPF · epay · phoneo · extenso · saf · RELAY · PRESSE

★ வங்கிக்கடன் (5.9% இலிருந்து)

★ நிறுவன வங்கிக்கடன் (9.1% இலிருந்து)

★ வீட்டுக்கடன் (1.1% இலிருந்து)

★ வாகனக்காப்புறுதி (30% இலிருந்து)

★ ஆயுட் காப்புறுதி

★ குழந்தைகளுக்கான காப்புறுதி

★ மருத்துவக் காப்புறுதி

★ பிரையாணக் காப்புறுதி

★ வீட்டுக்காப்புறுதி

★ இலவச சட்டத்தரணிக்கான காப்புறுதி

★ நிறுவனங்களுக்கான காப்புறுதி






# SHELVAZUG

**KREDIT & VERSICHERUNG & IMMOBILIEN**

SHELVAZUG GmbH (P.T.THURAIRAJAH), BIRKENMATT 23, 6343 ROTKREUZ

TEL 041 790 64 63 FAX 041 790 64 68 NAT 079 514 64 28

www.shelvazug.com shelvazuggmbh@bluewin.ch

**tMedia Network**

நிறுவனத்தின்



அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

| 14. ஆனி - 13. ஆடி<br>சுவடி 1.02 | 14. June - 13. July 2012<br>Issue 1.02 |
|---|---|



தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

சிறுகதை ஆசிரியர்:
திரு. இரா. அருணாச்சலம்

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திருமதி. தாமரைச்செல்வி (ஜேர்மனி)
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)



தொடர்புகளுக்கு:
tMedia Network
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 97 25 556
Email: ***editor@akaram.eu***

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©tMedia Network 2011.
All rights reserved.


# நுழைவாயில்...

அகரம் வாசகர்களுக்கு வணக்கம்,

அகரத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் வருகைதந்தும் மற்றும் பல வழிகளிலும் ஆதரவு அளித்து சிறப்புச் செய்த அனைத்து அன்பு வாசக மற்றும் வணி-கப் பெருமக்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியையும் அன்பு நிறை பாராட்டுகளையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

ஈழத் தமிழ் இனம் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருக்கக் கூடாது என்பதில் தெய்வ சங்கல்பம் எந்த அளவுக்கு உள்ளதோ அதனையும் விடப் பன்மடங்கு உலக அரசுகள் உறுதியாக உள்ளன போல் செய்திகள் வருகின்றன. இவைதான் நமது அரசியல்வாதிகளும் அரசியல் ஆய்வாளர்களும் கூறி வரும் பூகோள அரசி-யலாக இன்று காணப்படுகிறது. அதாவது இந்த மந்திரச் சொற்களை வைத்தே எவரையும் எதுவும் செய்து வாழவும் சாகவும் செய்து விடுவர்.

இதில் ஈழத் தமிழர் என்ற பசுவிடம் இன்று இவர்கள் கறப்பதற்கு இருந்த பால் எனப்படும் வணிக வர்த்தக பொருண்மிய ஆதாயங்களும், இராணுவ முக்கியத்துவ கேந்திர மையங்களும் புலிகளின் அழிப்போடு சிங்களத்தின் கைகளில் சிக்கி விட்டன. எனவேதான் அம்மக்களுக்கு கிடைக்வேண்டிய மனித உரிமை நீதி எனப்படும் பருத்திக் கொட்டை அமைதியான ஜனநாயக அரசியல் தீர்வு என்ற புண்ணாக்கும் மறுக்கப்பட்டு நாம் தொடர் இன அழிப்புக்கு ஆளாகி இருக்கிறோம்.

பசுவில் பாலை எடு பால் இல்லை என்றால் அதன் தோலை எடுத்து மேளம் கட்டி அடிடா! அடிடா ! என்ற சினமா பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன. இன்று உலக நாடுகள் எமக்கு நாக்கு மூக்கு காட்டி எமது அரசியல் மற்றும் அடிப்படை மனித உரிமைகளைக் கூட மறுக்கின்றன. இந்த விளையாட்டில் சிங்களத்தை மிஞ்சும் வகையில் தமிழக அரசும் இந்திய மத்திய அரசும் அமெரிக்க பிரித்தானிய அவுஸ்திரேலிய அரசுகளும் செயற்படுகின்றன.

இலங்கையில் மட்டும்தான் தமிழனுக்கு அகதிச் சித்திரவதை முகாம் என யாராவது கணக்குப் போட்டால் அவர்களை எல்லாம் அடி முட்டாளாக்கும் செய்திகள் அகிலம் எங்கும் உள்ளன. இன்றும் தமிழக அகதிகள் சிறப்பு முகாம்கள் என்பவற்றில் எமது உறவுகள் நீதி மறுக்கப்பட்டு பல தசாப்தங்களாக வழக்குகள் பதிவாகமலே அடைபட்டு சாகின்றனர். பொது அகதி முகாம்களில் கூட அடிப்படை வசதிகளோ உரிமை-களோ பெருமைப்படும் வகையில் இல்லை.

முகாம்களிலும் சரி வெளியிலும் சரி இலங்கை

அகதிகள் நிறையவே இடர்ப் பாடுகளை எதிர் கொண்டே வாழ்கின்றனர். தரப்படுத்திப் பார்ப்பதானால் 2ம் 3ம் நிலைதான். பணம் இருந்தால் மட்டுமே மனிதன் என்ற பொது நிலை அனைத்துத் தமிழருக்கும் பொருந்தும். ஈழத் தமிழ் அகதிகள் அனைவருக்கும் பணம் கொளிக்கிறதா? ஆனால் பொதுவான பார்வையும் எதிர்பார்ப்பும் அப்படி இருப்பதால் பணம் இல்லாவிட்டாலும் பணத்தை வீசும் திறமையை தேட வேண்டி உள்ளது. இந்த உண்மையை பல புலம் பெயர் உறவுகள் அறியாது தமது சொந்தங்கள் அநியாயத்துக்குப் பணம் பறிக்கின்றனர் எனப் பேசிக் கொள்வதும் உண்டு.

ஈழத் தமிழ் அகதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பிரிக்க முடியாத பந்தம் உள்ளது. ஈழத் தமிழன் என்றாலே புலி என்பது சிங்களவரிடம் எத்தனை ஆழமாக மனதில் பதிந்து உள்ளதோ இந்திய மக்கள் மத்தியிலும் உள்ளது. இது ஒரு இனத்தின் பிரச்சினை என்பதைப் பழ.நெடுமாறன் வை.கோ. போன்றோர் தலையால் கிணறு கிண்டினாலும் இந்திய மத்திய அரசின் பார்வைக் கோளாறு மாறுவதாக இல்லை.

புலிகள் இயக்கத் தடைக்கு எதிரான வழக்கில் புலிகளைத் தடை செய்தமைக்கான காரணங்களை வெளியிட முடியாது என அந்நாட்டு நீதிமன்றத்தில் இந்திய மத்திய அரசு தெரிவிக்கிறது. இதன் அர்த்தம் ராஜீவ் காந்தி கொலை அல்ல தடை செய்தமைக்கான காரணம். ஆனால் அதே காரணத்தைக் காட்டி இந்தியாவும் உலக நாடுகளும் ஈழத் தமிழின அழிப்பையே செய்து அதனைச் சிங்களத்துக்கு ஆதரவாக நியாயப்படுத்தியும் வருகின்றன.

அவுஸ்திரேலியாவில் அரங்கேறிய சோகக் கதை ஒன்று இந்த இதழில் இடம் பெறுகிறது. இத்தலையங்கம் எழுதப்படும் நிலையில் பிரித்தானியா 22 தமிழ் அகதிகளை கட்டாயக் காவலோடு தனி விமானத்தில் ஏற்றிப் போய் சிங்களத்திடம் ஒப்புவித்து உள்ளது. பிரத்தானியப் பாராளுமன்றத்தில் கேள்விகளும் விவாதங்களும் எம்மைப் பற்றி நடந்தாலும் கேட்டு கேள்வி அற்ற இவை போன்ற அகதிகள் வெளியேற்றம் தொடருகின்றன.

சென்ற வருடமளவில் இங்கிலாந்தில் பிரித்தானிய தமிழர் பேரவையில் விருந்துண்டு விழா நடத்தி நலம் கேட்டப் போன இந்திய எதிர்க் கட்சித் தலைவி சுஸ்மா சுவராஜ் அண்மையில் அதிபர் ராஜபக்ஷவின் அந்தரங்க இரவு விருந்துண்டு ஈழத் தமிழரின் அரசியல் விவேகம் அற்ற தன்மை பற்றி அறிக்கை விட்டு அதிபர் ராஜபக்ஷேயின் நியாய வாதியாகி விட்டார். இந்திய மத்திய அரசில் அடுத்து பிரதமராக வரும் நிலையில் உள்ளவர் இப்படி என்றால் எமக்கு மீட்சி இல்லை என்பதுதானே பொருள். இந்நிலையில் ஜெயலலலிதா மூன்றாம் அணித் தலைவியாகி ஆட்சிக் கட்டில் அமர்ந்தாலும் எமக்கு விடிவு கிடைக்காது.

கனடா அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இத்தகைய இரட்டைநிலை அணுகு முறை வைத்தே தமது கைவரிசையைக் காட்டி வருகின்றன. இவற்றை மையமாகக் கொண்டு நமது அரசியல் தலைமைகளும் புலம் பெயர் அமைப்புகளும் செற்படும் விதம் பற்றி இவ்விதழில் எங்கே போகிறோம்? என்ன செய்கிறோம்? என்ற கட்டுரை அமைந்துள்ளது.

இவற்றை எல்லாம் பார்க்கும் பொழுது நாம் எமது தனித் தமிழீழக் கோரிக்கை மீதான செயற்பாடுகளை முடுக்கிவிட வேண்டிய தேவை உள்ளது. இது விடயமாக தமிழக உணர்வாளர்கள் மிகத் தெளிவாக ஐ.நா. தலையீடும் தமிழ் மக்களின் சுயநிர்ணய வாக்கெடுப்பும் பற்றி பேசி வருகின்றன. சந்தர்ப்ப வாதமாகக் காணப்படினும் கலைஞரும் தி.மு.க.வும் ஈழத் தமிழருக்கு தனித் தமிழ் ஈழமே சரியான தீர்வு எனக் கூறும் போது ஈழத் தமிழரின் த.தே.கூ. மற்றும் பல புலம் பெயர் தமிழர் அரசியல் அமைப்புகள் தெளிவற்ற நிலையில் பேசுவதும் தமக்கிடையே அதிகாரப் போட்டியில் குதிப்பதும் எமக்கு வேதனையையும் வெறுப்பையும் ஏற்படுத்துகின்றன.

ஊடனடியாக இவர்கள் மனத் தெளிவு பெற்று தனித் தமிழ் ஈழத்தை அமைக்க ஒருமனதாகச் செயற்பட வேண்டும். அல்லது சுருட்டியது போதும் என பொது அரசியலில் இருந்து ஒதுங்கிவிட வேண்டும்.

இனிவரும் காலங்களில் அகரத்தின் கண்டனக் குரல் இது விடயத்தில் பலமாக இருக்கும். இப்பணியில் அனைத்து தமிழ் உணர்வாளர்களின் ஆதரவுக் கரங்களை அகரம் வேண்டி நிற்கிறது.

நன்றியோடு மீண்டும் இணைவோம்,
*அகரம் குழுமம்!...*



உரும்பிராய்ப் பதி தனில் உயர்தமிழ்க் குடியதில்
அரும்பிய நறுமுகை சுடரோளி அவன் எழில்
கரும்பினும் அருஞ்சுவைப் பெருந்தகைக் குணமகன்
வெதும்பினன் அனுதினம் தமிழினம் இழிகையில்

இளையவர் திரட்டியோர் புதுப்படை இழைத்து நல்
அறிவினைப் புகட்டியே மேவிய தலைமகன்
விடுதலை ஒளிபெற விடிதிசை நோக்கியே
நடையினைக் கூட்டிய வீரிய மாணவன்

தமிழினக் கல்வியின் திறனது கண்டுமே
தரப்படுத் தல் எனும் கொடும்பொறி வைத்தவர்
தலைகளை அறுத்திடக் கொடுஞ்சினம் கொண்டுமே
வலையது வீசிய வலியவோர் இளையவன்,

யாழ் நகர் மண்ணினைப் பாழ் எனவாக்கிட
ஆளுமை நம்மிடம் என்று கால்வைத்தவர்
வீழுதல் வேண்டியோன் இருகரம் ஆயுதம்
வீற்றிட வேங்கையென் றாகியே பாய்ந்தனன்

பலமுறை சிறையினைப் பழகினன்; பட்டறி
திறனுடை இலட்சிய நோக்கினன் - கொடிதெனும்
விதிவழி உயிரதை மாய்த்ததோர் தீப்பொறி - விடுதலை
வரையினில் உன்பணி நம்சிரம்....!

-தேவன்-



# எங்கே போகிறோம்? என்ன செய்கிறோம்?

த. எதிர்மன்னசிங்கம்

உலகமே பயங்கர வாதத்துக்கு எதிரான போர் எனத் தமிழினத்தின் அரசியல் விடிவுக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழ்ந்த 150,000 தமிழ் மக்களையும் சிங்களப் படைகளோடு சேர்ந்து மாபெரும் இன அழிப்பைச் செய்த போது நமது அரசியல் தலைவர்களும் அறிவு சார்(?) பெருமக்களும் எப்படித் தமது சம்மதத்தை மௌனம் காத்து வழங்கினரோ, அதே நிலையில்தான் இன்றும் நாம் நல்ல கனவான்களாகக் காட்சி கொடுத்து வருகிறோம்.

எமது தாய் மண்ணும் தாய்க் குலமும் எதிரி படையின் காலடியில் சேவகம் செய்யும் நிலைக்கு உள்ளான நிலையிலும் எமது அரசியல் தலைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. எமது மண்ணில் எதிரி விதை போடுகிறான் அறுவடையும் செய்கிறான். இன்னும் பச்சையாகச் சொல்வதானால் எவன் எவனோ எமது பெண்களைப் பெண்டாடிப் போகிறான். எமது பிள்ளைகள் தெருவோரத்தில் கை ஏந்தும் நிலை. கல்வியைக் கண்ணாகப் போற்றி வாழ்ந்த இனத்தில் வளரும் தலைமுறைக்குக் கல்வி கைக்கு எட்டாத பொருளாகிப் போய்விட்டது. எம் இனத்தின் மானம், ரோசம், சூடு, சுரணை எல்லாம் அரசியல்வாதிகளின் மயக்கு மொழிச் சொல்லாடல்களால் செல்லாக்காசுப் பண்டங்களாகி விட்டன.

மாற்றம் ஒன்றுதான் மாறாத ஒன்று என்ற தத்துவம் எம்மைப் பொறுத்த வரை, எமது அரசியல் வாதிகளைப் பொறுத்த வரை, எமது அறிவு சார் (?) சமூகத்தைப் பொறுத்த வரை எதுவுமே மாறாத மாற்றம் என்றாகிக் கிடக்கிறது. உயிர் அச்சுறுத்தல் அத்தனை கடுமையாக இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஆனால் உண்மை அறிவு என்பது அக்கினிக் குஞ்சு போன்றது. காட்டையும் எரிக்கும் அநீதியை எதிர்த்து நாட்டையும் அழிக்கும். பொய்மை பேசக் கண்டு பொங்கி எழுந்து சுட்டுப் பொசுக்கும்.

அப்படி அமரர் ஆன எம் தமிழர் பலர். மட்டக்களப்பு பா.உ. யோசப் பரராஜசிங்கம் கொக்கட்டிச் சோலைப் படுகொலைக்கு நீதி தேடிப் பலியானவர். சந்திரிகா பண்டார நாயக்க இலங்கையில் தமிழர் ஆதிக் குடிகள் அல்ல எனத் தென் ஆபிரிக்காவில் பேசியதற்குக் குமார் பொன்னம்பலம் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளில் வரலாற்று ஆதாரங்களோடு கொடுத்த சாட்டை அடிகள் அவரின் உயிரைப் பறித்தது.

இது போல் தமிழர் வரலாறு பற்றிய வரலாற்று ஆதாரங்களை அள்ளி வீசி சிங்களப் பேரினவாத பிரச்சாரத்துக்கு எதிராகச் செயற்பட்ட பலரை எம் இனம் இழந்து போய் இருக்கிறது. எமது உணர்ச்சிக் குரல்களைக் கூலிவாங்கிப் பறித்த கறுப்பாட்டு மந்தைகள் எம்மிடையே மந்திரிகளாக வலம் வருகின்ற கொடுமையும் நடக்கிறது.

அதனால் உண்மைகளைப் பேசத் தயங்குவோர் எம்மிடையே பலர். எனவேதான் உண்மை மீது சிங்களப் பொய்ப் பிரச்சார பொய்மை களிம்பாக மூடிக் கிடக்கிறது. அதைக் களைந்து மீண்டும் தமிழரின் வரலாற்று உண்மைகளை வெளிக் கொணர சிவாஜிலிங்கம், ஸ்ரீதரன் போன்ற கை விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே உயிரைத் துச்சமாக நினைத்துப் பேசி வருகின்றனர்.

இந்நிலையில் 13வது திருத்தச் சட்டம் பற்றியும் இலங்கையின் அரசமைப்புச் சட்டம் பற்றியும் அக்கு வேறு ஆணி வேறாக்கிக் காட்டிய யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் குருபரன் குமாரவடிவேல் தமிழ் மக்களின் பாராட்டுக்கும் நன்றிப் பெருக்குக்கும் உரியவராகிறார். முக்கியமாகத் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக விளங்க வேண்டிய த.தே.கூ. இன்று சிங்கள தேசியத்தில் சுமந்திரன் போன்றோரின் தயவால் தலைமுழுகிப் போய்விட்ட நிலையில் குருபரனின் குரல் தமிழர் காதில் தேனாக இனிக்கிறது.

மகாவம்சத்தைத் தலைமீது தூக்கி வைத்துக் கூத்தாடிய மகா நாயக்கர்களே இன்று மகா வம்சத்தில் காணப்படும் தமிழர் தொடர்பான உண்மைகளைப் பேச மறுப்பதோடு அவற்றைப் பொய் என மறுத்தும் இலங்கையின் வரலாற்றை புதிதாகப் பேசிவருகின்றனர்.

ஆயினும் அரிதாக உண்மைகளைப் பேசி-வரும் கற்றறிந்த சிங்களவர் மத்தியிலும் உண்மை வரலாறு பேசும் ஒருசிலர் இருக்கவே செய்கின்றனர்.

நெடுநாட்களாகச் சிங்கள வரலாற்றைப் புரட்டிப் பேசிவரும் பேர்வழிகளில் சம்பிக ரணவக்கவும் மேத்தானந்த தேரரும் மறக்க முடியாத சிங்களப் பேரினவாதிகள். இதுவரை இவர்களுககுப் பதில் சொல்லும் வகையில் சிங்களவரில் எவரும் முன்வரவில்லை. ஆனால் இப்போ விக்கிரமபாகு கருணரத்ன மேத்தானந்த தேரருக்கு வரலாற்றுப் பாடம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

விக்கிரமபாகு கருணரத்ன மீது பந்தயம் கட்டும் அளவுக்கு அவரது கடந்த கால அரசியல் இல்லை என்பது உண்மை. ஆயினும் சண்டிக் குதிரைக்குச் சவாலாக ஒரு நொண்டிக் குதிரை கிளம்பினாலும் பந்தயம் பந்தயம்தானே.

ஈழத்தில் நிலை இதுவானால் தமிழகத்தின் நிலை என்ன என்பதும் பார்க்கப்பட வேண்டியதே. ஈழத் தமிழர் பற்றிய தமிழகச் சட்டசபைத் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டதோடு எல்லாம் கிணற்றில் போட்ட கல்லாக உள்ளது. மத்திய அரசுக்குத் தலைமேல் இடி விழுந்தாலும் உணரும் நிலை கிடையாது. எதிர்க் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் பாராளுமன்றத் தலைவி சுஸ்மா சுவராஜ் பிரித்தானிய தமிழர் பேரவையி-னால் நட்போடு அனுகப்பட்டவர். எனவே அவர் மீதான தமிழர் பார்வை நிறைய எதிரபார்பைக் கொண்டிருந்ததில் புதுமை இல்லை.

அவர் தலைமையில் சென்ற இந்தியப் பாராளுமன்றக் குழுவின் செயற்பாடும் அதிபர் மகிந்தரின் இரவு விருந்தில் அவர் மட்டும் கலந்து கொண்டாடிய பின்னர் அவரின் கருத்து மாற்றங்கள் எடுத்துள்ள நேர்மாறான நிலைப்பாடும் ஒரு உண்மையை உணர்த்துகின்றது. இந்திய ஆட்சி அடுத்து பா.ஜ.க.வின் கைகளில் போ-னாலும் தமிழருக்கு எதிரான போக்கில் எதுவி-த மாற்றமும் இருக்கப் போவதில்லை என்பதே. அப்போதும் மகிந்தரின் சொல்தான் அம்பலம் ஏறும்.

எனவே இந்தியாவில் காங்கிரஸோ, ப.ஜ.க.வோ. அல்லாத மூன்றாவது அணி ஒன்று தமிழருக்கு ஆதரவான நிலை எடுத்தால் மட்டுமே ஈழத் தமிழரின் வாழ்வில் விடியல் கிடைக்கும். மூன்றாவது அணி தோன்றுவதற்கான வாய்ப்பும் அது ஆட்சியில் ஏறும் சாத்தியமும் அரிதாகவே உள்ளது.

இந்திய மத்திய அரசில் உள்ளது போன்றே தமி-ழக மாநில அரசியலிலும் தி.மு.க., அ.தி.மு.க. இடையில் ஈழத் தமிழர் பற்றிய பார்வையில் பெரி-ய வித்தியாசம் இருக்காது. தி.மு.க. காங்கிரஸோ-ாடும் அ.இ.அ.தி.மு.க. பா.ஜ.க.வோடும் பாசமாய் உள்ளன. ஜெயலலிதா எந்த அளவுக்கு ஈழத் தமிழர் பிரச்சனையில் உறுதியாக உள்ளார் எனக் கூறமுடியாது. தேர்தல் முடிந்து ஆட்சி அமைப்பதோடு ஆற்றைக் கடப்பதோடு நின்றுவிடும் ஓடம் போலாகலாம் எமது பிரச்சினை.

இப்போதைக்குத் தமிழகம் தனித் தமிழ் ஈழக் கோரிக்கையும் சுயநிர்ணய வாக்கெடுப்பும் என்ற வை.கோ.,பழ.நெடுமாறன், நாம் தமிழர் கட்சி சீ-மான், மே 17 திருக்குமரன் போன்றோரின் குரல் வலுவாக உள்ளது. இதில் இப்போது கலைஞரும் தமது கர்ச்சனையை இணைத்துக் கொண்டு விட்டார். ஆனால் அவரை யாரும் நம்பும் நிலை-யில் இல்லை. இது அவருக்கும் தெரியும். அடுத்த தேர்தல்தான் அவரது இலக்கு.

ஆனால் எம் இனத்தைப் பொறுத்த வரை கழியும் ஒவ்வொரு விநாடியும் தாயகமும் தமி-ழீழக் கோட்பாடும் சிங்களத்தின் கரங்களில் கரைந்து கொண்டே போகிறது. முகிந்தரின் தந்திரோபாயமும் நாய்கள் குரைக்கட்டும் நம் பயணம் தொடரட்டும் என்பதாகத்தான் உள்ளது. இதனை இந்தியாவும் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கூட தமது செயற்பாடுகளால் அனுசரித்தே போகின்றன.

இந்த நாடுகள் எல்லாமே தமிழின அழிப்புக்குப் பதில் கூற வேண்டியவர்கள். ஐ.நா. ஐரோப்பிய ஒன்றியங்களும் சீனா பாகிஸ்தான் ரஷி-யா செய்தவற்றைத்தான் செய்தன. ஸ்ரீலங்கா குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டால் இந்த நாடுகள் அனைத்தும் கூட்டுக் குற்றவாளிகளாகக் கூண்டில் ஏற்றப்பட வேண்டும். இந்தத் துருப்புச் சீட்டை வைத்தே சிங்களம் அரசியல் நடத்துகிறது. எனவே போருக்குப் பின்னான சிங்களத்தின் செயற்பாடுகளை எவராலும் தட்டிக் கேட்க முடியவில்லை.

எனவேதான் நோயைக் குணப்படுத்துவதைக் காட்டிலும் நோயாளி நோயால் இறப்பது இலாபம்

என்றால் தானாக சாக விடுவதே மேலானது என்ற எண்ணம் இந்த நாடுகளிடம் காணப் படுகிறது. இது உலக மயமாக்கப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்ட உலகம். ஈழத் தமிழரின் இருப்பை விட இழப்பு அதிக இலாபம் தரும் என உலகம் நம்புகிறது. இந்த நாடுகளின் விருப்பத்துக்கு ஏற்ப நம் இனம் இயற்கை மரணம் அடைய விரும்புகிறதா இல்லையா என்பதை நாம் முடிவு செய்ய வேண்டிய கட்டம் இது.

அப்பாவித்தனமாக நம் இனம் த.தே.கூ. என்ற குதிரை மீது ஏறித் தப்பித்துவிடலாம் என நம்பிக்கை வைத்துள்ளோம். 1920 முதல் தமிழினத்தின் அரசியல் தலைமை எவ்வாறு தட்டுத் தடுமாறித் தடம் புரண்டு போனதோ அதே வழியில் இன்று த.தே.கூ. எழுந்து நிற்க முடியாதபடிக்கு முடமாகிக் கிடக்கிறது.

இத்தருணத்தில் சிங்கள ஆய்வாளர் குமார் டேவிட் தெரிவித்த கருத்துகள் சிலவற்றை நாம் கவனத்தில் எடுக்க வேண்டி உள்ளது.

1. தமிழர் விவகாரத்தில் மகிந்த அரசு இந்துக்களின் அனைத்துக் கடவுளரும் பழி வாங்கும் அந்தச் சிவனே எங்கள் சேரன்தீப்என்ற தீவில் இறங்கி வந்தாலும் ஒரு அணுவளவும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. போரின் உச்சக் கட்டத்தின் போது புது டில்லி பிடியை இறுக்கி இருந்தால் கதை வேறு விதமாக இருந்திருக்கும். 60 வருடங்களாகப் போரினால் எரிந்து கொண்ட நிலையிலும் எதற்குமே இணங்காத அரசுகள் புலிகள் அழிக்கப் பட்ட நிலையில் தமிழருக்குக் கொடுக்க வேண்டிய தேவை என்ன? அதற்கான பேரம் பேசும் வலு தமிழருக்கு எங்கே இருக்கிறது?

2. எந்த அளவுக்கு நான் புலிகள் இயக்கத்தை வெறுத்தேனோ, அந்த அளவுக்கு நான் எப்போதும் புலிகள் அழிக்கப்பட்டால் தமிழருக்கு அடுத்த தலைமுறைக்கும் எதுவும் கிடைக்காது என்பதில் உறுதியாக நம்பினேன். மூளைச்சாவு அடைந்த சோனியா, மன்மோகன் சிங் அரசு புரிந்து கொள்ளவே இல்லை. இப்போது நாம் காணும் காட்சிகளும் வரலாற்றில் அத்தகைய ஒன்றே. சர்வதேசப் போர்க் குற்ற விசாரணை வர்த்தகப் பொருளாதாரத் தடை போன்றவற்றால் சிறிதளவு பயன் கிட்டலாம். ஆனால் அவை போன்ற எவையும் இடம்பெறும் என நான் நம்பவில்லை.

3. எவராவது ஒரு அணு அளவு அறிவு படைத்தவராக இருந்தால் எஸ்.எம்.கிருஸ்ணா போன்றவர்கள் வருவது மகிந்தவின் குரலைத் திருகவல்ல த.தே.கூட்டமைப்பை ஏற்பு நிலைக்குக் கொண்டுவரவே. ஏன் வார்த்தைகளைக் கவனியுங்கள் வடக்கு கிழக்கு இராணுவத்தை எடுப்பதற்கல்ல, பாதுகாப்பு வலையத்தில் மக்கள் மீள் குடியேற்றம் பற்றியதல்ல, 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் அர்த்தமுள்ள காணி காவல்துறை அதிகாரப் பரவலாக்கல் அல்ல, வடக்கு கிழக்கு இணைப்பு மக்கள் வாக்கெடுப்பும் அல்ல. என்னிடம் தொப்பி இல்லை. ஆனால் இவை ஏதாவது நடந்தால் நான் ஒரு தொப்பியைக் காசு கொடுத்து வாங்கிச் சாப்பிடுவேன்.

4. இன்னொரு விடயத்தை நான் குறிப்பிடுவேன். இலங்கையின் மக்கள் மத்தியில் இன மேலாதிக்கச் சிந்தனையின் பரவலும் அதன் கால நீட்சியும் பற்றிய யதார்த்தத்தை ஒருவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினை மக்கள் மத்தியில் இருப்பதனால் அதனை இலகுவாக முற்றாக அழிக்கவோ அல்லது தோற்கடிக்கவோ முடியும் என நான் நம்பவில்லை.

5. மக்கள் நல்லவர்கள் அரசியல்வாதிகள் கெட்டவர்கள் என்ற தவறான எண்ணப்பாட்டை நான் ஏற்கவில்லை. பொது மக்கள் எப்போதும் நல்லவர்கள் ஆனால் நசித்துப் போன அயோக்கிய அரசியல்வாதிகள்தான் அப்பாவி மக்களைத் தவறாக வழி நடத்துகிறார்கள் என்பது உண்மை அல்ல. அங்கே ஒரு சிக்கலான வழங்குவோர் நுகர்வோர் உறவு செயற்பாட்டில் உள்ளது.

6. நாங்கள் எம்மிடம் எவ்வளவு துணி உள்ளதோ அதற்கேற்றவாறு உடையைத் தைப்பதே சிறந்த வழியாகும்.

மேற் காணப்படும் கருத்துகள் எத்தனை ஆழமான அர்த்தம் நிறைந்தவை என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். சிங்களம் எமக்குக் கோவணத்துக்குப் போதுமான துணி கூடத் தயாராக இல்லை என்பது குமார்டேவிட்டுக்கும் த.தே.கூட்டமைப்புக்கும் எமக்கும் இந்த உலகத்துக்கும் தெரியும்.

இந்த நிலையில் இலங்கைக்குள் தமிழருக்குத் தீர்வு சிங்களத்துடன் இணைந்ததாக இருக்க முடியாது. இந்த அப்பட்டமான உண்மையை மறந்து அல்லது மறைத்து இனிமேலும் பேச்சு வார்த்தை என்று காலத்தைக் கடத்தாமல் ஐ.நா. வின் பாதுகாப்பிலும் கண் காணிப்பிலும் தமிழ் மக்களின் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என வை.கோ, நெடுமாறன், சீமான், மணிவண்ணன், திருக்குமரன், பழ.நெடுமாறன் போன்ற தமிழ் பெருமக்கள் கோருவது போல் எமக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

இவற்றைச் செய்யாது நாம் எங்கே போகிறோம்? என்ன செய்கிறோம்?



# தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் ஊடகர்களின் பங்கு!

சண் தவராஜா

மக்கள் மயப்பட்ட விடுதலைப் பயணம் ஒன்றில் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பு இருப்பதை அவதானிக்கலாம். அதே போன்றே சமூகத்தின் ஒரு அங்கமாகிய ஊடகர்களின் பங்களிப்பும் அதில் அடங்கும். ஆனாலும் ஊடகர்களின் பங்களிப்பு ஏனைய பலரின் பங்களிப்புக்களை விடவும் சற்றுத் தூக்கலாகத் தெரிவதை மறுத்து விட முடியாது. அது ஊடகர்கள் ஆற்றிய பங்களிப்பை மாத்திரம் பொறுத்ததல்ல. மாறாக அவர்கள் பணியாற்றும் தளங்களையும், அவர்களின் பங்களிப்பினால் ஏற்படும் விளைவுகளையும் பொறுத்தது.

ஈழத் தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கான போராட்டத்திலும் ஊடகர்களின் பங்களிப்பு சிலாகிக்கக் கூடியதாக அமைந்திருந்தது. பல ஊடகர்கள் தங்கள் உயிர்களை இழந்திருக்கின்றார்கள். பலர் காணாமற்போகச் செய்யப்பட்டிருக்கின்றார்கள். பலர் பேனாவை மாத்திரமன்றித் துப்பாக்கிகளையும் கூட ஆயுதங்களாக ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சிலர் மௌனிகளாக ஆக்கப்பட்டுள்ள அதேவேளை பெரும் எண்ணிக்கையானோர் நாட்டைவிட்டே தப்பியோடுமாறும் ஆக்கப்பட்டுள்ளார்கள். போராட்டத்திற்கு ஆதரவான ஊடகவியலாளர்கள் மாத்திரமன்றி போராட்டத்திற்கு எதிராகக் கூட ஊடகவியலாளர்கள் பணியாற்றியிருந்திருக்கின்றார்கள். ஒரு காலத்தில் போராட்டத்திற்கு ஆதரவானவர்களாக இருந்து பின்னாளில் போராட்டத்திற்கு எதிரானவர்களாக மாறியவர்களையும் கூட எம்மால் பார்க்க முடிகின்றது.

தமிழீழப் போராட்டம் ஊடகர்களுக்கு ஒரு கதாநாயக அந்தஸ்தை வழங்கியிருக்கின்றது. அத்தகைய அந்தஸ்தை அடைவதற்கு ஒரு சிலர் உயிரைப் பணயம் வைத்துப் பாடுபட்ட போதிலும் மற்றவரின் நிழலில் அந்த அந்தஸ்தைச் சம்பாதித்தவர்களே அதிகம் எனலாம். எனினும், போராட்டத்தில் ஊடகர்களின் பங்களிப்புத் தொடர்பில் ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த வகையில் இதுவே முதலாவது ஆய்வாக இருக்கலாம் எனக் கருதுகிறேன். எனினும் இது முழுமையான ஆய்வாக இருக்காது என்பதைத் திடமாகக் கூறி வைக்க விரும்புகிறேன். வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க தமிழர்கள் எத்தனையோ சாதனைகளைப் படைத்து வருகின்ற போதிலும் அதற்கான ஆவணங்களைப் பேணுவதிலோ பதிவுகளை மேற்கொள்வதிலோ அக்கறை காட்டுவதில்லை. அந்தத் துரதிர்ஷ்டம் ஊடகர்களின் பங்களிப்பு விடயத்திலும் தொடர்கிறது. ஒரு சில விடயங்களை ஓரளவுக்கு மேல் தெரிந்து கொள்வது கடினமாகவே இருக்கிறது என்பது ஒரு கசப்பான உண்மை.

ஈழத் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அறவழிப் போராட்டம் ஆயுத ரீதியிலான போராட்டம் என இரண்டு காலகட்டங்களாக வகுக்க முடியும்.

தந்தை செல்வா தலைமையிலான இரண்டு தசாப்தகால அறவழிப் போராட்டத்தைத் தேசிய விடுதலைக்கான போராட்டம் என வரையறை செய்ய முடியாது. இலங்கைத் தீவில் பன்னெடுங்காலமாக வாழ்ந்துவரும் ஈழத் தமிழர்கள் என்ற வரையறைக்குள் அடங்கும் ஆதிக்குடிகளின் மொழியுரிமை, காணி-யுரிமை, கல்வியுரிமை போன்றவற்றைக் கோரியே அன்றைய அறப் போராட்டங்கள் நடாத்தப் பட்டன.

எனினும், தொடர்ந்து நடைபெற்ற ஆயுதப் போராட்டம் இந்த அறவழிப் போராட்டங்களின் நீட்சியாக அமைந்திருந்தமை மட்டுமன்றி ஆயுதப் போராட்டத்துக்கான நியாயத் தன்மையையும் அதுவே பெற்றுத் தந்தது.

குறித்த இரண்டு போராட்ட காலகட்டங்களிலும் பின்னையதே தொடர்ச்சியானதாகவும், இடைவிடாததாகவும், பல சாதனைகளையும் வேதனைகளையும் தாங்கியதாகவும் அமைந்திருந்தது.

1956 முதல் 1977 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வரையான அறவழிப் போராட்டக் காலகட்டத்தில் தமிழ்த் தேசியம் என்ற ஒரு கருத்துரு முழுமையாக உருவாகியிருக்கவில்லை. தமிழரசுக் கட்சி தலைமை தாங்கி நடாத்திய போராட்டங்களை ஒரு தொடர்ச்சியான இடையறாத போராட்டமாக நோக்க முடியாத நிலையில் அத்தகைய கருத்தை வழிமொழிந்து எழுதிய ஊடகவியலாளர்களின் வகிபாகம் இக்காலத்தில் பெரிதும் வெளிப்படவில்லை.

தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான சுதந்திரன், பின்னாளில் வெளியான தீப்பொறி மற்றும் ஒரு தீப்பொறி ஆகியவையே இந்த அறவழிப் போராட்டங்களை ஆதரித்து எழுதி வந்தன. கோவை மகேசன், எம்.கே.அந்தனிசில் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டுவந்த இந்தப் பத்திரிகைகள் செய்திப் பத்திரிகைகளாக அன்றிக் கட்சிப் பிரசாரப் பத்திரிகைகளாகவே கொள்ளப்பட வேண்டும்.

அதேவேளை, தேசியப் பத்திரிகைகள் என்ற வரையறைக்குள் அடக்கப்பட்டு இலங்கைத் தீவு முழுமைக்குமான வாசகர்களைக் கொண்டிருந்த தினகரன், வீரகேசரி, தினபதி ஆகிய தினசரிகள் தமிழ் மக்களின் அறவழிப் போராட்டச் செய்திகளை அறிக்கை செய்து வந்தனவே தவிர அந்தச் செய்திகளின் ஊடாகத் தமிழ்த் தேசியம் சார்ந்த கருத்தைக் கட்டியெழுப்ப முனையவில்லை. மாறாக, இலங்கைத் தேசியம் என்ற கருத்துருவைக் கட்டி வளர்ப்பதாகவே அந்த எழுத்துக்கள் அமைந்திருந்தன. எனினும், அக்காலகட்டத்தில் வீரகேசரிப் பத்திரிகையின் யாழ் நிருபராகப் பணியாற்றிவந்த செல்லத்துரை என்பவர் வீரகேசரியின் இந்திய சார்பு நிலைப்பாட்டையும் கடந்து தமிழர் சார்புச் செய்திகளையும் கட்டுரைகளையும் பிரசுரித்து வந்ததாக அறிய முடிகின்றது.

1977 பொதுத்தேர்தல் முதல் 1983 யூலை வரையான காலகட்டத்தை தமிழ் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களதும் நிலைமாறும் காலகட்டம் என வர்ணிக்கலாம். இந்தக் காலகட்டத்தில்தான் தமிழ் மக்களின் அரசியல் தலைமை மிதவாதிகளின் கரங்களில் இருந்து விலகித் தீவிரவாதிகளின் கரங்களைச் சென்றடைந்தது. அத்தோடு தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் சிங்கள மக்களோடு இணைந்து வாழமுடியாது என்ற முடிவை நோக்கியும் சென்று கொண்டிருந்தார்கள். அதேவேளை, மிகவும் அதிகமான அரசியற் கருத்தாடல்களும் இக்காலப் பகுதியில்தான் தமிழ் மக்கள் மத்தியில் நடந்து கொண்டிருந்தன.

தனிநாடு அமைப்பதொன்றே தமிழ் மக்கள் நிம்மதியாக வாழச் சாத்தியமான ஒரேவழி. அதுவும் ஆயுதப் போராட்டம் ஒன்றின் மூலமே சாத்தியமாகும் என்ற கருத்து தமிழர்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் மேலோங்கிய காலம்.

இத்தகைய முக்கியமான காலகட்டத்தில் கூட மக்கள் மத்தியில் பரவலாக நிலவிய இக் கருத்துக்கு உத்வேகம் தரும் வகையில் எந்தவொரு குறித்த ஊடகவியலாளரும் தம்மை வெளிப்படுத்திச் செயற்பட்டதாகத் தெரியவில்லை.

அதேவேளை, தேசிய எழுச்சி பற்றிப் பேசிவந்த தமிழரசுக் கட்சிப் பத்திரிகைகள் இளைஞர்களின் கருத்துக்களுக்கு பதிலளிப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வந்தன.

...அடுத்த இதழில் தொடரும்!...






# தமிழகத் தமிழினம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுமா?

சீதாராமன்

அண்மையில் தமிழகத்தில் வெளிவரும் மிகப் பிரபலமான தினமும் சுமார் 15 இலட்சம் பிரதிகளை வெளியிடும் தினத்தந்தி நாளிதழ் ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட்டுத் தனது விசனத்தை, "நமது மாணவர்களும் வரவேண்டாமா?" என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டியிருந்தது. அதில் முப்படைகளில் அதி உயர் நிலையில் தமிழர் யாருமே இல்லை என்பதும் இனி வரும் காலத்திலும் வருவதற்கான நிலையில் தமிழர் இல்லை என்பதும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதற்கான காரணம் ராணுவத்தின் உயர் பதவிக்குச் சேரும் தமிழரின் எண்ணிக்கை கணிசமாக இல்லை என்பதும் அதுபற்றி யாராவது பேசினால் தப்பாகி விடுமோ என்ற அச்சமும் காரணமாக இருக்கலாம். மேலும் இந்திய மத்திய அரசாங்கத்தில் உயர் பதவிகள் எல்லாம் டெல்லி செயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரியில் படித்தவர்கள் வசமே உள்ளன என்றும் தெரிவித்தது.

எனவே அந்தக் கல்லூரியில் என்ன எல்லாம் சிறப்பாகக் கற்றுக் கொடுக்கப் படுகிறது என அறிந்து தமிழக உயர் கல்வித்துறை தமிழ்நாட்டிலும் அவற்றை அறிமுகம் செய்யவேண்டும் என்கிறது தலையங்கம். தினத் தந்தி ஒரு கோணத்தில் பிரச்சனையயைப் பார்க்கும் பொழுது அதன் இன்னொரு உண்மை வடிவத்தைப் பார்க்கிறது இன்னொரு வாரம் இருமுறை வெளியாகும் ஜூனியர் விகடன் என்ற சஞ்சிகை. இது மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த ஆனந்த விகடன் குழுமத்தின் வெளியீடாகும்.

சர்ச்சை என்ற தலைப்பில் 27.05.12 ஜூனியர் விகடனில் சென்னை உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றை மூர்த்தி என்ற மாணவர் தாக்கல் செய்துள்ளார். அவரது முறைப்பாடு தேர்வுப் பாடவிதானத்தில் காணப்படும் குறைகள் அல்லது குளறுபடிகள் காரணமாக அதிக அளவு தமிழ் மாணவர் தெரிவாக முடியாது உள்ளது என்பதாகும்.

"2010ல் தமிழ் நாட்டில் அகில இந்திய அளவில் 122 பேர் சிவில் சர்விஸ் (ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்.) துறைகளில் தேர்வு ஆனார்கள். தேர்வு முறையில் மாற்றம் வந்த பிறகு தமிழ் நாட்டில் கடந்த ஆண்டு 96 பேரும் இந்த ஆண்டு 68 பேர் மட்டுமே தேர்வாகி உள்ளார்கள். சமீபத்தில் நடந்த தேர்வுத் தாளைப் பார்த்தால், அடுத்த ஆண்டு தமிழக மாணவர்கள் 50 பேர் தேர்ச்சி பெறுவதே கடினமாக இருக்கும். இந்த வீழ்ச்சிக்குக் காரணம் யு.பி.எஸ்.சி. நடைமுறைப்படுத்தி உள்ள தேர்வுத்தாள்தான்."

இதுபற்றி மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி, "பல வருடங்களாகத் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள் முதல் நிலையிலேயே ஓரம் கட்டப்படுவது வேதனையானது. தேர்வு முறை எல்லாருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். கணக்கு, ஆங்கிலத் திறன் மட்டுமே கொண்டு தேர்வு செய்யும் முறை நிச்சயம் மாற்றப்பட வேண்டும்" இல்லையென்றால் தமிழர்களுக்கு ஐ.ஏ.எஸ்.பணி என்பதே கனவாகிவிடும்", என்கிறார்.

தமிழகத்தின் இரு பிரபல அச்சு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றுள்ள விடயம் ஏனைய பெரும்

பான்மையான தமிழக ஊடகங்களில் இன்னமும் பெரிதாக அலசப் படவில்லை என்பதையே காட்டுகிறது. இத்தகைய நிலைக்கு மத்திய மாநில அரசு இயந்திரங்கள் மக்கள் வெகு ஜன ஊடகங்கள் மீது செலுத்தும் நேரடி மற்றும் மறைமுக ஆதிக்கம் அழுத்தங்கள் என்பனவே காரணம் என்பதே உண்மை.

தமிழகத் தமிழரின் நலன் மீதே இத்தனை பாரபட்சம் காட்டும் அளவுக்குத் தமிழக அரசியல் கட்சிகளும் அவற்றின் மீதான புற அழுத்தங்களும் இருக்கும் போது ஈழத் தமிழரின் உரிமைப் போரும் அதன் அவல முடிவும் அதனைத் தொடர்ந்து இந்திய மத்திய மாநில அரசுகளின் இரட்டை நிலைப் போக்கும் நடந்து முடிந்த முள்ளி வாய்க்கால் இனப் படுகொலைக்குக் கிடைத்துள்ள முடிவை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

இன்று தமிழகத்தின் நிலைக்குக் காரணமான வரலாற்று நிகழ்வுகளைக் கவனித்தால் எது இலங்கையில் நன்றாக நடந்து முடிந்ததோ அவையே தமிழகத்திலும் நன்றாக நடந்தேறி வருகிறது என்பதை அவதானிக்க முடியும். எனவே தர்க்க ரீதியாகச் சிந்திப்போருக்கு இன்று ஈழத் தமிழருக்கு நிறைவேறிய இன அழிப்பு நாளை தமிழ் நாட்டுத் தமிழருக்கும் ஏற்பட்டே தீரும் என்பது தவிர்க்க முடியாத முடிவாகும்.

தமிழகத்தில் வேண்டுமானால் படு கொலைகள் ஈழத் தமிழர் அளவுக்கு இல்லாது போகலாம். ஆனால் இந்தியத் தமிழக மீனவரை இலங்கை அரசு நாளாந்தம் கொன்றொழித்து வருவதை மத்தியில் ஆளும் அரசு மெத்தனமாக நடந்து ஊக்குவித்து வருவதையும், ஆபத்துகள் நிறைந்த கூடங்குளம் கல்பாக்கம் அணுமின் நிலையங்கள் தமிழகத்தை மையமாகக் கொண்டு அமைக்கப் படுவதைக் காணும் பொழுதும், அழிவது என்றால் அது தமிழனாக இருக்கட்டும் என்ற சித்தாந்தம் செயல் முறையில் உள்ளது என்பதை உணர்த்துகிறது.

மேலும் அண்டை மாநிலங்கள் தமிழனுக்குத் தவிச்ச வாய்க்குத் தண்ணீரும் கொடுக்க மறுக்கும் மன நிலையில் செயற்பட்டு வருவதும், மத்திய அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்ற மற்றும் நடுவர் தீர்ப்பு ஆயங்களின் தீர்ப்புகளைக்கூடச் செயற் படுத்தி நீதியை நிலைநாட்டத் தவறுவதும் சிறுகச் சிறுகத் தமிழனைக் கொன்றொழிப்பது அல்லது கொத்தடிமைகள் ஆக்கும் உள்நோக்கம் வெளியாகிறது.

இது போன்றே இலங்கையில் 1950களில் அரச சேவையில் தமிழர் அதிக அளவில் தேர்வாகி வந்த காரணத்தால் சிங்கள அரசுகளின் இன ஒதுக்கல் கல்வித் தரப்படுத்தல் என்பன தலை தூக்கி முடிவில் இன்றைய இன அழிவுக்கு வழி செய்தது. இன்று இந்திய நிர்வாக, மற்றும் படைத்துறைச் சேவைகளில் தமிழர் ஓரம் கட்டப்படும் மேற் கூறிய செய்திகள் வெளிப்படுத்தும் நிலையானது நாளைய தமிழகத் தமிழினத்தின் தலைவிதியின் போக்கினைக் கோடிட்டுக் காட்டுவது போல் உள்ளது.

இதுவரை இலங்கைத் தமிழருக்கு நடந்தவை போலவே தமிழகத் தமிழருக்கும் நடக்கிறது. ஆயினும் நாட்டில் நடப்பது என்ன என அறியாமல் அரசியல் வாதிகளும் தொண்டர்களும் வாக்கு வேட்டை அரசியல் ஒன்றே பெரிதென மதித்துச் செயற்படுகிறார்கள். அன்றாட நிகழ்வுகள் எவ்வளவு பாரதூரமாக இருந்தாலும் தமிழ் அரசியல் கட்சிகளால் நடத்தப்படும் தொலைக்காட்சிகளும் கூட இவைபற்றிப் பேசாது இருப்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

சரியாக நிலைமையை அடையாளம் கண்டு சுட்டிக் காட்டும் ஒரு சிலரது குரலும் இதே அரசியல் கட்சிகளால் வெளிவராமல் அடக்கப்பட்டு விடுகின்றன. காரணம் தமது வாக்குச் சீட்டுகள் பறி போய்விடலாம் என்ற பயம். மக்கள் தெரிந்து கொண்டுவிட்டால் அவர்களின் அரசியல் பிழைப்புக்கே மோசம் வந்து விடலாம் என்ற அச்சம்.

எனவே அவர்கள் தேசியம் மறைந்துவிடும் எனப் பேசிப் பயங்காட்டுவதும் இனங்கள் மாநிலங்களுக்கிடையே பிளவுகள் உண்டாகி நாட்டின் அமைதிக்கும் உறுதிக்கும் ஆபத்து என்ற கபட நற்போதனை செய்வதுமாக உள்ளன. இதே சிந்தனையில் எழுந்த இந்தியாவின் அரசியல் சித்தாந்தம் இலங்கையின் தமிழினப் படுகொலைக்கு உதவியது.

இலங்கையில் மருந்துக்கும் காணப்படாத தேசிய ஒருமைப்பாடு இறையாண்மை என்பவற்றைக் கூறித் தமிழ் இன அழிப்பை இந்திய மத்திய அரசு நடத்தி ஈழத் தமிழரைச் சிங்கள இராணுவ அடக்கு முறைக்கும் உதவியும் வருகிறது.

இந்தியாவிலும் அதன் ஒருமைப்பாடு இறையாண்மை என்ற பெயரால் தமிழகத்தின் பெருமளவு பிரதேசங்கள் திட்டம் இட்டே அயல் மாநிலங்களின் அபகரிப்புக்கு உள்ளாக்கியது. இதனை எதிர்த்து ம.பொ.சி., சி.பா.ஆதித்தனார்

போன்றோர் எழுப்பிய தமிழ் இனக் குரல் கலைஞரின் திராவிட சுயநல அரசியலால் அழித்தொழிக்கப்பட்டது.



இன்று அதே கலைஞர் முல்லைப் பெரியாறு பிரச்சனையில் தேவிகுளம், பீர்மேடு போன்ற பிரதேசம் தமிழகத்துக்கு உரியவை என்ற பழைய பஞ்சாங்கம் படிக்கிறார்.

தமிழும் திராவிடமும் ஒன்றே எனவும் பேசுகிறார். தமிழ் ஈழம் பெற்றுக் கொடுப்பேன் எனவும் பேசுகிறார். தமது ஆட்சிக் காலத்தில் தமிழ் உணர்வைத் திட்டம் இட்டே அடக்கி அழித்து ஈழத் தமிழர் ஆதரவு அலையைச் சீர்குலைத்து முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்கு உதவியவர் இப்போது மீண்டும் சந்தர்ப்ப அரசியல் பேசுகிறார். தமிழகத் தமிழர் நிலை பற்றி எதுவும் செய்யும் எண்ணம் இல்லாது தமது குடும்ப உறுப்பினரின் அரசியல் அதிகாரப் பதவிப் போட்டியில் திண்டாடித் தவிக்கிறார்.

எல்லை ஓரக் கிராம மக்களின் எதிர்ப்புக்கும் கெஞ்சலுக்கும் ராஜாஜியோ, காமராஜரோ, ஈ.வெ.ரா. பெரியாரோ செவி சாய்க்க மறுத்ததும் அன்றி மொழிவாரிப் பிரிவினையே கூடாது எனத் தத்துவம் பேசினர். அதனால் ஆந்திரா, கேரளம், கன்னடம் என அனைத்து மாநிலங்களுடனும் தமிழரும் தமிழர் பிரதேசமும் வலிந்து சேர்க்கப்பட்டு விட்டதால் எல்லா மாநிலங்களிலும் தமிழன் சிறுபான்மை இனம் ஆக்கப்பட்டு இன்று அங்கே அவர்களிடம் அடிவாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான்.

இந்த மாநிலங்கள் நீதிமன்றத் தீர்ப்புகளையோ மத்திய அரசால் நியமிக்கும் ஆணைக் குழுக்கள் தீர்ப்பாயங்களின் முடிவுகளையோ தமிழகத்துக்குச் சார்பானதாக இருந்தால் அல்லது அந்தந்த மாநிலங்களின் அரசியல் நிலைப்பாடுகளுக்கு ஏற்புடையதாக இல்லாத போது அவற்றைச் செயற்படுத்தாது உதாசீனம் செய்து விடுகின்றன. அந்த மாநிலங்கள் மத்தியில் அரசு காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் இருப்பதால் மத்திய அரசும் தமிழக அரசின் நீதி-நியாயக் கோரிக்கைகளைக்கூடக் கணக்கில் எடுப்பதில்லை.





தமிழகம் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க கட்சிகளின் ஆளுகையில் இருப்பதால் தமிழகம் எப்போதும் மாற்றாந் தாய்ப் பிள்ளையாகவே பார்க்கப்பட்டு வருகிறது. மாநிலக் கட்சிகள் எல்லாமே ஊழல் விவகாரங்களில் சிக்க வைத்து அவற்றை ஆயுதமாகப் பயன்படுத்தி மிரட்டிக் காங்கிரஸ் கட்சி இந்திரா காந்தி காலம் முதலே மத்தியில் ஆட்சி அமைக்க ஆதரவைப் பெற்றுவருகிறது.

கலைஞருக்கு சக்காரியா ஆணைக்குழு இந்திராவின் ஆட்சிக்கு வழி செய்தது. எம்.ஜி.ஆருக்கு எரிசாராய ஊழல் அவரைக் கட்டுக்குள் போட்டது. ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு இன்னும் அவரைப் பாடாய்ப் படுத்தி வருகிறது. அண்மையில் வெளியான செய்திகளின்படி சோனியா காந்தி ஜெயலலிதாவுக்கு எதிரான செயற்பாடுகளைத் தமது கட்டுப்பாட்டில் உள்ள அரச துறைகள் மூலம் கடுமையான ஆய்வுகளுக்கு உட்படுத்தி உள்ளார் என்பதாகும்.

இதன் மூலம் தேசிய அளவில் காங்கிரஸ் கட்சிக்குச் சவாலாக விளங்கும் ஜெயலலிதாவை அரசியலில் இருந்து அகற்றிவிடச் சோனியா தயாராகிறார் என்பது புலனாகிறது. வருகிற மாதம் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலுக்கு சோனியா தனது சார்பில் ஒரு வேட்பாளரை நிறுத்த முடியாது திணறும் போது, ஜெயலலிதா முன்னாள் காங்கிரஸ் கட்சி உறுப்பினரும் பல்லாண்டு காலமாகப் பாராளுமன்ற அரசியலில் அனுபவம் கொண்டவருமான பி.ஏ.சங்மா என்பவரை முன்னிறுத்தி அவருக்கான ஆதரவைத் திரட்டி வருவது சோனியாவால் சகிக்க முடியாத ஒன்று.

சோனியா காந்தி ஒரு வெளிநாட்டவர் அதனால் அவர் இந்தியாவின் ஜனாதிபதி அல்லது பிரதமர் ஆகக்கூடாது என எதிர்த்து கட்சியிலிருந்து வெளியேறியவர் இந்த சங்மா. அடுத்த பொதுத் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதியின் நேர்மைக்குப் பெரும் சவாலாக இருக்கும் என எல்லாக் கட்சிகளுமே நம்புகின்றன.

எனவே காங்கிரஸ் தனக்கு சாதகமான ஒருவர் மூலமே அடுத்த ஆட்சியைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புகிறது. ஆட்சி கை நழுவினால் நேரு குடும்ப ஆதிக்கம் சோனியாவின் அதி-காரம் அழிந்துவிடும் என்ற நிலையில் சோனியாவின் கவனம் ஜெயலலிதாவை வீழ்த்துவதில் தங்கி உள்ளது.

எனவே ஜெயலலிதா சோனியாவின் சதியில் இருந்து வெளிவரப் பெரிதும் போராட வேண்டி வரும் போல் தெரிகி-றது. அரசியல் கட்சிகளின் ஆடுகளம் இப்படியென்றால் தமிழகத் தமிழினத்தின் நிலை மிக மோசமாகி வருகிறது.

இன்று உள்ள நிலையில் தமிழகத் தமிழ் மக்கள் பற்றிச் சிந்திக்கும் நிலையில் எவருமே இல்லை என்பதே அப்பட்டமான உண்மை. இந்நிலையில் ஈழத் தமிழரின் இன்றைய நிலையில் இருந்து விடுபடுவது வெறும் சட்டமன்றத் தீர்மானத்துக்கு அப்பால் போகும் அளவுக்கு இல்லை என்பதே உண்மை.

அடுத்த பொதுத் தேர்தலில் ஜெயலலிதா 40 தொகுதிகளைப் பெற்றாலும் அவர் ஈழத் தமிழர் நிலையை முன்னெடுத்துச் செல்லும் அளவுக்குச் செயற்பட மத்தியில் உள்ள அரசு அதிகாரிகள் வட்டாரம் இடம் அளிக்குமா என்பதும் சந்தேகமே.

எனவே தமிழகத் தமிழர் தமது அரசி-யல் அறிவையும் ஈடுபாட்டையும் முழு அளவுக்கு ஈடுபடுத்த வேண்டி இருக்கிறது. இத்தனை சிக்கலும் போட்டி அரசியலும் நிறைந்த சூழலில் தமிழகத் தமிழ் உணர்வாளர்கள் எந்த அளவுக்கு வெற்றி பெற்றுத் தமிழகத் தமிழரையும் ஈழத் தமிழரையும் காப்பாற்றுவர் என்பதைக் காலம்தான் பதில் கூற முடியும்.





# மண்டியிடாத தானைத் தலைவனின் மக்கள் சக்தி!

கலைவண்ணன்

விடுதலைப் புலிகளை அழித்துவிட்டால் இலங்கைத் தீவில் பிரச்சினை தீர்ந்துவிடும் எனப் பொதுவாக பல நாடுகளின் பார்வையாக இருந்துவந்தது. விடுதலைப் புலிகளைக் காரணங்காட்டி ஈழத்தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையை நசுக்கி, அவர்களுடைய நிலம், மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம் ஆகிய தேசியவிழுமியங்களை 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் படிப்படியாக சிங்களப் பேரினவாத வர்க்கம் அழித்துவந்த நிலையில், அதன் உச்சக்கட்டமாக 2009 ஆம் ஆண்டில் 1,50,000 இற்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று இனவழிப்புச் செய்திருந்தது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக 40 ஆண்டுகளாகப் போராடிவருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளை நசுக்குவதற்காக உலக வல்லாதிக்க சக்திகள் சகலவிதமான ஆதரவுகளையும் சிங்கள பேரினவாதத்துக்கு வழங்கியது. மே-17, 2009 இல் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை மௌனித்ததிலிருந்து இன்று 3 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்களுடைய நிலை எவ்வாறு உள்ளது என்பதை உலகம் அவதானிக்கத்தான் செய்கிறது.

இதற்குச் சான்றாக அண்மையில் சர்வதேச மனிதவுரிமை நிலவரம் குறித்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கை நோக்கத்தக்கதாக உள்ளது.

அந்த அறிக்கையில் இலங்கை அரச பேரினவாதத்தின் தமிழர்கள் மீதான இனவழிப்பின் நீட்சியை "மனித உரிமை மீறல்கள்" என்ற அடிப்படையில் நீண்ட பட்டியலிட்டிருக்கிறது அமெரிக்கா.

"இலங்கையில் தமிழர்கள் பெரும்பாலும் வசிக்கும் பகுதிகளில் அரச படைகளாலும் அரச ஆதரவுத் துணை ஆயுதக்குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகளே முதன்மையான மனிதவுரிமைப் பிரச்சினையாக உள்ளது. அத்துடன்,
இலங்கை அரசியலில் ஜனாதிபதியின் குடும்பமே ஆதிக்கம் செலுத்துகிறது. நீதித்துறைக்குள் நிறைவேற்று அதிகாரத் தலையீடுகள் உள்ளன.

அத்துடன், முக்கிய மனிதவுரிமைப் பிரச்சினையாக காணாமல் போனோர் விவகாரம் உள்ளது. முன்னைய ஆண்டுகளில் ஆயிரக் கணக்கானவர்கள் காணாமல் போயுள்ள போதும் அதற்குப் பொறுப்புக் கூறப்படவில்லை. படையினர் தடுப்பில் உள்ளவர்களை சித்திரவதை செய்து துன்புறுத்துகின்றனர். சிறைச்சாலைகளில் கைதிகளின் நிலை மோசமாக உள்ளது. பொதுமக்கள் தன்னிச்சையாகக் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகிறார்கள். வடக்குக் கிழக்கில் இராணுவம் மற்றும் காவல்துறைச் சோதனைச் சாவடிகள் அதிகம் உள்ளதோடு உயர் பாதுகாப்பு வலயங்களும் உள்ளன. அரச ஆதரவுத் துணை ஆயுதக் குழுக்களின் அடையாளம் தெரியாத நபர்களே கொலைகள், தாக்குதல்கள், பொதுமக்கள் மீதான துன்புறுத்தல்களுக்குப் பொறுப்பாக இருந்துள்ளனர். இவர்களுக்கும் அரச படையினருக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது." என அந்த அறிக்கையில் அமெரிக்கா நீண்ட குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்டு செல்கிறது.

ஏதோ இன்று நேற்று நடைபெற்ற மனிதவுரிமை மீறல்கள் போல் அமெரிக்கா அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அதில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு, பாரம்பரிய,

கலாச்சாரச் சிதைப்பு, தீவிர புத்தமதப் பரப்பல், இனக்கலப்பு, இரண்டாந்தரப் பிரஜைபோல் அடிமைகளாக்கி வைத்திருத்தல் என்பவற்றை அந்த அறிக்கையில் குறிப்பிடுவதற்கு அமெரிக்கா தவறியுள்ளது. அத்துடன், இலங்கைத் தீவில் தமிழர்களை இல்லாது ஒழிப்பதற்கான சிறந்த ஆட்சியாளர்களை மட்டுமே பேரினவாதம் அதிபர்களாகத் தெரிவுசெய்கின்றது என்ற விடயத்தையும் அமெரிக்கா அந்த அறிக்கையில் தெரிவிக்காமல் விட்டுள்ளது எனலாம்.

இதுவே இலங்கையில் காலங்காலமாக தமிழர்கள் மீது சிங்கள பேரினவாதம் அதன் நிறைவேற்று அரசாட்சி நிர்வாக அலகுகள் ஊடாக மேற்கொண்டுவருகின்ற இனவழிப்பு. அதை விடுதலைப் புலிகள் தமிழர்களுடைய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தின் மூலம் கட்டுப்படுத்திவந்த நிலையில், இன்று அது உலக வல்லாதிக்க சக்திகளின் பலத்தால் நசுக்கப்பட்டுள்ளது.

மாறாக அங்கு என்றும் இல்லாதவாறு தீவிர நில ஆக்கிரமிப்பு, மறைமுகக் கொலைகள், ஆட்கடத்தல்கள், பாலியல் வல்லுறவு, கலாச்சாரச் சிதைப்பு என நவீன இராஜதந்திர மூலோபாய உத்தியால் பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்குள் தமிழர்களுடைய அடையாளத்தை அறவே இல்லாதொழிப்பதற்கான ஒரு இரகசிய நிகழ்ச்சிரலின் அடிப்படையில் சிங்கள பௌத்த பேரினவாதம் அதிதீவிரமாகச் செயற்படுகிறது. விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நசுக்கிய உலகம் இன்று அதை வேடிக்கை பார்க்கிறது!

இருந்தாலும் எமது உரிமைகளுக்கான போராட்டத்தின் தொடர்ச்சி, மற்றொரு பரிமாணத்தில் இன்று புலம்பெயர் மக்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. தமிழீழத் தேசியத்தை மையப்படுத்திய அந்தப் புதிய நகர்வையும் போராட்ட வழிமுறையையும் மக்கள் படிப்படியாக உணர்ந்து வருவதையும் ஒருமித்த மக்கள் கட்டமைப்புகளின் சக்தியாக ஊற்றெடுப்பதையும் புலம்பெயர் தேசங்களில் நிகழ்கின்ற அண்மைய அரசியல் நகர்வுகள் ஊடாக அவதானிக்க முடிகிறது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அண்மையில் நடைபெற்ற பின்வரும் நிகழ்வைப் பார்க்கமுடியும்.

அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் பொருளாதார மன்றக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அதன் 54 உறுப்பு நாடுகளின் தலைவர்களும் பிருத்தானியாவுக்கு வரவழைக்கப் பட்டிருந்தனர். அந்த அழைப்பில் சிறீலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவும் அழைக்கப்பட்டிருந்ததுடன், பிரித்தானிய மகாராணியின் முடிசூடிய 60 ஆவது வைரவிழாக் கொண்டாட்டங்களிலும் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டதாக செய்திகள் பரவின.

நீதியின்முன் நிறுத்தப்படவேண்டிய ஒரு போர்க்குற்றவாளியை, 1,50,000 இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களைக் கொன்றொழித்த ஓர் இனப்படுகொலையாளியை பிரித்தானியாவுக்கு அழைக்கப்பட்டது மட்டுமல்லாது மகாராணியின் அரச விருந்தாளியாகவும் வரவேற்றதை அறிந்து ஒட்டுமொத்த தமிழினமும் அதிர்ச்சியடைந்தது. அது ஒட்டுமொத்த தமிழினத்தையும் அவமதிக்கின்ற அதேவேளை, இனக்கொலையாளி மகிந்த ராஜபக்சவை மன்னித்து மேலும் இனக்கொலையை ஊக்குவிக்கின்ற செயலாகப் பார்க்கப்பட்டது.

அதைக் கண்டிக்கும் விதமாகவும் பிரித்தானிய மண்ணில் காலடிவைத்த போர்க்குற்றவாளி மகிந்தவுக்கு உறைக்கக் கூடியவகையில் செருப்படி கொடுக்கும் அதேவேளை, எமக்கான நீதியைப் பெற்று எமது உரிமைகளை மீட்கும்வரை நாம் ஓயமாட்டோம் என்ற செய்தியை உலகிற்கு கூறுவதற்காகவும் பிரித்தானிய, ஐரோப்பிய மக்கள் ஜனநாயக வழியில் மாபெரும் எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் தயாராகிக்கொண்டிருந்தார்கள். அதேவேளை பிரித்தானிய அரசாங்கம், மகாராணியார், பொதுநலவாய நாடுகளின் செயலகம் போன்றவற்றுக்கு மகிந்தவின் அழைப்பைக் கண்டித்து மின்னஞ்சல்கள் அனுப்பினார்கள். அத்துடன், மகிந்தவை சுதந்திரமாக நகரவிடாது முடக்குவதற்கு பாரியளவில் தொடர் போராட்டங்களை நடாத்துவதற்கு அவசர அவரமாகவும் மிகவும் ஆவேசக் கொந்தளிப்புடனும் மக்கள் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

மற்றொரு விதமாக போர்க்குற்றவாளி மகிந்த ராஜபக்சவை கைதுசெய்யக் கோரி இனக்கொலைக்கு எதிரான மக்கள் (TAG) அமைப்பு இலண்டன் மாநகரக் காவல்துறைச் சேவையிடம் முறையான வழக்குப் பதிவொன்றைச் செய்தது.

மக்கள் பாரியளவில் கொந்தளித்து கண்டன ஆர்ப்பாட்டங்களுக்குத் தயாராகிவருவதை அறிந்துகொண்ட பிரித்தானிய அரசாங்கம் "பிரித்தானிய அரசாங்கமோ அல்லது

மாகாராணியோ உத்தியோகபூர்வமாக மகிந்தவை அழைக்கவில்லை எனவும், பொதுநலவாய நாடுகளின் செயலகத்தாலேயே அந்த அழைப்பு விடுக்கப்பட்டது எனவும்" அந்நாட்டு ஊடகமொன்றில் குறிப்பிட்டிருந்தது.

ஆயினும் இவர்களுடைய இரட்டைவேடத்தை அறிந்துகொண்ட புலம்பெயர் மக்கள் அலையலையாக ஆர்ப்பரித்து மகிந்தவுக்கு முறையான எதிர்ப்பைக் கொடுப்பதற்காக வியூகம் அமைத்தார்கள்.

பிரித்தானிய மகாராணியின் முடிசூட்டிய 60 ஆவது வைரவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த சூழலில், 54 உறுப்பு நாடுகளைக்கொண்ட பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் ஒரே இடத்தில் ஒன்றுகூடுகின்ற நிகழ்வை புலம்பெயர் தமிழர்கள் நீதிவேண்டிப் போராட்டம்செய்வதற்கு கிடைத்த நல்வாய்ப்பாக எடுத்துக்கொண்டார்கள்.

அந்த நிகழ்வுக்காக பல்வேறு நாடுகளிலிருந்து முக்கிய பிரமுகர்கள், முதன்மை ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் வருகைதந்திருந்தார்கள். பொதுநலவாய நாடுகள் என்னும்போது அவுஸ்ரேலியா, கனடா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, மால்டா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், மலேசியா, சிங்கப்பூர், பப்பூவாநியூகுயின் மற்றும் நைஜீரியா, உகண்டா, சியராலியோன், சாம்பியா, மொசாம்பிக், உள்ளிட்ட 54 நாடுகளிலிருந்து அரச தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மன்றக் கூட்டத்திற்காகவும் பிரித்தானிய மகாராணியின் வைரவிழாக் கொண்டாட்டத்தில் கலந்து சிறப்பிப்பதற்காகவும் வந்திருந்தார்கள். இந்நிலையில் அந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக போர்க்குற்றவாளி மகிந்த ராஜபக்சவும் அழைக்கப்பட்டிருந்தார்.

முதலில் இலண்டன் மான்சன் கவுஸ் என்னும் இடத்தில் 06.06.2012 காலை 10:00 மணியளவில் பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மன்றக்கூட்டம் நடைபெறும் என்றும் அதனைத் தொடர்ந்து, பிற்பகல் 2:00 மணியளவில் அதிலிருந்து ஏறக்குறைய 3 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள பொதுநலவாய நாடுகளின் செயலகமான இலண்டன் மால்பொறோக் கவுசில் பிரித்தானிய மகாராணியுடன் விருந்து உண்ணும் நிகழ்வும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனவே அன்றைய நாள் காலை 9:00 மணிக்கே ஊதுகுழல்கள், மேளங்கள், ஒலிபெருக்கிகள் சகிதம் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு இலண்டன் மான்சன் கவுசை முற்றுகையிட்டு, போர்க்குற்றவாளி மகிந்த உரையாற்றும் வேளை அவற்றை ஊதி பாரிய இரைச்சலை உண்டுபண்ணுவதென மக்கள் கங்கணம் கட்டினர். மகிந்த உரையாற்றுவதைத் தடுப்பதோடு, ஒரு போர்க்குற்றவாளியை அரசவிருந்தாளியாக அழைத்தமையைக் கண்டித்தும் மிகப்பெரிய அளவில் பிருத்தானிய, ஐரோப்பிய மக்கள் தயாராகிக் கொண்டிருந்தார்கள். இந்த ஏற்பாடுகளைக் கண்டு அஞ்சிய பிரித்தானிய காவல்துறையும் பொதுநலவாய நாடுகளும் பாதுகாப்பைக் காரணங்காட்டி 05.05.2012 மாலை மகிந்த ராஜபக்சவின் உரையை இரத்துசெய்வதாக அறிவித்தன. அத்தோடு, மான்சன் கவுசில் நடைபெறவிருந்த பொருளாதார மன்றக் கூட்டத்தையும் இடைநிறுத்தின. ஆனால், மால்பறோக் கவுசில் பிற்பகல் 2:00 மணியளவில் நடைபெற இருந்த மகாராணியாருடன் விருந்துண்ணும் நிகழ்வை பிற்பகல் 1:00 மணிக்கு மாற்றி, அந்த நிகழ்வுக்கு போர்க்குற்றவாளி மகிந்தவும் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

மகிந்த ஆற்றவிருந்த முக்கிய உரையை இரத்துசெய்தது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் இலச்சக்கணக்கான எங்கள் சொந்தங்களைக் கொன்றொழித்த ஒரு இனக்கொலையாளி பிரித்தானிய மகாராணியுடன் உணவருந்துவதை அனுமதிக்க முடியாது எனக்கூறி விருந்து நடைபெற இருந்த மால்பொறோக் கவுசுக்கு அருகாக ஆர்ப்பாட்டம் செய்வதற்கு இலண்டன் காவல்துறையிடம் மக்கள் அனுமதி பெற்றனர்.

06.06.2012 காலை 7:30 மணிக்கே ஆர்ப்பாட்டத்துக்காக ஒன்றுகூடுமாறு அறிவிக்கப்பட்டிருந்த இலண்டன் மான்சன் கவுசுக்கு முன்னால் நூற்றுக்கணக்கான மக்கள் குழுமினர். தொடர்ந்து காலை 8:00, 9:00, 10:00 மணிவரைக்கும் அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பரித்தவண்ணமே இருந்தார்கள். ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், மூதாட்டிகள், பாடசாலைச் சிறுவர்கள், குழந்தைகள் என அனைவரும் மக்கள் வெள்ளம்போல் திரளத்தொடங்கினர். அத்துடன், இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், யேர்மன், சுவிஸ், நோர்வே, பெல்ஜியம் போன்ற நாடுகளிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான மக்கள் வந்திருந்தனர். அவர்களும் அந்தந்த நட்டு கொடிகளைத் தாங்கியவாறும் அந்தந்த

நாட்டு மொழிகளில் ஆர்ப்பாட்டப் பதாகைகளைத் தாங்கியவாறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பல நூற்றுக்கணக்கான தமிழீழத் தேசியக்கொடிகள், பிரத்தானிய நாட்டு தேசியக்கொடிகள், எமது தேசியத் தலைவருடைய வண்ணப் படங்கள், பதாகைகள் என்பவற்றைத் தாங்கியிருந்தனர். காவல்துறையினர் மக்களுடைய ஆர்ப்பாட்டப் பேரணிக்காக சகலவிதத்திலும் ஆதரவு நல்கினார்கள். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் விண்ணதிரப் பலத்த கொட்டொலிகளை எழுப்பினர். "போர்க்குற்றவாளி மகிந்தவை கைதுசெய்க! எங்களுக்கு வேண்டும் தமிழீழம்! எங்கள் உரிமைகளுக்காகவே நாங்கள் போராடுகின்றோம்!" என ஆங்கிலத்தில் எட்டுத்திசையும் ஓங்கியொலிக்கும் வண்ணம் கொட்டொலிகள் முரசறைந்தன.

அத்துடன் இந்த ஆர்ப்பாட்டத்தில் வெள்ளை இனத்தவர்களைச் சேர்ந்த மனிதவுரிமை ஆர்வலர்களும் இணைந்திருந்தனர். பிரித்தானிய நாட்டு வெள்ளை இனத்தவர்கள் அங்கே வீதியால் சென்றுவருகின்ற அந்நாட்டு வெள்ளை இனத்தவர்களுக்கு நாம் எதற்காகப் போராடுகின்றோம் என்பதை விளக்கிய பரப்புரைத் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். அதேவேளை அந்த இடத்துக்குவந்த பல ஊடகங்கள் அவற்றையெல்லாம் படம்பிடித்து செய்தி சேகரித்தவண்ணம் இருந்தனர்.

மான்சன் கவுசில் பொதுநலவாய நாடுகளின் கூட்டமோ, மகிந்தவின் உரையோ நடைபெறவில்லை என்பதை உறுதிசெய்துகொண்ட அந்த மாபெரும் மக்கள் பேரணி, அங்கே பலத்த கொட்டொலிகளை எழுப்பிவிட்டு, விருந்து நடைபெறவிருக்கும் மால்பொறோக் கவுசை நோக்கி ஊர்வலமாகப் படையெடுத்தனர். இந்த ஊர்வலத்தின் போது போர்க்குற்றவாளி மகிந்த ராஜபக்சவின் இரண்டு கொடும்பாவிகளில் ஒன்றை தூக்கில் தொங்கவிட்டும், மற்றையதை கயிற்றில் கட்டியிழுத்தவாறும் கொட்டொலிகளை எழுப்பியவாறும் ஊர்வலமாகச் சென்றனர்.

பின்பு, விருந்து நடைபெறவிருந்த மால்பொறோக் கவுசை அண்மித்தவேளை பாதுகாப்புக் காரணங்களுக்காக பல நூற்றுக்கணக்கான மக்கள் மட்டும் அந்த விருந்து நடைபெறும் இடத்துக்கு மிக அருகாகச் செல்ல காவல்துறையினர் அனுமதித்தார்கள். ஏனைய பல்லாயிரக்கணக்கான மக்கள் இரண்டாகப் பிரிந்து நிற்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்களும் ஒருமிக்க தொடர்ந்து கொட்டொலிகளை முரசறைந்த வண்ணமே இருந்தனர்.

உலகத்தின் பல மூலைகளிலிருந்தும் வருகைதந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் யாவரும் பிரித்தானிய மகாராணியுடன் உணவருந்துவதற்காக அந்த வீதியால் வந்துகொண்டிருந்த வேளை ஈழத்தமிழர்களதும் மனிதவுரிமை ஆர்வலர்களதும் போர்க்குற்றவாளி மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான கோபக் காட்சிகளை (angry scenes) காண நேர்ந்தது. அத்துடன் அவர்களுடைய கொட்டொலிகளையும் கேட்க நேர்ந்தது. அவர்கள் ஏந்திவைத்திருந்த தமிழீழத் தேசியக்கொடிகள், பதாகைகள், செருப்புமாலை அணிந்திருந்த மகிந்தவின் கொடும்பாவி என்பவற்றையும் காண நேர்ந்தது.

அங்கே ஆத்திரம் தாங்காத மக்கள் மகிந்தவின் கொடும்பாவிக்கு செருப்பால் அறைந்து அதைத் தீயிட்டதுடன், சிறீலங்காவின் தேசியக்கொடி, அரசியல் யாப்பு என்பவற்றை அந்த இடத்தில் போட்டுக் கொழுத்தினார்கள். அத்துடன், அனைத்து நாடுகளின் அரச தலைவர்களும் தங்கள் நாடுகளின் கொடிகளை ஊர்திகளில் பறக்கவிட்டபடி அரச மரியாதையோடு விருந்துக்குச் சென்ற நிலையில், இலங்கை நாட்டின் ஜனாதிபதி மட்டும் தனது நாட்டில் ஆட்களைக் கடத்துவதற்காக பயன்படுத்தப்படும் இலக்கத் தகடற்ற வெள்ளை வான் கும்பலைப்போன்று மகாராணியாரின் விருந்துக்குச் செல்ல நேர்ந்தது. இந்தச் செய்தி உலகின் எல்லா மூலைகளுக்கும் சென்றிருந்தது.

"போர்க்குற்றவாளி மகிந்தவை கைதுசெய்க! எங்களுக்கு வேண்டும் தமிழீழம்! எங்கள் உரிமைகளுக்காகவே நாங்கள் போராடுகின்றோம்!" என்ற வரிகள் அங்கே ஆர்ப்பாட்ட நிகழ்வைப் படமெடுத்துக்கொண்டும் செய்தி சேகரித்துக்கொண்டுமிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களின் காதுகள் ஆயிரக்கணக்கான எங்கள் உறவுகள் ஆங்கிலத்தில் உரக்கக் கத்திய கொட்டொலிகளால் இன்னும் வலித்துக்கொண்டே இருக்கும்!

பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் மக்கள் ஆர்ப்பரித்து ஒன்றுதிரண்ட இந்த மாபெரும் மக்கள் திரட்சி நிகழ்வானது பல செய்திகளை இன்று உலகிற்குக் கொடுத்துள்ளது. இந்த

ஆர்ப்பாட்டம் வெறுமனே மகிந்தவுக்கு எதிரான ஒரு நிகழ்வாகவோ அல்லது மகிந்த பிரித்தானிய மண்ணில் கால்வைத்ததைக் கண்டிக்கின்ற ஒரு செயலாகவோ மட்டுமன்றி, உலக மனசாட்சிக் கதவுகள் திறப்பதற்கான ஒரு போராட்டமாக அமைந்துள்ளது. முள்ளிவாய்க்காலில் அரங்கேறிய இனக்கொலை சாட்சியாக, 60 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்ற இன சுத்திகரிப்பு சாட்சியாக, எங்கள் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று எங்கள் தாயகத்தில் தீவிரமாக நடைபெற்றுவரும் இன சுத்திகரிப்பு சாட்சியாக தனித் தமிழீழம் ஒன்றே எமக்கான தீர்வுஇ எமக்கான நீதி கிடைக்கின்றவரை, எங்கள் தமிழீழத்தை மீட்கும்வரை எங்கள் போராட்டம் ஓயாதுஇ அது ஏதோவொரு பரிமானத்தில் எமது இலட்சியத்தை வெல்லும்வரை தொடரும் என்பதே இந்த மக்கள் எழுச்சி கூறும் செய்தியாக உள்ளது. அத்துடன், தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு தலைப்பாகைக்கு ஆசைப்பட்டு அரைகுறைத்தீர்வைப் பெறமுற்படும் எந்த சக்தியாக இருந்தாலும் இந்த மக்கள் சக்தி முறையான பாடம் புகட்டும் என்பதையும் இந்தப் போராட்டம் கூறும் மற்றுமொரு செய்தியாக உள்ளது.

மக்கள் சக்திப் போராட்டங்கள் வழியாக நாம் நிறைய சாதிக்முடியும். முள்ளிவாய்காலின் தொடர்ச்சியாக நாம் மக்கள் கட்டமைப்புக்கள் வழியாகத் தொடர்ந்து போராடிவருகிறோம். முள்ளிவாய்க்கால் இறுதி நேரத்தில் உலகமே கண்டிராத புலம்பெயர் தமிழர்களின் கண்டனப் பேரணிகள், நீதி வேண்டிய உண்ணாநோன்பு போராட்டங்கள், வீதிமறிப்பு கவனயீர்ப்பு நிகழ்வுகள் உலகம் பூராகவும் செய்யப்பட்டன. எம் உறவுகள் தமிழகத்திலும் ஐரோப்பாவிலும் தம்மை தாமே தீயிலிட்டு அர்ப்பணித்த நிமிடங்களை மறக்க முடியுமா?

இவ்வாறாக முள்ளிவாய்க்காலின் தொடர்ச்சியாகப் பெரும் சவால்களுக்கு மத்தியில் மற்றுமோர் பரிமானத்தில் தொடர்கின்ற மக்கள் சக்திப் போராட்டங்கள் இன்று சர்வதேசத்தின் கதவுகளைதட்டி மெல்லத் திறக்கின்றது. இன்று உலகநாடுகள் எமது தொடர்போராட்டங்கள் காரணமாக தற்போது எமது கோரிக்கைகளுக்குச் செவிசாய்கின்றன. இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுட்சிகொண்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது என்பதை உலகம் மெல்ல உணர்கின்றது. ஆகவே நாம் அனைவரும் இன்றைய எங்கள் போராட்ட வழிமுறையை விளங்கிக்கொண்டு மக்களின் சக்தியாக இவ்வாறான நீதிவேண்டிய போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். ஒரு தனிமனிதனால் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் போராட்டம் குறிகிய காலத்தில் தேசிய மக்கள் போராட்டமாக மாறியது. அதேபோல் இன்றைய காலத்திலும் பல்வேறு காரணத்தால் மக்கள் பங்களிப்பு அதிகமாக இல்லை என்றாலும் எமது போராட்டம் விரிவடைந்து மிகவிரைவில் தொடர் மக்கள் போராட்டமாக வலுவாகும் காலம் விரைவாகும். இவ்வாறான நீதி வேண்டிய தொடர் மக்கள்சக்திப் போராட்டங்கள் எமக்கான விடிவைப் பெற்றுத்தரும் தளமாக அமையுமென்பது திண்ணம்.




KB intercom
CyberCafe,
Carte téléphonique,
Alimentation générale,
Kiosque, Cigarette,
Western Union,
Ticket Booking
WESTERN UNION
MONEY TRANSFER
மிகக் குறைந்த
விலையில் அனைத்து
நாடுகளுக்குமான
தொலைபேசி
அட்டைகள்!
iEasyTravels
www.ieasytravels.com
தொடர்புகளுக்கு:
உரிமையாளர்: U. KARTHIGESU
Av des Alpes 40, 1820 Montreux, Switzerland
Tel.: 021 961 27 16 Fax: 021 961 27 19 Natel: 079 681 56 44
சங்கத் தமிழன்
www.sangatamilan.com

Ihr persönlicher Finanzoptimierer

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக
கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால்,
காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று,
மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர்
ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF
















சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும்
உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்கக் கூடும்.
எனவே, சரியான வங்கியையும், வட்டி
வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும்
உங்களோடு கரங் கோர்க்கும்
ஒரேயொரு நிறுவனம் AWD.

அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின்
முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப
தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து
தருகிறோம்.

Allgemeiner Wirtschaftsdienst AG
Zweigniederlassung Bern-Köniz
Sägestrasse 79
3098 Köniz
Telefon: 031 915 00 50
Telefax: 031 915 00 60
Handy: 079 889 60 65
eMail: krishnasamy.thileepan@awd.ch
Internet: www.awd.ch

# தெரிவுக்குழுவும் கூட்டமைப்பின் சப்பைக்கட்டுகளும்...



த. பாவலன்

இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டமொன்றினை அடைந்து கொள்ள முயற்சிப்பதாகக் காட்டிக்கொள்ளும் இலங்கை அரசு புதிதாக எடுத்துக்கொண்டுள்ள அஸ்திரமே தெரிவுக்குழுவாகும். மாறிமாறி ஆட்சிப் பீடமேறும் அரசுகள் இனப்பிரச்சனைக்கான தீர்வெதனையும் வழங்காது இழுத்தடிக்க அரங்கேற்றும் நாடகங்களே சர்வகட்சி குழு, நிபுணர்கள் குழு, மற்றும் தெரிவுக்குழு என்பவை. இலங்கை அரசு தற்போது சொல்லிக்கொண்டிருக்கும் தெரிவுக்குழுவிற்கு ஒவ்வொரு கட்சியும் தத்தமது பிரதிநிதிகளைத் தரவேண்டியிருப்பதாகக் கூறி கால இழுத்தடிப்பைத் தொடங்கியுள்ளது.

கோட்பாடு ரீதியாகத் தெரிவுக்குழுவென்பது இனப்பிரச்சினை தொடர்பினில் சிங்களத் தரப்புகளும், தமிழ் தரப்புகளும் ஒன்று கூடிப் பேசித் தீர்வொன்றை எட்டுவதேயாகும். ஆனாலும் நடைமுறை ரீதியாக எதிலும் பெரும்பான்மையை சிங்களத் தரப்புகளே ஆக்கிரமித்துக் கொள்கின்ற நிலையில், சிறுபான்மையான தமிழ் தரப்புக்கள் பேச்சுக்களின் போது கதிரைக்குப் பாரமாக இருப்பதைத் தவிர வேறெதுவும் நடக்கப்போவதில்லை.வெறுமனே மீண்டுமொருமுறை இழுத்தடிக்கும் நாடகமே அரங்கேறப்போகின்றது. அதில் தமிழ் தரப்புகள் பங்காளிகளாகப்போகின்றன.

தெரிவுக்குழுவிற்குத் தமிழ் தேசியக்கூட்டமைப்பினரைப் போகச்செய்வதற்கான அழுத்தம் இந்தியாவினாலும் மேற்குலகினாலும் தொடர்ந்தும் வழங்கப்பட்டே வருகின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை உள்ளுக்குள்ளேயே தீர்த்து வைத்துவிடும் சர்வதேசத்தின் சிந்தனைக்குத் தெரிவுக்குழுவிற்குக் கூட்டமைப்பு போவது மிகவும் தேவையாக இருக்கின்றது. தெரிவுக்குழு போன்றவற்றினூடாக உள்ளுக்குள்ளேயே அரைகுறையாகவேனும் முடிவொன்றை எய்திவிடுவதே தமக்குச்சாதகமானதென சர்வதேச தரப்புக்கள் சிந்திக்கின்றன.

இலங்கை அரசின் தெரிவுக்குழுவிற்கு தமிழ் தரப்புகள் செல்லாது விட்டால் சர்வதேசநாடுகள் பல்வேறு நெருக்குவாரங்களை மறுபுறத்தே எதிர் கொள்ளவேண்டியிருக்குமென்பதே உண்மையாகும்.குறிப்பாக அவ்வாறான சூழலில் தமிழ் தரப்புக்களை ஏற்று அங்கீகரிக்கவேண்டிய கடப்பாடும் சர்வதேசத்திற்கு ஏற்பட்டுவிடும்.இவை அனைத்தையும் கூட்டிக்கழித்துப் பார்த்தே இந்தியாவாயினும் சரி மேற்குலகு நாடுகளாயினும் சரி கூட்டமைப்பைத் தெரிவுக்குழுவிற்குப் போகச்செல்லி நிரப்பந்தித்து வருகின்றன.

தமிழ்தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தவரை தெளிவற்ற அதன் அரசியல் பாதையே தமிழ் மக்களது மிகப்பெரிய சாபக்கேடாக இருக்கின்றது. தெளிவானதோர் அரசியல் இலக்கோ கொள்கையோ இன்றிக் காலத்தை ஓட்டிச்செல்வதே அதனுடைய மிகப்பெரிய சாதனையாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாகத் தமிழீழத்தைக் கேட்கவில்லையென சுமந்திரன் போன்றவர்கள் கூறித்திரிகின்றபோதும் உண்மையினில் எதனைக் கேட்பதென்பது பற்றி அவர்களிடம் ஏதும் முடிவான தெரிவுகள் ஏதும் இல்லாதேயுள்ளது.

குறிப்பாகத் தமிழ் மக்களது அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பிலும் இனப்பிரச்சினை தொடர்பிலும் குறுகிய கால மற்றும் நீண்டகாலத் திட்டங்களைக் கூட்டமைப்புக் கொண்டிருக்கவேண்டும். இவ்வாறான திட்டங்களுடன் கூடியதான கட்டமைப்பொன்றைப்பேண ஊழியர்கள் வளத்துடன் அர்ப்பணிப்பும் சோரம்போகததும் விட்டுக்கொடுக்காததுமான தலைமையொன்றும் தேவையாகும். ஆனால் கூட்டமைப்புத் தலைமையானது தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் தவறவிட்டுள்ளதுடன் தமது கதிரைகளைத் தக்கவைத்துக்கொள்வதை மட்டுமே நிரந்தரநோக்கமாகக் கொண்டுள்ளது.

தெரிவுக்குழுவிற்குள் கூட்டமைப்பு செல்வதன் மூலம் மீண்டுமொருமுறை தமிழ்மக்களை அரசியல் சூழலினுள் மீளமுடியாத புதைகுழியினுள்

வீழ்த்திடப்போகின்றதென்பதே உண்மையாகும். தெரிவுக்குழுவினிலும் பெரும்பான்மையை சிங்களத் தரப்புக்களே கொண்டிருக்கின்ற நிலையில் தமிழ் தரப்புக்கள் கேட்கப்போகும் எவையும் அங்கு கிட்டிவிடப்போவதில்லை. வெறுமனே தெரிவுக்குழுவிலும் கூட்டமைப்பினர் கதிரைகளுக்குப் பாரமாக இருந்துவிட்டே திரும்பிப்போகின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக அரைகுறைத் தீர்வு எதனையும் பெற்றுக்கொண்டு தமிழ்மக்களிடம் திரும்ப கூட்டமைப்பினரால் இனியும் முடியாது என்பதே தற்போதுள்ள கள யதார்த்தமாகும். ஜெனீவா கூட்டத்திற்குச் செல்லாது கடைசி நேரத்தினில் அந்தர்பல்டி அடித்த விவகாரம், தன்னிகரற்ற தலைவரது மேதின சிங்கக்கொடியெனப் பதில் சொல்லமுடியாது திண்டாடிவரும் கூட்டமைப்பினருக்குத் தெரிவுக்குழு விவகாரமும் மோசமான மூக்குடைப்பையே தருமென்பதை அவர்கள் புரிந்து கொண்டேயுள்ளனர். ஆனாலும் தெரிவுக்குழுவிற்கு செல்லுமாறு இந்தியா மற்றும் மேற்குலகு தரும் அழுத்தத்தை எதிர்கொள்ள முடியாது அவர்கள் விசுவாசிகளான தலைமைகள் இருந்து வருகின்றன.

இத்தகைய சூழலினில் மக்களைத் திசை திருப்பி தம்மீது எழுந்துள்ள அதிருப்தியை சமாளிக்க மீண்டும் ஜனநாயக வழியில் போராடப்போவதாகக் கூட்டமைப்பினர் கூறிவருகின்றனர். அதுவும் மக்களை ஒன்று திரட்டிப் போராட்டங்களை நடத்தப்போகின்றார்களாம். ஆனால் இவை கூட பேச்சளவினிலேயே இருந்து வருகின்றது. வவுனியாவினில் தமிழ் அரசியல் கைதிகளது விடுதலையை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டம் கூட போட்டி உட்கட்சி முரண்பாடுகளது வெளிப்பாடேயன்றி வேறெதுவுமில்லை.அதிலும் யாழ்ப்பாணத்திலும் கூட தனித்து மேதினக் கூட்டமொன்றை நடத்த வக்கற்ற கூட்டமைப்பினர் அதற்குக் கூட ஐக்கியதேசியக்கட்சி போன்ற பெரும்பான்மையின கட்சிகளிடம் சரணாகதி அடையவேண்டியிருந்தது. அதிலும் அங்கும் சிங்கக்கொடி ஏந்தி அசிங்கப்பட்டுப்போன கதை அனைவரும் அறிந்த பழைய கதையே.

தெரிவுக்குக் குழுவிற்கு கூட்டமைப்பு போகாவிட்டால் மறுபுறத்தே அரசுக்கான சர்வதேச நெருக்கடிகள் அதிகரித்துக்கொண்டே செல்லும். ஆனாலும் அவ்வாறு அரசிற்கு நெருக்கடிகள் வருவதை அதன் திரைமறைவுப் பங்காளிகளான கூட்டமைப்பு தலைமை அனுமதித்து விடப்போவதில்லை. ஏதேனும் காரணங்களைக் காட்டித் தெரிவுக்குழுவிற்குக் கூட்டமைப்பு செல்லப்போகின்றது என்பதே தற்போதைய உண்மையாகும். தமிழ்மக்களிடமிருந்து வரக்கூடிய எதிர்ப்புக்களை சமாளித்துக்கொள்ளவே தற்போதைய பிகுபண்ணுதல்கள் அரங்கேற்றப்படுகின்றது. அமெரிக்காபோன்ற நாடுகள் சில நிபந்தனைகள் அடிப்படையில் தெரிவுக்குழுவிற்குக் கூட்டமைப்பு போகலாமென கூறும் ஆலோசனைகளும் அவ்வகையிலே பார்க்கப்படவேண்டியவையாகும். மீண்டும் தமது சுயநலமான அரசியல் மூலம் தமிழ் மக்களை குழிகளுள் விழுத்தாதிருப்பதை தடுக்கவேண்டியவர்களும் மக்களே.



உங்கள் தேவை அனைத்தும் ஒரே குடையின் கீழ்

# AKM

## Asian Supermarket

### மாபெரும் மலிவு விற்பனை

அனைத்து மீன் மரக்கறி வகைகளும்
தாயகத்திலிருந்து மிகத் தரமாக
இறக்குமதி செய்யப்பட்டவை!

**50% விலைக்கழிவு**



### தரத்துடன் கூடிய இலாபம் கிடைக்கும் ஒரே இடம்

# AKM

*மலிவு! மலிவு!* மட்டும் தான். *மலிவு! மலிவு!*



**AKM** முத்திரை பதித்த பொருட்கள்
அனைத்தும் **50%** விலைக்கழிவு

| | | |
|---|---|---|
| Basel str 80<br>6003 Luzern<br>Tel. 041 2405400 | Talgut-Zentrum 7<br>3063 Ittigen (Bern)<br>Tel.031 9222318 | Alpenstrasse 1<br>3072 Ostermundigen<br>(Bern NILAVANI)<br>Tel. 031 9312525 |

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ

நல்லா இருக்கிறியளே,... கடந்த மாதம் அகரம் ஆண்டுவிழா சிறப்பா நடந்திச்சுது. அழைப்பை ஏற்று வந்தவைக்கும், அழைப்பை ஏற்று வராதவைக்கும் நன்றிகள்...,

முடிஞ்சவரைக்கும் சிறப்பா நடத்துறதுக்கு உதவி புரிஞ்ச உள்ளங்களுக்கு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். அடுத்தமுறை இன்னும் சிறப்பாக விழா நடக்க ஆண்டவன் அருள்புரியட்டும்.

எனக்கு அரசியல் அறிவு பெரிசா இல்லைப்பாருங்கோ.., ஆனாலும் நாட்டுல நடக்குற விசயங்கள் என்ன பலனைத்தரும் எண்டு கொஞ்சம் யோசிச்சு விளங்குறபுத்தி இருக்குதுங்கோ. நாங்கள் என்ன விதை போடுறமோ அதுதானே முளைக்கும். ஆனால் இஞ்ச சிலபேர், ஆமணக்கு விதையைப்போட்டுட்டு, அகத்தி தான் முளைக்கும் எண்டு ஒத்தைக்காலில நிக்கினம். என்னத்தைச் சொல்லி என்னத்தைச் செய்ய எண்டு புரியாமல் கிடக்கு..!

முள்ளிவாய்க்கால் அழிவுக்குப்பிறகு நாங்கள் எல்லாரும் சேர்ந்து, சிங்களவனுக்கு ஒரு பாடம் படிப்பிப்பம் எண்டு கணக்குப்போட்ட ஒரு சில நல்ல உள்ளங்களுக்கு, புலம்பெயர் மண்ணில இருக்கிற "பெரிய" ஆக்கள் பண்ணுற திருகுதாளங்கள் புரியுதில்லையாம். தமிழக அரசியல் நடக்குறமாதிரி, இஞ்ச நடக்குற கூத்துகளும் பெறும் அல்லோலகல்லோலமாய்க் கிடக்குதாம் பாருங்கோ. எனக்குச் சிரிப்பாய் இருந்திச்சுது.., சிங்களவனின்ர மண்டைக்குள்ள என்ன ஓடுதெண்டு இலகுவாய்க் கண்டுபிடிச்சுப்போடலாம். ஆனால் எங்கட ஆக்களின்ர மண்டைக்குள்ள என்ன ஓடுதெண்டு அந்தக்கடவுளுக்கே தெரியாமல் கிடக்குது. "புலம்பெயர் மக்களின்ர கையில போராட்டத்தை ஒப்படைக்கிறன்" எண்டு தேசியத்தலைவர் சொன்னதை எங்கடையள் பிழையா விளங்கீட்டுதுகளோ தெரியேல்லை. என்ன விசயம் எண்டால் பாருங்கோ் முள்ளிவாய்க்கால் அவலத்துக்குப் பிறகு, எங்கட ஆக்கள் எல்லாரும் நல்ல "ஒற்றுமையாய்த்" தானே இருக்கினம். சரி, ஒரு சில குழப்பவாதிகள் செய்யுற அட்டகாசங்களைத் தாங்கிக்கொண்டு எங்கட "பெரியவர்கள்" எல்லாரும் உறுதியா நிப்பினம் எண்டு பார்த்தால் எங்கட பெரியஆக்கள் "அந்தர் பெல்டி" அல்லோ அடிக்கினம்.

பிரிஞ்சு நிக்கற எல்லாரும் ஒற்றுமையானால், நல்ல சந்தோசம் தான் பாருங்கோ ஆனால், பிரிஞ்சு நிண்ட ஒருத்தரோட சேரேக்க் அவர் தன்ர பழைய "விடாக்கொண்டன்" பிடியில இருந்து வெளியில வந்துட்டாரோ எண்டு பார்க்கவேணுமோ இல்லையோ.., ஆகக்குறைஞ்சது, தன்ர பிழையள உணர்ந்துட்டாரோ எண்டாவது பாக்கவேணும்.. ஒண்டுமே பாக்காமல், அப்படியே பாஞ்சு கட்டிப்பிடிச்சு "உம்மா" குடுத்துப்போட்டு நாங்கள் ஒண்டாகீட்டம் எண்டு அறிக்கை விடுறது கொஞ்சம் கூடச்சரியில்லைப் பாருங்கோ. "உம்மா" குடுத்துக் கட்டிபிடிச்சுச் சமாதானமாகிறதுக்கு இதொண்டும் குடும்பப்பூசல் இல்லைப்பாருங்கோ. நாங்கள் போராடுறது விடுதலைக்காக..., எல்லாரும் நேர்வழியில நிண்டால்தான் வண்டி ஓடும். என்ன குழம்பிப்போனியளே...! ஒரு பெரியவருக்குக் கொஞ்சம் விசயம் சொல்லப்போறன், நீங்களும் கேளுங்கோ..!

எங்கட தமிழ்ச்சனங்கள் ஒண்டும் முட்டாளுகளில்லைப் பாருங்கோ. அவைக்கும் எல்லாம் விளங்கும். ஆனால் கதைச்சுப் பிரயோசனமில்லை எண்டுபோட்டு இருக்குதுகள். மேடை மேடையாய் ஏறி, எங்களுக்கு நல்லாய்ப்புத்திமதி சொல்லுறியள். அதை நம்பித்தானே உங்களை நாங்கள் "கடவுளின்ர தூதுவராய்ப்" பார்த்தனாங்கள். எங்கட விடுதலைக்காகக் குரல் கொடுக்குற ஒரு தூதுவராய்த் தானே நாங்கள் உங்களை மதிச்சனாங்கள். உங்கள் மேல எங்கட தேசியத்தலைவர் அளவுகடந்த மதிப்பு வைச்சிருந்த படியாலதானே, உங்களை வன்னிக்கு அழைச்சுச் சந்திச்சவர். ஆனால் நீங்கள் இப்ப "வளவுகடந்து" நிக்குறியள். எங்கட மக்களின்ர

விடுதலைக்காகக் குரல் கொடுத்த நீங்கள், ஒரு காலமும் எங்கட தேசியத்தை அவமதிச்சு, எங்கயும் போகமாட்டியள் எண்டு நம்பின எங்களை, "ஒற்றுமை" என்ற பெயரில ஒரு பெரிய சகதிக்கிடங்குக்குள்ள தள்ளிப்போட்டியள். ஒற்றுமை எங்களுக்கும் விருப்பம் தான் ஐயா, ஆனால் அதுக்குமுதல் நீங்கள் போய் "உம்மா" குடுத்த ஆக்களின்ர அரசியல் சாணக்கியங்களைத் தெரிஞ்சு போட்டுதான் கட்டிப்பிடிச்சனியளோ..? இல்லை எங்கையாவது இடைத்தரகு வேலை நடந்ததோ..? இப்படிக் கேக்குறன் எண்டு குறைநினையாதையுங்கோ..! நம்பி நம்பி இப்படியே கழுத்தறுந்து போனால் எங்கட இனத்துக்கு விமோசனம் எண்டதே கிடையாதுபாருங்கோ. தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை எண்ட ஏதாவது, நீங்கள் "உம்மா" குடுத்த ஆக்களுக்கு நினைவிருக்காமோ..? அதையும் கேட்டுப் போட்டு அறிக்கை விட்டிருந்தால் இன்னும் சந்தோசமாய் இருந்திருக்கும்.. சிலர் சொல்லுகினம், நீங்கள் "உம்மா" கொடுத்தது நட்பு வகை சார்ந்தது எண்டு,,, அப்ப அறிக்கையும் நட்பு வகை சார்ந்ததோ..? சரி அதைத்தான் விடுங்கோ் உம்மா குடுத்து அறிக்கைவிடுறதுக்கு முதல், உங்களை "இறைதூதுவராய்" மதிச்ச எங்கட ஆக்களிட்ட ஒரு சொல்லுக்கேட்டுப்போட்டுச் செய்திருக்கலாமே..? அது சரி உங்கட பெயருக்கு முன்னால நீங்கள் வைச்சிருக்கிற அடைமொழியைப் பாவிச்சு நீங்கள் எதையும் செய்யலாமாக்கும் என்ன..? நாங்கள் எல்லாத்துக்கும் ஆமாப்போடவேணும், என்னய்யா..?

தேசியத்தலைவரின்ர சிந்தனைகளை, உங்கட உரைகளுக்கு நடுவில அங்கங்க தூவுற நீங்கள் அந்தச்சிந்தனைகளுக்கு இருக்கிற ஆழ்ந்த அர்த்தத்தைச் தெரிஞ்சுகொண்டுதான் சொல்லுறனியளோ..? உதாரணமாய் ஒண்டைச் சொல்லுறன்..., "சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப்பண்டமல்ல. அது இரத்தம் சிந்தி வெற்றிகொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை" என்பது தேசியத்தலைவரின்ர சிந்தனை, ஆனால் நீங்கள் "உம்மா" குடுத்த ஆக்கள் எல்லாரோடையும் பேரம் தானே பேசிக்கொண்டு நிக்கினம். தேசியத்தலைவரால புலம்பெயர்மண்ணில நிறுவப்பட்ட, தாய்க்கட்டமைப்புக்கள் தாங்கள் சொல்லுறதைத்தான் கேட்கவேணும் எண்டுகினம். அந்தக்கட்டமைப்புகளுக்கு மேல வீண்பழியைப் போடுகினம். ஆபிரிக்காவில இருந்து அந்தாட்டிக்கா வரைக்கும் பறந்து பறந்து அரசியல் செய்தாலும் எங்கட ஆன்மா தமிழீழம் தான் எண்டுறது இவைக்குத் தெரியுமாமோ..? இவைமாதிரியான ஆக்களுக்குத்தான் தலைவர் இன்னொண்டையும் சொல்லியிருக்கிறார்." உலகெங்கும் தமிழன் பரந்து வாழ்ந்தாலும், தமிழீழத்திலேதான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கிறது. தமிழீழத்திலேதான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது. தமிழீழத்திலேதான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியுள்ளது".. இதுக்கு என்ன அர்த்தமாம் எண்டு கேட்டுச் சொல்லுறியளே ஐயா..? ஐயோ, வேண்டாம், கேட்டுக் கீட்டுப் போடாதையுங்கோ, உப்பிடி எங்க கிடக்கு எண்டு உவங்கள் கேட்டாலும் கேப்பாங்கள்..! தறிகெட்டு நிக்குற ஆக்களுக்கு உதெல்லாம் "பறி"க்குள்ள இருக்க வாய்ப்பில்லைப்பாருங்கோ..!

ஐயா, கடைசியா ஒண்டைச் சொல்லுறன், இதை நீங்கள் அடியேனின்ர வேண்டுகோளா எடுத்தாலும் சரி, உவன் கிடக்குறான் மடைச்சாம்பிராணி எண்டு அங்கால தூக்கிப்போட்டாலும் பரவாயில்லை. நீங்கள் யாரோடையும் சேருங்கோ, ஆருக்கும் "உம்மா" குடுங்கோ, ஆனால் எல்லாருக்கும் ஒருக்கா "நான் இப்படித்தான்" எண்டு அறிவிச்சுப்போட்டுச் செய்தியள் எண்டால், நாங்கள் தொடர்ந்து ஏமாறாமல் இருப்பம். "தேசியம், சுயநிர்ணயம், தன்னாட்சி, உள்ளடங்கலாகவும், தேசியத்தலைவரின்ர எண்ணக்கருக்களைச் சுமந்து கொண்டும், மாவீரர் தியாகங்களை மறக்காமலும் போராடுறவன்தான் ஈழத்தமிழன். இது உங்களுக்கும் தெரியும்..., நீங்கள் உம்மா குடுத்த ஆக்களுக்கும் தெரியும்,,, ஆனால் அவை தெரியாதமாதிரி நடிக்கினம். இனியாகிலும் அவைக்கு உதெல்லாத்தையும் விளங்கப்படுத்தி, ஒரு வழிக்குக் கொண்டுவருவியளாய் இருந்தால், நீங்கள் உண்மையான "இறைதூதர்" தான் பாருங்கோ..!

"ஆறும் அது ஆழமில்லை - அது
சேரும் கடலும் ஆழமில்லை..!
ஆழம் எது ஐயா - உங்க
"அன்பு" மனசு தான்யா..!"
.....அப்ப வரட்டே ..!


மீண்டும் Dortmund நகரில்
புதிய அமுதசுரபி
இலங்கை இந்திய தமிழர் உணவகம்
U-Towerக்கு முன்பாக வட இந்திய, இலங்கை உணவு வகைகளைச் சுவைத்து மகிழ ஓர் உணவகம்!
Rheinische Str,20
44137 Dortmund
Tel: 0231 91098947 - Fax:0231 530 176 82



Mittag Buffet: Mo-bis Sa-11.00.15.00 Uhr
Nur 5,50€
Tel:0231/ 91 09 89 47


Orient
Textiles and Jewellery
2012 ம் ஆண்டுக்கான புத்தம்
புதிய வர்ணங்களில் குந்தம்
வேலை செய்த கோலம்.
காஞ்சி காஞ்சிபுரம்,
கோலம் மற்றும் பல வகையான
முகூர்த்தப் பட்டுச் சேலைகள்.
உத்தரவாத முத்திரை பதித்த
தரமான தங்கமான தங்க
ஆபரணங்கள் தரமான தேர்வில்,
சிங்கப்பூர் விலையில்
விற்பனையானகின்றது.
உரிமையாளர்: S.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36
165, Upper Tooting Road
Tooting, London SW177TJ, UK
Tel: 0208 6823958
சிறுவர்களுக்கான
ஆடைவகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.




# சரத் பொன்சேகா என்றொரு பேரினவாதி!

மனோ

அமெரிக்காவும் இந்தியாவும் மகிந்தரை வீழ்த்த நினைத்துப் பந்தயத்தில் ஓட வைத்த குதிரை இன்று பரிதாபமாக மலடாகிக் கிடக்கிறது. இலங்கை அதிபர் தேர்தலில் பொன்சேகா வெற்றி பெற்றிருந்தால் அல்லது அவரும் வேறு சிலரும் கூறுவதுபோல் அவரது வெற்றியை மகிந்தர் பறிக்காது விட்டிருந்தால், இன்று சரத் மேன்மை தங்கிய ஜனாதிபதியாகி நாட்டை ஆண்டு கொண்டிருப்பார்.

அதனால் அமெரிக்க இந்தியக் கனவுகள் நனவாகிப் போயிருக்கலாம் ஆனால் தமிழ் மக்களின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டிருக்குமா என எவரும் நினைத்துப் பார்ப்பதில்லை. இந்த அரசுகளின் நிழலில் உயிர் வாழும் த.தே.கூ. மட்டும் தமிழருக்கு விமோசனம் கிடைத்திருக்கும் என அடித்தே பேசுவர். அவர்களுக்கு அதற்கு மேல் அரசியல் நடத்தும் பலம் கிடையாது.

ஆனால் இதே பொன்சேகா செம்மணிப் படு-கொலைகளின் சூத்திரதாரி என்பதும் அதன் தடயங்களை அழித்து எரித்து எதுவித நீதி விசாரணைக்கும் இடம் கொடாது பணி ஆற்றியவர் என்பதும் நமக்கு மறந்து போன விடயங்கள் அல்லது நாம் நினைவில் வைத்திருக்கக் கூடாதவை என எமது அரசியல் தலைவர்கள் எதிர்பார்க்கும் விடயங்கள்.

தமிழர் பிரதேசங்களில் இராணுவப் பாதுகாப்பு வலையங்களைப் பிரகடனப் படுத்திப் பல இலட்சம் தமிழ் மக்களின் நிலங்களைப் பறித்தவரும் இவரே. நோர்வே அனுசரணைப் பேச்சுகளின் போது இப்பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்வதைத் தடுத்த செம்மலும் இதே சரத். அமைதிப் பேச்சுகள் முறியக் காரணமான இவரின் மேற்படி முடிவு தமிழ் இன அழிவுப் போராக முள்ளி வாய்க்கால் படுகொலைகளின் நாயகரும் இவரே.

ஆனால் விட்டுக் கொடுப்பு அரசியலே நடத்தும் பாரம்பரியத்தில் வந்த த.தே.கூ. இவை எல்லாவற்றையும் மறந்து அவர்களின் எசமானர்களின் ஆசைக்காகச் சரத் பொன்சேகாவை அரச அதிபர் பதவிக்கு தமிழ் மக்களையே வாக்களிக்கப் போதித்த போதி மரத்துப் புத்தர்கள் ஆனார்கள்.

இறந்து அழிந்து போன மக்கள் இவர்களுக்கு வாக்குப் போட்டிருக்கலாம். இறந்த சிலர் உறவி-னராகவும் இருக்கலாம். சிலரது வீட்டில் இவர்கள் உண்டு உறங்கிக் கொண்டாடியவர்களாவும் இருக்கலாம். ஆனால் அது அந்தக் காலம். இறந்த காலம். இறந்தவர்களின் காலம். இப்போ இருப்பவர்களின் காலம். எனவே நாம் இருப்பவர்களுக்கான காலம் பற்றிப் பேச வேண்டியவர்கள். இருப்பவர்களோடு பேச வேண்டிய காலம்.

எனவே இப்போது இருக்கும் இவர்கள் இப்போது இருக்கும் தமது எசமானர்கள் விருப்பத்துக்கு

அமைய இப்போது இருக்கும் மகிந்த, கோத்தபாயா, பசில், ஜீ.எல்.பீரிஸோடு இப்போது பேசக் கூடிய அரசியல் பற்றிப் பேசுகிறார்கள். எப்போதோ செத்துப் போன 13வது திருத்தச் சட்டம் பற்றித்தான் இப்போது மீட்டல் பாடம் நடக்கிறது.

மகிந்தர் மடியில் எதுவும் கறக்க முடியாது என்பது முழு உலகத்துக்குமே தெரியும். அதுவும் நாம் நண்பர்கள் ஆபத்தானவர்கள் என நினைக்கும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் நன்றாகவே புரிந்து விட்டது. எனவே மாட்டை மாத்தி பொன்சேகா மடியில் கை வைக்கலாம் என்ற எண்ணத்தில் பொன்சேகா ஏதோ மனித உரிமை ஆர்வலர் அநியாயமாகச் சிறை வைக்கப்பட்டு விட்டார் என்பன போன்ற தேவார திருவாசகங்களைப் பாடி மகிந்தரின் வரத்தால் விடுதலை பெற்றுக் கொடுத்து விட்டனர்.

த.தே.கூட்டமைப்புக்கும் அவர்களின் எசமானர்களுக்கும் உண்மையான அப்பாவி அரசியல் கைதிகளின் அழுகுரலும் அவலங்களும் தெரியாது இருப்பது ஈழத் தமிழினம் செய்த பாவம் என்றுதான் நினைக்க வேண்டி உள்ளது. எப்படியோ மிகுந்த பிரயத்தனத்தால் மகிந்தர் பெரிய மனதுபண்ணி பொன்சேகாவின் சிறை வாசத்தை நீக்கிவிட்டார்.

ஆனால் வெளியில் வந்து விட்ட சரத் மீது சுமத்தப் பட்ட குற்றமோ விதிக்கப்பட்ட தண்டனையோ நீக்கப்படவில்லை. தாம் தேர்தலில் போட்டியிடவோ வாக்களிக்கவோ முடியாமல் போகலாம் ஆனால் மக்களிடம் சென்று அரசியல் பேச முடியும் என நிருபர்களுக்குக் கூறி உள்ளார். இவர் சிங்கள மக்கள் முன் யாரோடு போரிட்டு நாட்டை மீட்டேன் என அரசியல் பேசுவார்.

மகிந்தவும் கோத்தபாயாவும் வடக்கு கிழக்கில் குடியேற்றிய சிங்கள மக்களையும் படைகளையும் மீளத் தெற்குக்கு அழைப்பேன் என்றா அரசியல் செய்யப் போகிறார். அங்கே புதிதாகக் கட்டிய புத்த கோவில்களையும் விகாரைகளையும் பிள்ளையார் முருகன் சிவன் கோவில்கள் ஆக்கப் போகிறாரா?

அல்லது அதிகாரப் பரவலாக்கலை 13வது திருத்தச் சட்டம் மாகாண சபை என படையல் வைக்கவா போகிறார்? சுரேஷ் பிரேமச் சந்திரனும் சுமந்திரனும் அமெரிக்கா இந்தியாவிடம் எதனை வாங்கித்தர நினைக்கிறார்கள். சிங்கள தேசமும் சிங்கக் கொடியும் த.தே.கூ. தனது கொள்கையாக கையில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் எடுத்துக் கொண்ட பின்னர் வெளிநாடுகளின் தேவை எமக்கு எதற்கு?

தமிழர்களுக்கு ஒரு தீர்வை உள்நாட்டில் எவராலும் ஏற்படுத்த முடியாது என்று நன்றாகத் தெரிந்து கொண்ட பின்னரும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று இருக்கும் த.தே.கூ. இனியும் உள்நாட்டில் அரசியல் நடத்த வேண்டிய தேவை என்ன? புலம் பெயர்ந்த மக்களின் இலங்கைக் குடியுரிமையை பறிக்கும் அரசுக்கு இவர்கள் எந்த மாற்று வழி தேடித் தர இருக்கிறது?

உள்நாட்டில் தமிழ் இன அழிப்புக்கு இவர்கள் சிங்களத்துக்குக் கொடுத்த பங்களிப்பு பாரியது அதனை நிச்சயம் வரலாற்று ஆசிரியர்கள் மிகக் கேவலமாகப் பதிவு செய்வார்கள். ஆனால் அதற்கும் முன்னால் நிகழ் காலத்தையாவது நாம் பறி கொடுக்காது பாதுகாக்க வேண்டும். அதற்கு இன்று எம் இனத்துக்கு மிகப் பெரும் எதிரியாக மாறி இருப்பவர்கள் த.தே.கூ.

இன்று எமக்கு ஏற்ற தீர்வாக ஐ.நா.வின் தலையீடும் அதன் தலைமையிலான வடக்கு கிழக்கு மக்களின் சுயநிர்ணய வாக்குப் பதிவும்தான். நாம் தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் சிங்கள இராணுவ ஆட்சி தமிழ் மண் பறிப்பையும் மக்கள் பரம்பலையும் நிர்மூலமாக்கி ஒரு ஜனநாயகத் தீர்வுக்கு வழி இல்லாமல் செய்து வருகிறது. இன்று நாம் காண்பவையே நமது நாளைய இறுதி முடிவாகும் என்றால் இவர்கள் செய்யும் அரசியலுக்கு என்ன பேர் சொல்லி அழைப்பது?

எமது அடுத்த தலைமுறைக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் இந்தச் சிறு மதி படைத்த அரசியல் கோமாளிகள் மட்டும் அல்ல. இத்தனை கேவலமான அரசியல் அரங்கேற அனுமதித்த ஒட்டு மொத்தத் தமிழ் சமுதாயமும்தான். நிலத்தில் மக்கள் நினைக்கவோ நினைத்ததைப் பேசவோ முடியாத நிலையிலும் ஒரு சிலராவது துணிந்து உரிமைக் குரல் எழுப்பி வரும் போது அரசியல் தலைவர்களின் பச்சோந்தித்தனம் மன்னிக்க முடியாதது. இங்கே புலத்தில் வாழும் தமிழராகிய நாம் எமது உரிமைக் குரலை உலகறிய ஒலிக்கச் செய்வதில் ஏன் சோம்பேறிகளாக இருக்கிறோம்?



# GENERALI
Versicherungen

GENERALI GRUPPE

காப்புறுதியே வாழ்வின் காப்பரண்

WWW.GENERALI.CH

எமது காப்புறுதித்திட்டங்கள்
தொழில் நிறுவனங்களுக்கும் தனி நபருக்குமானது

**Versicherungen-Vorsorge für Firmen und Privatkunden**

அதிக வட்டியுடன் வங்கி வைப்புக்கணக்கு

**Bank, Anlagekonto**



**Berater:**
**MATHAN SELVARATNAM**
ZENTWEG 21D, 3006 BERN
058 473 24 44
076 303 22 16
EMAIL: mathan.selvaratnam@generali.ch

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்.

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்

## வேதனை

கால்களைக் காக்கும் செருப்பு
கதவிற்கு வெளியே...,
தேவையே இல்லாத துண்டு
தோள்களின் மேலே..!

## நம்பிக்கை..?

"உலகம் உருண்டை".....
பைதகரோஸ் சொன்னார்
கிடைத்தது தூக்கு,
பிரேமானந்தா சொன்னார்
தெய்வ வாக்கு..

## அடையாலம்

மஞ்சள் கயிற்று வேலி
திருமணத்தின் அடையாளம்
தங்கக் கயிற்றில் தாலி
பணமதிப்பின் அடையாளம்

## தேர்..!

களத்தில் இழுத்த தேர்
உடல் கருகி வாட்டம்
புலத்தில் இழுத்த தேர்
பணமழையில் ஆட்டம்..!

## உண்மை

ஒரு பெண்ணின் புன்னகைக்குள்
ஓராயிரம் அர்த்தங்கள்,
புரிந்தவன் பேதலிக்கிறான்
புரியாதவன் காதலிக்கிறான்

## கண்ணீர்..!

அழுதாலும் சிரித்தாலும்
ஊறும் ஊற்றும்...

-ச. ஜெந்தி

# விழியோரம் வலி!...

தொகுப்பு: தமிழ்விழி

# அகரக் கவிக்களம்...

## விளைச்சல்...*

அமோக விளைச்சல் வன்னி மண்ணில்
மண்டை ஓடுகளும்
எலும்புக்கூடுகளும்...

## அழகு...*

என் சிறுவயதில்
காப்புப்போட்டு அழகு பார்த்தவள்
இப்போ காப்பகத்தில்...

## பிச்சை...*

பணமில்லாதவன்
வயிற்றில்
பசிக்குழந்தை....

## எதிர்பார்ப்பு...*

இரையினை
எதிர்பார்த்துக்கிடக்கின்றன
கண்ணி வெடிகள்...

## தேடல்...*

புதைபொருள் ஆய்வு
தொலைந்துவிட்ட பூமி
மனிதர்களைத் தேடி

## மரணம்...*


பிறப்பெடுத்து
ஆடுகின்ற உயிர்களை
அடக்குகின்ற இசை....

...*...ஆக்கம்: வி.சிவராஜா

வாசக உறவுகளே.., உங்கள் எண்ணங்களில் உதித்த கவிவரிகளோடு சிறப்பாக நடையிட்ட "விழியோரம் வலி" என்ற தலைப்பிலான கவிக்களம், இந்த இதழோடு நிறைவுபெறுகிறது. அடுத்த இதழ் தொடக்கம் "மண்ணில் வீழா மழைத்துளிகள்" என்ற பெயரில் புதிய கவிக்களம் ஆரம்பிக்கிறது. உங்கள் மனதிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள்கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள்.., சிறப்பானவை பிரசுரிக்கப்படும்.

editor@akaram.eu

tMedia Network
PO BOX 4153, 59037 Hamm
Germany



# இலங்கை தமிழரசுக்கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு
## - எதிர்பார்ப்புக்களுக்கும் எதிர்ப்புக்களும் -

-இலட்சுமணன்-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு பல்வேறு எதிர்பார்ப்புக்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் மட்டக்களப்பு நகரில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. கடந்த மாதம் 25ஆம்திகதி முதல் ஆரம்பமான தமிழரசுக் கட்சியின் மாநாட்டின் இறுதி நாளன்று பேசிய புதிய தலைவரும் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா சம்பந்தன், "தமிழ் தேசிய இனத்தின் அரசியல் ஆன்மாவினது சின்னமாக விளங்குவதும், உயரிய விழுமியங்களுடன் தனக்கெனத் தனித்துவமான ஓர் அரசியற் பாரம்பரியத்தைக் கொண்டதுமான இலங்கைத் தமிழரசுக் கட்சியினது 2012 ஆம் ஆண்டில் நிகழும் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில், அதன் தொண்டர்களாகிய நாம் பெருமிதத்துடன் ஒன்றுகூடியிருக்கின்றோம்.

இலங்கைத் தீவை வன்கவர்ந்து ஆண்ட வெளியார்களிடமிருந்து, சிறீ லங்கா சுதந்திரம் அடைந்துவிட்டதாகப் பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னரான - கடந்த 60 ஆண்டு கால வரலாற்றில், முன்னெப்போதும் இருந்திராதவிதமான, ஒரு புதிரான காலகட்டத்தில் நாம் இங்கே நம்பிக்கையுடன் ஒன்றுகூடியிருக்கின்றோம்" எனவும் தெரிவித்தார்.

மாநாடு நடைபெறுவதற்கென ஏற்பாடாகியிருந்த தேவநாயகம் மண்டபம் தீயினால் எரிந்துபோன நிலையில், பழைய செயற்குழுவுக்கான கூட்டம் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் மட்டக்களப்பு ஊறணியில் உள்ள அமெரிக்க மிசன் மண்டபத்தில் நடைபெற்றது.

பழைய செயற்குழுக் கூட்டத்தினை தலைவருடன், பொதுச்செயலாளர் மாவை சேனாதிராசா, நிருவாகச் செயலாளர் குகநாதன் ஆகியோர் நடத்தினர். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, சரவணபவான், பா.அரியநேத்திரன், எம். சுமந்திரன், சீ.யோகேஸ்வரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான த. கனகசபை (மட்டக்களப்பு), கி. துரைரெட்ணசிங்கம் (திருகோணமலை) உட்பட செற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மறு நாள் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்புக் கிளைகளின் சுமார் 160 வரையான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கட்சியின் புதிய தலைவராக மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பொதுச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, நிருவாகச் செயலாளராக

குலநாயகம், பொருளாளராக எஸ்.ரி.ஆர். தியாகராஜா, சிரேஸ்ட உப தலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா, பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன், பிரதிச் செயலாளர் நாயகமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைராசசிங்கம் (மட்டக்களப்பு), தொழிற்சங்கச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன், கலாச்சாரச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன், சட்டம் மற்றும் வெளி விவகாரங்களுக்கான செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் ஆகியோரும் 8 மாவட்டங்களுக்குமாக உப தலைவர்களும், 12 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பலத்த பாதுகாப்புக்களுக்கு மத்தியிலும், மாநாட்டுக்கு எதிராக கறுப்புக் கொடிகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் என எதிர்ப்புகள் வந்தவண்ணமிருந்த நிலையிலும் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது.

தமிழரசுக்கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு மட்டக்களப்பில் மேமாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மேளவாத்தியம் முழங்க கோலாகலமாக ஆரம்பமானது. கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன், பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட அதிதிகள் அழைத்துவரப்பட்டனர். கட்சிக் கொடியினை ஏற்றிவைத்து இரா சம்பந்தன் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

அதனையடுத்து சிவஸ்ரீ சாம்பசிவக் குருக்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கீதத்தினை இசைத்தார். இதனைத் தொடர்ந்து, இதுவரை காலமும் போராட்டங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களில் உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி, மங்கல விளக்கேற்றலையடுத்து, தந்தை செல்வாவின் படத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் சிரேஸ்ட உபதலைவருமான பொன் செல்வராசா மாலை அணிவித்தார்.

அதனையடுத்து தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களாக இருந்து மரணமடைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள். கட்சிப் பிரமுகர்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

கலாசார நடனத்தைத் தொடர்ந்து, மதத்தலைவர்களின் ஆசிகளுடன் மாநாடு நடைபெற்றது. பிற கட்சிகள் சார்பில், ஈ.பி.ஆர். எல்.எப். இன் மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் உரையாற்றினார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு அவசியம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, இராணுவ ஆக்கிரமிப்பு நிலை விலக்கல், காணாமல் போனோர், கைதிகள் பிரச்சினைக்கு விரைந்த தீர்வு, வாழ்க்கைச் செலவுச் சுமையிலிருந்து மக்களை விடுவித்து இயல்புவாழ்வை ஏற்படுத்துதல், சர்வதேசத்துக்கான வேண்டுகோள், புலம்பெயர்ந்த மக்களுக்கான வேண்டுகோள் என 10 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் முதலாவது மாநாடு 1956 ஆம் ஆண்டு தந்தை செல்வாவின் தலைமையில் திருகோணலையில் நடைபெற்றது. 1965ஆம் ஆண்டு கல்முனையில் தி.மு.இராசமாணிக்கம் தலைமையில் இரண்டாவது மாநாடு நடைபெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பின் முற்றவெளி என அழைக்கப்படும் வெபர் மைதானத்தில் 1974ஆம் ஆண்டு தந்தை செல்வா தலைமையில் மூன்றாவது மாநாடு நடைபெற்றுள்ளது.

அதே நேரம் முள்ளிவாய்க்கால் துயரத்தின் பின் 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் இரா.சம்பந்தன் தலைமையில் கடைசி மாநாடு நடைபெற்றது.

எனினும் கடந்த மாதத்தில் மட்டக்களப்பில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடே பெருமளவான எதிர்ப்புகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் மத்தியில் நடைபெற்ற மாநாடு எனக் கூறலாம்.

கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் மட்டக்களப்பில் இம்முறை தமிரசுக் கட்சியின் மாநாடு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மார்ச் மாதத்தில் தனது மாநாட்டை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள சிவானந்தா தேசியப்பாடசாலை மைதானத்தில் நடாத்தியது.

தாமே மட்டக்களப்பில் ஒரு கட்சி மாநாட்டை முதன்முதலில் நடத்தியதாக அக் கட்சியின் சிலர் பீற்றிக் கொண்டனர். கட்சியின் மாநாடு என்பது

வெறுமனே பகட்டுகளை வெளிப்படுத்துவதற்காக அல்ல என்பதனை தமிழரசுக்கட்சி மாநாட்டைப் பார்த்து அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் மண்டபத்தினையே தமிழரசுக்கட்சி தமது மாநாட்டுக்கு முன்னர் ஒழுங்கு செய்திருந்தது. அந்த மாநாட்டு மண்டபம் மாநாட்டுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக தீப்பற்றியது. அதற்கு மின்னொழுக்கே காரணமாகச் சொல்லப்பட்டாலும், மண்ணெண்ணை வாசனை அங்கிருந்து வந்ததாகவும், பட்டாசுகளின் வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருந்தாலும் இலங்கை மின்சார சபையும், மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பகுதியினரும் மின் ஒழுக்கே காரணம் எனக் கூறியிருக்கின்றனர்.

அதேவேளை, மட்டக்களப்பின் நகரப் பகுதிகள், கல்லடி, ஆரையம்பதி, களு-தாவளை, ஓந்தாச்சிமடம், குருக்கள் மடம் எனப் பல இடங்களிலும் கருப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் முன்னாள் அமைச்சர் செ.இராசதுரைக்கு எதிர்ப்புத் தெரிவித்த சிவாஜிலிங்கத்தைக் கண்டித்து கொ-டிகள் கட்டப்பட்டதாக தமிழ் மக்கள் விடுத-லைப் புலிகள் கட்சி முக்கியஸ்தர்கள் சில-ரால் தகவல்கள் வெளியிடப்பட்டன. ஆனா-லும், அவர்களது நோக்கம் தமிழரசுக்கட்சியின் மாநாட்டைக் குழப்புவதாகவே இருந்துள்ளது.

விசேடமாக மட்டக்களப்பு நகரில், கறுப்பு பொலித்தீன்களாலான பெரியபலூன்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அதே நேரம் துண்டுப்பிரசுரங்கள் பலவும் வெளியிடப்பட்டிருந்தன. சர்வ சாதாரணமாக மட்டக்களப்பின் பல பகுதிக-ளிலும் வாகனங்களிலும், உந்துருளிகளிலும் சென்றவர்களால் இத்துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன. இதுவும் ஒருவகையான எதிர்ப்பு நடவடிக்கையாகவே இருந்துள்ளது. அதே நேரம் தொலைபேசிகள் மூலமாக தமிழரசுக்கட்சியின் மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு மிரட்டல்களும் விடப்பட்டுள்ளன.

அனைத்துக்கும் மேலாக, மாநாடு நடந்து கொண்டிருந்த வேளையில், கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றிக் கொண்டிருந்த வேளை கிழக்குமாகாண சபைக்கு வாழ்த்துத் தெரிவித்தபடி தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவர் மண்டபத்துக்குள் நுழைந்து கூச்சலிட்டபடி வந்துள்ளார். அதனை விடவும் பிரேதப் பெட்டிஒன்றினை சுமந்தபடி ஒரு முச்சக்கர மோட்டார் வண்டியொன்று மாநாடு ஆரம்பமானது முதல் மாநாட்டு மண்டபப் பிரதேசத்தில் சுற்றித் திரிந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு பலவகைகளிலும் எதிர்ப்புகளைக் காட்டிக் கொண்டிருந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பினர், இயலாத நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் வருகை தந்திருந்த பஸ் வண்டி மீது கற்களால் தாக்குதல் நடாத்தியும் இருந்தனர்.

தொடர்ந்து கெடுபிடிகளையும், எதிர்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் கொடுத்தவண்ணமிருந்த நிலையிலும் மட்டக்களப்பில் தமது மாநாட்டினை நடத்திமுடித்த இலங்கை தமிழரசுக்கட்சியினர் வெற்றிக்களிப்பினை வெளிப்படுத்தி பத்திரிகை மாநாடு ஒன்றினையும் நடத்திமுடித்தனர்.

தமிழரசுக்கட்சியின் மாநாட்டுக்கு கொடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களும், துன்புறுத்தல்களும் அக்கட்சியின் மாநாட்டினை நிறுத்துவதற்காக நடத்தப்பட்டவையாக இருந்தபோதும் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் குறிப்பிட்டளவு தொகை மக்கள் மாநாட்டிருக்கு வருகை தந்தே இருந்தனர்.

அழைப்பு விடுக்கப்பட்டோ, ஆசைவார்த்தைகள் பொழியப்பட்டோ எமது கட்சியின் மாநாட்டுக்கு யாரும் வரவில்லை என மாநாட்டின் ஏற்பாடுகளை மேற்கொண்டு முடித்திருந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருந்தமை. அவர்களது விடாப்பிடியான உறுதியான செயற்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தது.

அந்த வகையில், தமிழ் தேசியத்தின் உறுதி-யினையும், அவர்களது பற்றினையும் வெளிப்படுத்துவதாகவும், ஈழத் தமிழ் மக்களின் ஜீவாதாரக் கோரிக்கைகளுள் ஒன்றான தாயகக் கோட்பாட்டை வடக்கு கிழக்கு பிரிப்பை வைத்து கலைத்துப் போட நினைக்கும் ஒவ்வொருவருக்கும் விழுந்த அடியாகவும் நிறைவுக்கு வந்திருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சியின் 14ஆவது தேசியமாநாட்டைக் கருத முடியும்.

மொத்தத்தில், வடக்கு கிழக்கு பிரிப்பு, கிழக்கு பிரதேச வாதம் என தம்முடைய பிழைப்புவாத அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தம்முடைய

இறுமாப்பினை விட்டுவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டிய தருணம் இதுவே என்பதே இந்த மாநாடு தரும் சேதியாகும்.

இது தமிழரசுக்கட்சியின் மாநாட்டுத் தீர்மானங்கள்
1. அர்த்தமுள்ள அதிகூடிய அதிகாரப் பகிர்வு ஊடாக வடகிழக்கு பிராந்தியத்தில் எமது மக்கள் தமது அரசியல், சமூக, பொருளா-தார, கல்வி, கலாச்சார அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆட்சியதிகாரங்கள் அவர்களுக்கு கையளிக்கப்பட வேண்டும். இப்படியானதொரு அரசியல் தீர்வு தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கப்பட்டும் கூட அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமையினால் இலங்கையின் தேசியப் இனப் பிரச்சனைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. மேலும் காலத்தை வீணடிக்காமல் இந்த அடிப்படையிலும் முஸ்லீம் மக்களது அபிலாஷை களை அங்கீகரிக்கும் வகையிலும் அரசியல் தீர்வொன்றுக்கு அரசாங்கம் இணங்க வேண்டும்.

2. வடகிழக்கு பிராந்தியத்தில் போர்ச் சூழலினால் இடம் பெயர்ந்த தமிழ், முஸ்லீம் மக்கள் அனைவரும் உடனடியாக மீண்டும் தங்கள் சொந்த இடங்களில் வீட்டு வசதிகளுடன் மீள்குடியேற்றப்பட்டு, புனர்வாழ்வழிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வாதாரங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டும். போரினால் நிர்க்கதியாக்கப்பட்ட வாழ்விழந்த பெண்கள் (தலைமை தாங்கும் பெண்கள்), பெற்றோரை இழந்த பிள்ளைகள், மாற்றுத்திறனாளர்கள் ஆகியோருக்கு புனர்வாழ்வும் மறுவாழ்வும் அளிக்கப்பட வேண்டும். இந்தக் கடமைகளின் மேற்கொள்வதற்கு மக்களால் ஜனநாயக ரீ-தியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட வேண்டும். இனமத அரசியல் பாரபட்சமின்றி நிதி ஒதுக்கீடுகள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பகிர்ந்தழிக்கப்பட வேண்டும்.

3. வடகிழக்குப் பிராந்தியம் இராணுவ மயமாக்கப்பட்ட நிலையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் மக்களின் நில உரிமை, வாழ்வாதார உரிமை என்பன சுதந்திரமாக செயற்படுத்தும் நிலமை உருவாக வேண்டும். மக்களின் அன்றாட வாழ்வில் இடையூறாக நிற்கும் இராணுவத் தலையீடு முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டும். இதே போன்று குடியியல் நிர்வாகத்தில் உள்ள இராணுவத் தலையீடு முற்றாக அகற்றப்பட வேண்டும். வடகிழக்கு பிராந்தியத்தில் தலைவிரித்தாடும் மக்களுக்கெதிராக மனித உரிமை மீறல்கள்









உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். வடகிழக்கில் தமிழ் மொழி தெரியாத சிங்கள இராணுவ ஆளுனர்கள், தமிழ் மொழி தெரியாத சிங்கள அரச அதிபர்கள், சிங்கள அதிகாரிகள் முற்றாக அகற்றப்பட வேண்டும்.

4. காணாமல் போயுள்ளவர்கள், சரணடைந்த பின் காணாமல் போனவர்கள் சம்மந்தமாக விசாரணைகள் நடாத்தப்பட்டு இவற்றுக்கு பொறுப்பாக உள்ளவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்குவதோடு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மரண சான்றிதல் மற்றும் பொருத்தமான நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும், அவசரகால சட்டத்தின் கீழும் தடுப்புக் காவலில் அல்லல் உறும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவருக்கும் 1970ஆம், 1980ஆம் ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட முன்மாதிரிகளைப் பின்பற்றி பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.

5. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினால் முழு நாடும் அல்லல்படும் சூழ்நிலையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வருமானம் வாழ்வாதாரங்களை இழந்த வடகிழக்கு பிராந்திய மக்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலான வழிவகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். வேலையற்றவர்களுக்கும், விசேஷமாக வடகிழக்கு பிராந்தியத்தில் வாழும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். பொதுச் சேவையில் 5 வீதத்திற்கு குறைந்திருக்கும் தமிழர்களின் எண்ணிக்கையின் காரணமாக தமிழ் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள். அதனால் பொதுச் சேவையில் அவர்களுடைய விகிதாசாரம் தேசிய விகிதாசார அடிப்படையில் தாமதமின்றி உயர்த்தப்பட வேண்டும்.

6. புலம் பெயர்ந்த தமிழ் மக்கள், தாயகத்திலுள்ள தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை உணர்ந்து தமிழ் மக்களுடைய நம்பிக்கையுள்ள பிரதிநிதிகள் முன்னெடுக்கும் செயற்திட்டங்களுக்கு அவற்றை அடைவதற்கு ஆதரவாக செயற்படுமாறு புலம் பெயர்ந்த உறவுகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். அத்தோடு மீள்குடியேற்ற விடயங்களில் எமது மக்களுக்கு வேண்டிய பொருள் உதவி, நிபுணத்துவ உதவி போன்றவற்றை ஒரு குறித்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் வழங்க முன்வர வேண்டும் என்ற வகையில் புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளுக்கான வேண்டுகொள் அமைந்திருந்தது.

7. இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மனித உரிமை பாதுகாப்பு சம்மந்தமாக சர்வதேச சமூகம் இதுவரை ஆற்றியிருக்கும் பங்களிப்புக்காக அவர்களுக்கு நன்றி சொல்லும் அதே வேளையில் தொடர்ந்து தமிழ் மக்களை வன்முறையிலிருந்து பாதுகாப்பதற்கும் தமிழ் மக்களின் மனித உரிமைகள், அரசியல் உரிமைகள் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் சர்வதேச சமூகம் தேவையான உதவிகளையாற்றி அதன் மூலமாக நாட்டில் நீதி, நேர்மை, கௌரவம், சமத்துவம் என்ற அடிப்படையில் விசுவாசமான புரிந்துணர்வும் சமத்துவமும் நல்லுணர்வும் ஏற்படுத்த வழி செய்ய வேண்டும்.

8. எம்மால் நியாயமான முறையின் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு எமது மக்கள் பரிபூரணமான ஆதரவை நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் அதே வேளையில் இவற்றை அடைவதற்கு இந் நாட்டின் சிங்கள, முஸ்லீம் சகோதரர்களும் ஏனைய முற்போக்கு சக்திகளும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

இலங்கையில் 2009 மேயில் முடிவடைந்த போரின்போது சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், உரிமைகள் மீறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா.செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்வின் சிபாரிசுகளின் படி குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு சர்வதேச விசாரணை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

9. இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பொறுப்புக்கூறும் கடப்பாடு தவிர்ந்த ஏனைய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்த வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 2012ஆம் ஆண்டு மார்ச் அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டால் நாட்டில் விசுவாசம், புரிந்துணர்வு ஏற்பட்டு கௌரவமான சமாதானம் ஏற்படும்.

10. சாத்வீகப் போராட்டத்துக்கு அறிவித்தல் விடுக்கும் வகையில் அமைந்த 10ஆவது தீர்மானத்தில், இந்த மாநாட்டில் இலங்கை அரசாங்கத்திடம் மிகவும் நியாயமான கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறோம். இவற்றை அரசாங்கம் மறுதலிக்குமாக இருந்தால் இந்த நியாயமான இலக்குகளை அடைவதற்காக நாம் காந்திய வழியில் வன்முறையற்ற சாத்வீக போராட்டம் ஒன்றை உரிய நேரத்தில் உரிய முறையில் ஆரம்பித்து அவற்றை அடையும் வரை போராடுவோம் என்று தெளிவாகவும் வெளிப்படையாகவும் தமிழ் அரசுக் கட்சியின் 14வது தேசிய மாநாடு உறுதியுடன் அறிவித்தல் கொடுக்கிறது.

# Importas
## Cash & Carry

Subash Purity of Taste

KFL Kings

BRAND Niru

SURYAA

Maliban
Inspired by goodness...

ELAKKIA

PG tips

TRS ASIAS FINEST FOODS

PATAK'S Original

Rubicon

RENUTÉ

SOLO IMPORTERS & DISTRIBUTOR FOR
**SUBASH, KINGS, NIRU, SURYAA, MALIBAN, ELAKKIA AND RUBICON**

**OVER 20 YEARS LEADER IN SWISS ETHNIC MARKET**

**BIGGEST ASIAN SHOP IN ZÜRICH**

*Importas Cash & Carry*
*(80m away From Letzi Park)*
*Baslerstrasse 102*
*8048 Zürich*

*Tel: +41 43 343 03 55*
*Fax:+41 43 343 03 56*
*Email: info@importas.ch*
*Web: www.importas.ch*

# மீண்டும் நகைச்சுவையை நோக்கி...

வி.சபேசன்

இந்த ஆண்டில் பெரிய இலாபத்தை பெற முடியாமல் தவித்துக் கொண்டிருந்த தமிழ் சினிமாவிற்கு அண்மையில் வந்த இரண்டு படங்கள் நல்ல இலாபத்தை கொடுத்திருக்கின்றன. இதில் குறிப்பிட வேண்டிய விடயம் இரண்டும் நகைச்சுவையை மட்டும் நம்பி எடுக்கப்பட்ட படங்கள். "ஒரு கல் ஒரு கண்ணாடி" மற்றும் "கலகலப்பு" ஆகிய இரண்டு படங்களுமே அவைகள்.

இதிலே "ஒரு கல் ஒரு கண்ணாடி" படத்திற்கு தமிழக அரசு வரி விலக்கு அளிக்கவில்லை. கலைஞர் கருணாநிதியின் குடும்பத்தினர் தயாரித்ததாலும், அவருடைய பேரன் உதயநிதி ஸ்டாலின் கதாநாயகனாக நடித்ததும்தான் இதற்குக் காரணம். வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தால் இலாபம் மேலும் அதிகரித்திருக்கும்.

தமிழ் சினிமா ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வகையான படங்களை அதிகமாக தந்து கொண்டிருக்கும். இந்த இரண்டு படங்களும் தந்த வெற்றி தமிழ் திரைப்படத்துறையினருக்கு மீண்டும் நகைச்சுவைக் கதைகளை படமாக்கும் எண்ணத்தைக் கொடுத்திருக்கிறது.

எண்பதுகளின் ஆரம்பத்தில் பார்த்தால் கிராமப் படங்களாக இருந்தாலும், நகரப் படங்களாக இருந்தாலும் அது பெட்டிகள் அடுக்கப்பட்டிருக்கும் இடத்தில்தான் முடியும். அந்த இடத்தில் கதாநாயகனின் குடும்பத்தை சேர்ந்த யாராவது ஒருவரை வில்லன் கட்டிப் போட்டிருக்க, அந்தப் பெட்டிகளை உடைத்துக் கொண்டு கதாநாயகன் பறந்து வந்து சண்டை போடுவார். சண்டை முடிய பொலிஸ் வந்து வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுடும்.

எண்பதுகளின் மத்தியில் தமிழ் சினிமா கதாநாயகனிடம் தூக்கி இயந்திரத் துப்பாக்கியை கொடுத்து விட்டது. அத்தோடு லெதரில் செய்யப்பட்ட கருப்பு ஆடையையும், அதிலே தொங்குகின்ற குண்டுகளையும் சேர்த்தே கொடுத்தது. அந்தக் காலத்தில் பிரபலமாக இருந்த அனைத்துக் கதாநாயகர்களுமே இந்தத் தோற்றத்தில் ஒரு முறையாவது வந்திருப்பார்கள்.



கிராமத்தில் இருந்து வந்த கதாநாயகனுக்கும் இயந்திரத் துப்பாக்கியால் சுடத் தெரிந்திருக்கும். இயந்திரத் துப்பாக்கியால் கண்ணில் படுகின்ற அனைத்தையும் கதாநாயகன் சுட்டுத் தள்ளுவார். இப்பொழுது அவைகளை எல்லாம் பார்க்கின்ற பொழுது பெரும் நகைச்சுவையாக இருக்கும்.

எண்பதுகளின் மத்திக்கு பிற்பாடு தமிழ்சினிமா இயந்திரத் துப்பாக்கியை விட்டுவிட்டு கிராமத்துப் படங்களுக்கு தாவியது. ஒரு பத்து ஆண்டுகள் தமிழ் படங்களில் கிராமத்தின் ஆதிக்கம்தான். கரகட்டக்காரன், சின்னத்தம்பி, சின்னக் கவுண்டர் என்று அன்றைக்கு பெரும் வெற்றி பெற்ற படங்கள் எல்லாமே கிராமத்துப் படங்களாகவே இருந்தன.

பெரும்பாலான கிராமத்துப் படங்களில் பஞ்சாயத்தும், ஆலமரமும், செம்பும் தவிர்க்க முடியாமல் இடம் பெற்றிருக்கும். அனைத்துப் படங்களிலும் எட்டுப்பட்டி என்று வசனமும் இருக்கும். அந்த நேரத்தில் அனைத்துக் கதாநாயகர்களுமே கிராமத்துப் படங்களில் நடித்து முடித்தார்கள்.

பின்பு தொண்ணூறுகளில் கிராமத்துப் படங்களில் இருந்து நகரத்து நகைச்சுவைப் படங்களுக்கு தமிழ் சினிமா மாறியது. உள்ளத்தை அள்ளித்தா போன்ற படங்களின் பெரு வெற்றி தமிழ் சினி-மாவை அப்படியே நகைச்சுவைப் படங்களை நோக்கித் திரும்பச் செய்தது.

ஆயினும் "ஆள்மாறாட்டம்" என்கின்ற ஒரு விடயத்தையே தமிழ் சினிமாவின் நகைச்சுவை சுற்றிச் சுற்றி வந்தது. ஒரு நேரத்தில் இதுவும் அலுத்துப் போனது.

அந்த நேரத்தில் காதல் படங்கள் வெற்றி அடையைத் தொடங்கின. படத்தின் முடிவில் உணர்ச்சிகரமாக காதல் வசனம் பேசுவதோடு தொடங்கிய படங்கள் கடைசியில் நாக்கை அறுப்பது, உடலின் பாகங்களை கொடுப்பது என்று வந்து நின்றது. கடைசியில் கொடுப்பதற்கு எதுவும் இல்லாமல் போ-னதால் காதல் படங்களுக்கான மவுசும் போய் விட்டது.

அதன் பிறகு காதல் வசனங்களை விட்டு விட்டு கதாநாயகர்கள் கையில் அரிவாளைத் தூ க்கிக் கொண்டு பஞ்ச் டயலாக் பேசத் தொடங்கினார்கள். பேரரசு, ஹரி போன்ற இயக்குனர்களின் வரவு தமிழ் சினிமாவை வன்முறையை நோக்கித் திருப்பியது.



"என் பேச்சை நானே கேட்க மாட்டேன்" மாதிரியான பஞ்ச் டயலாக் எல்லாம் வந்து போனது. கதநாயகன் தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருப்பதும், திடீரென்று எதிர்பாராத விதமாக ஒரு தாதாவோடு மோத வேண்டி வருவதும் என்று இந்த வரியை வைத்துக் கொண்டே தமிழ் சினிமா சுழலத் தொடங்கியது.

தற்போதயை முன்னணி நாயகர்களாகிய விஜய், அஜித், சூர்யா, விக்ரம் என்று எல்லோரும் பஞ்ச் டயலாக் பேசி விட்டார்கள். சிம்பு, தனுஸ் கூடப் பேசி விட்டார்கள்.

நீண்ட காலமாக கிராமத்தையே மறந்து போயிருந்த தமிழ் சினிமாவிற்கு பருத்திவீரன் அதை ஞாபகப்படுத்தியது. பருத்திவீரன் போன்று படங்களை எடுப்பதற்கு சிலர் முயன்று தமக்குத் தாமே சூடு வைத்துக் கொண்டார்கள்.

பாலா, அமீர், சசிக்குமார் போன்றவர்கள் தமிழ் சினிமாவிற்கு வித்தியாசமான படங்களை தந்து கொண்டிருக்க, சதாரண மசாலப்பட இயக்குனர்கள் இலகுவான வெற்றியை பெறுவது எப்படி என்று சற்று மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார்கள்.

இப்படி இனி என்ன பாதையில் பயணிப்பது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்த இவர்களுக்கு "ஒரு கல் ஒரு கண்ணாடி" மற்றும் "கலகலப்பு" போன்ற படங்களின் வெற்றி மீண்டும் நகைச்சுவையை நோக்கி கையைக் காட்டி விட்டிருக்கிறது.

இனி பெரும் சிரிப்புச் சத்தங்களை திரையரங்குகளில் கேட்கலாம்.



# வடக்கு மக்களின் வயிற்றில் அடிக்கும் வங்கிகள்!

கதிரவன்

போர் முடிந்ததும் போட்டி போட்டு உலகின் முன்னணி வங்கிகள் தமது கிளைகளை வடக்கில் நிறுவின. புதிய பல கட்டிடங்கள் மூலைக்கு மூலை எழுந்தன. அடடா இதுவன்றோ மகிந்தரின் நாட்டைக் கட்டி எழுப்பும் திட்டம் எனப் பலரும் போட்டி போட்டுப் பாராட்டும் வழங்கினர்.

போரினால் அழிவுற்ற மக்களின் வாழ்வியலில் வணிக வங்கிகளால் என்ன பயன் கிடைக்க முடியும் என எவரும் நினைத்துப் பாரக்கவில்லை. உழைக்கும் வயதில் உள்ள மக்கள் போரில் கொல்லப்பட்டும் ஊனமுற்றும் உழைக்கும் திறன் இழந்த மக்களிடம் வணிக வங்கிகளுக்கு என்ன வேலை? இரத்த வங்கி தேவையான மக்களுக்கு வெளிநாட்டு வங்கிகள் எதனைக் கொடுக்க முடியும்?

வேலை செய்யக் கூடிய மக்களுக்கும் அவர்களின் வழமையான விவசாயம் மீன்பிடித்தல் போன்ற தொழில்களைச் செய்ய இராணுவமும் கடற்படையும் பல தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ள நிலையில் இப்படியான கேள்விகளை எந்த ஒரு ஆய்வாளரும் கேட்கவில்லை. யாழில் வளம் முற்றாக முடக்கப்பட்ட நிலையில் வங்கிகளுக்குப் பணப் புழக்கம் எப்படி எங்கிருந்து கிடைக்கும்? இப்படியான கேள்விகளை எந்த ஒரு ஆய்வாளரும் கேட்கவில்லை.

எந்த விதமான வங்கி வேலைக்கான வாய்ப்புகளும் இல்லாத நிலையில் ஒரு சிறு பிரதேசமான குடாநாட்டில் 114 கும் மேற்பட்ட வங்கிக் கிளைகள் செயற்பட வேண்டும் என்றால் அந்த வங்கிகள் என்ன உத்தரவாதத்தில் தொடங்கப்பட்டன என எவரும் கேட்கவில்லை. ஏதோ யாழ் மக்களுக்குச் சீனி மிட்டாய் வழங்க வந்தவர்கள் என்றா எடுத்துக் கொள்வது?

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் போரினால் அடிபட்டுக் கிடந்த மக்களின் இரத்தத்தைக் குடிக்க வந்த இரத்தக் காட்டேரிகள் இவை என்பதை யாரும் ஏற்கத் தயாராக இல்லை என்றாலும் நடைமுறையில் அவை அப்படித்தான் என்பதே உண்மை.

இந்த வங்கிகள் தமிழருக்கு விமோசனம் வழங்க வரவில்லை. மாறாக அந்த மக்களின் புலம் பெயர் உறவுகளின் உழைப்பினை உறிஞ்சவே வந்தன. மகிந்த தலைமையிலான அரசு விடுதலைப் புலிப் பயங்கரவாதத்தால் அவல நிலையில் உள்ள உறவுகளை மீளக் கட்டி எழுப்ப வேண்டிய கடப்பாடு எந்தப் புலம் பெயர் சமூகம் போருக்குப் புலிகளுக்கு உதவியதோ, அதே புலம் பெயர் சமூகம் போரின் அழிவுக்கும் உதவ வேண்டும் என்ற வக்கிரமான வாதத்தின் அடிப்படையில் வங்கிகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது.

வெளி நாடுகளை மீள் கட்டுமானப் பணிகளுக்கு உதவ அனுமதித்ததே அல்லாது மக்களின் மீழ் குடியேற்ற மற்றும் மக்கள் நலப் பணிகளுக்கு உதவி செய்ய விடாது தடுத்தது. மீறி இந்தியா போன்ற நாடுகள் வழங்கிய நிதிகள் கருவிகள் பொருட்களையும் தமிழருக்குக் கொடுக்காது தென்னிலங்கைக்கும் சிங்களவருக்குமே கொடுத்தது.

வாழ்வாதாரத் தேவைகளுக்காக வங்கிகள் மூலம் கடன்களை வழங்கி சந்தைப் பொருளாதாரத்தை வளர்த்து மக்களின் ஆசைகளைப் பெருக்கி அவர்களைக் கடனாளியாக்குவதில் இந்த வங்கிகள் வெற்றி கண்டு விட்டன. போரினால் சேதமான வீடுகள் கட்டிடங்களைத் திருத்த மக்களுக்குக் கடன் வழங்கின. அதே நேரத்தில் சேமிப்புப் பழக்கத்தில் ஊறிப்போன யாழ் மக்களின் சேமிப்பையும் தமது மூலதனமாக்கி இந்த வங்கிகள் தமது தொழிலைப் பெருக்கின.

மூன்று வருட முயற்சியின் பல-னாய் இன்று இந்த வங்கிகள் தமது வேலையைக் காட்டக் கிளம்பி விட்டன. அண்மையில் வங்கிகள் கடன்கள் மீதான வட்டி விகிதத்தை இந்த வங்கிகள் உயர்த்தி விட்டனவாம். தற்காலிகக் கடன்கள் மீதும் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால் வர்த்தகர்கள் கலக்கம் அடைந்துள்ளனராம். இனி உறவுகள் என்ற முறையில் புலம் பெயர் சமூகத்தின் உழைப்புகள் இந்த வங்கிகளின் கைகளுக்குள் நாளாந்தக் கந்து வட்டியாக மாறிப் போகும்.

கடன் சுமையால் ஈழத் தமிழினம் மேலும் வதைபடும். வங்கிகளின் சுரண்டல் வரம்பு மீறிப் போகும். சிங்களம் தான் கொள்ளை அடித்தது போக அந்நிய வங்கிகள் மூலமும் கொள்ளை அடிக்கிறது. ஈழத் தமிழா உனக்கு இந்த வதை போதுமா? இன்னும் வேண்டுமா?

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் - திதியும்

# நிவேதன் அருந்தவராஜா

*25.01.1991 - 10.07.2010*



*ஜெர்மன் - கிறீபீல்ட் நகரின் நயில்நதி ஆற்றிக்கு கனலாகி வந்ததோ ஆண்டு இரண்டு! நீ வீட்டை விட்டு வெளியே செல்லும் போது அப்பா அம்மா போயிற்று வாறன் என்று சொல்லிப்போவது உன்பழக்கம் ஆனால் நீ போய் என்னும் வீடு திரும்பல்லயே எம்மகனே நிவேதன்! ஆண்டிரண்டுதனில் எத்தனையோ மாற்றங்கள் வந்தபோதிலும் நீ மட்டும் எம்வீட்டுசுவர்களில் நாலாபக்கமும் நிலையான நிழற்படங்களாக நிற்கையில் எம் இதயம் அணலாய் துடிக்கிறதே! தம்பி நிவேதன்.*

*உன்னை நாம் நாட்டுப்பற்று மொழிப்பற்று பண்பாடு ஒழுக்கம் என்பதை ஊட்டி வழத்தோமடா நீ நாடறிந்தாய்! தாய்மொழியறிந்தாய் பண்பு பாசமறிந்தாய் கலை கலாச்சாரமறிந்தாய் பெரியோரை மதித்தாய் தவத்தின் மகன் என்று சொல்வதை விட்டு நிவேதனின் அப்பா என்று சொல்லவைத்தாய் என்மகனே நிவேதன்!*

*தோழுக்கு மேல் வளர்ந்து விட்டால் தோழன் என்பதுபோல நீ அப்பாவுக்கு மேலாக வளர்ந்து விட்டாயே எனி எமக்கேது குறையென்று எண்ணிய எமக்கு இப்படியா தண்டனையப்பா?*

*நிலவாய் நீ இருந்த இடமெல்லாம் முகில் சூழ்ந்து நிக்குதடா! எங்கு பார்த்தாலும் உன் உருவம் நிழலாய் தோன்றுதடா தம்பி நிவேதன்! உன்னை கனவில் கண்டதும் ஓடிவருகின்றோம் ஆனால் உன்னை அணைக்கத்தான் முடியவில்லையே நீ ஓடிமறைகின்றாயே எம்செல்வமே!*

*நாம் நித்தம் உனை நினைத்து கலங்குகின்றோம் எம்மை கலங்கவைத்து விட்டு நீ எங்கே சென்றாய் தம்பி? நீ மட்டும் நிம்மதியாய் உறங்குகின்றாய் நாம் உறக்கத்திலும் உன்னை நினைத்து கதறி அழுகிறோமடா அதுவும் உன் காதில் ஒலிக்கலையா தம்பி?*

*காலம் ஓடி மறைந்தாலும் எம் மகனே எம் உடலில் உயிர் உள்ள வரையும் நாம் உனை நெஞ்சில் சுமந்து வாழ் நாளை கழித்திடுவோமடா எம் தெய்வமே நிவேதன்!*

*உன் துயரை சுமந்து தவிக்கும் அப்பா அம்மா அக்கா மற்றும் அப்பப்பா அப்பம்மா உற்றார் உறவினர்கள்.*

*தொலைபேசி. ஜெர்மனி : 0049.2151397383 - 004915773501234*


MEDIA ASIA
Another Home of Southasian Channels

For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.

www.mediaasia.in

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈ.ழம்?

## பாகம் 5

அன்புச்செல்வன்

உலகின் முதல் மொழி தமிழா? இக்கேள்விக்கான விடையை பல்வேறு ஆய்வாளர்கள் பல்வேறு கோணங்கில் ஆய்வு செய்து கண்டு சொல்லி வருகின்றனர். விடை தமிழ் என ஊகித்தறிய முடிந்தாலும் அறிவு பூர்வமாக தர்க்கரீதியாக யாரும் ஒரு பதிலைக் கொடுத்து விட முடியாது.

காரணம் பல் வேறு இன மத கலாச்சார தேசத்து மக்கள் தமது மொழியே மூத்தது என்பதை உறுதிப்படுத்த முயன்று வருகின்றனர். ஆனால் தமிழுக்குப் போதுமான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்று வரும் நிலையிலும் தமிழ்தான் உலகின் மூத்த முதல் மொழி என அறுதியாகவும் உறுதியா-கவும் நிரூபிப்பது எவருக்கும் முடியாத காரியம்.

எனவே இதுபற்றிப் பலரும் ஆய்வு செய்து கூறும் கருத்துகளைத் தெரிந்து கொள்வதன் மூலம் தமி-ழின் தொன்மை பற்றித் தமிழராகிய நாம் பெருமையும் இறுமாப்பும் தமிழைப் படிக்கும் ஆர்வத்தையும் பெற முடியும். எனவே இப்போதைக்கு கேணல் ஜேம்ஸ் சேர்ச் வார்ட் என்பவர் எழுதிய நூலின் தொகுப்பை கவனத்தில் எடுப்போம்.

கேணல் ஜேம்ஸ் சேர்ச்வாட் என்பவர் எழுதிய நூலின் சில பகுதிகளை யூ ரியூப்பில் தந்துள்ளார்கள். அதன் பிரகாரம் ஒரு தடவை அந்த வயதான துறவி மிகப் பழமையான கோவிலைப் பற்றியும் அது தொடர்பான வரலாற்றுக் கதைகளையும் சொல்லி இருந்தார்.

ஏசு நாதர் இமய மலைச் சாரலில் வாழ்ந்த பொழுது "மூ" என்ற மக்கள் பற்றியும் அவர்களது எழுத்துக்களைப் படித்தது பற்றியும் அவர் வேதாகமமான புதிய ஏற்பாட்டில் ஏசுநாதர் இயற்கைச் சக்திகளின் எசமானாக விளங்கினார் எனவும் ஆதிச் சமயம் பற்றிய பூரண அறிவு கொண்டிருந்தார் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர் "மூ" மக்களின் மொழியை அறிந்திருந்தார் எனக் கூறவில்லை. (பல கிருஸ்தவ மக்கள் ஏசுநாதர் இமயமலைச் சாரலில் வாழ்ந்தார் என்ற ஆய்வாளர்களின் கூற்றையே மிக வன்மையாக எதிர்க்கின்றனர் என்பது வேறு விடயம்.)

அவருக்கு அந்த (மூ மக்களின்) மொழி தெரிந்தது என்ற உண்மை அவர் சிலுவையில் ஆணி அறையப்பட்ட பொழுது அவர் உதிர்த்த கடைசி வார்த்தைகள் காட்டுகின்றன. 'எலி, எலி, லாமா சபே தா நீ. என்ற சொற்கள் ஹீபுருவோ அல்லது ஏசுவின் காலத்தில் அந்தப் பிரதேசத்தில் உள்ள வேறு எந்த மொழியுமோ அல்ல.

அந்த மொழி "மூ" மக்களின் தாய் நிலத்தில் பேசப்பட்ட மொழியின் அசல் வடிவம். ஆனால் தவ-றான உச்சரிப்புடன் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டு விட்டது.

உண்மையில் அது "ஹெலே, ஹெலே, லமற் ஷபக் ர நீ என்பதாக இருக்க வேண்டும். அதன் விளக்கம் ஹெலே" மயக்கம்:, லமற் ஷபக் ர நீ - எனது முகத்தை இருள் மூடுகிறது என்பதாகும்.

கவுதமாலாவின் மாயா மொழி அறிஞர் டொன் அன்ரோனியோ பத்திரஸ் யொ-ருகுய் தமது "மத்திய அமெரிக்க வரலாறு" என்ற புத்தகத்தில் ஏசுநாதர் கடைசி நேரத்தில் சிலுவையில் பேசிய வார்த்தைகள் மாய இனத்தவரின் மிகப் பழைய மொழி என எழுதி உள்ளார்.

கேணல் ஜேம்ஸ் சேர்ச்வாட் அவர்களும் இதனை மொழி பெயர்த்துள்ளார். இரண்டுக்கும் இடையே உள்ள சிறிய வேறு பாட்டுக்குக் காரணம் சேர்ச் வாட் இந்துக்களின் நாக மாயா மொழியிலிருந்தும் யொருகுய் பிற்காலத்தைய மத்திய அமெரிக்க மாயா மொழியில் இருந்தும் மொழி மாற்றம் செய்தமையே.

இரண்டு இடங்களும் காலத்தாலும் இடத்தாலும் பெரிதும் வேறு பட்டிருந்தாலும் இருவடைய மொழி பெயர்ப்புகளும் முக்கியமான விடயங்களில் ஒருமித்து உள்ளன. இக்காணொளித் தொகுப்பு 2008ல் வெளியானது. இதற்கும் ஈழத்துக்கும் என்ன தொடர்பு?

இக்கூற்றுகளின் பிரகாரம் தென்அமெரிக்க மாயா மக்களின் மொழியும் கலாச்சாரமும் இந்துக்களின் நாகர் கலாச்சாரமும் ஒரே மூலத்தைக் கொண்டு உருவானவை என்பது புலனாகிறது.

யார் இந்த மூ எனப்பட்ட மக்கள் இவர்களுக்கும் இந்து நாக மாயா என குறிக்கப் பட்ட மக்களுக்கும் என்ன தொடர்பு? யார் இந்த மூ மக்கள் என்ற விபரங்களை அடுத்த தொடர்களில் வாசகருக்குத் தரவுள்ளோம்.(தொடரும்)

## மகிந்தர் குடும்பத்தில் குடிப்பமா?



அடுத்த தலைமை யாருக்கு என்ற போட்டி ஐயா இருக்கும் போதே ஆரம்பம் ஆகிவிட்டதாம். அதிர்ஷ்டம் யாருக்கு? தம்பி பசிலுக்கா தனயன் நாமலுக்கா? ஆனால் அப்பா தேடிய தேட்டம் மகன் நாமலுக்கே என அம்மா ஷிராந்தி ஆக்குரோசப் படுகிறாராம். அதன் முடிவே மகன் நாமலின் அரசியல் ஏற்றம் இன்னும் சில மாதங்களில் அம்பலத்துக்கு வருமாம். கிடைத்தது போதும் என்று இப்போதைக்கு கோத்தபாயா உள்ளாராம். இத்தனை சிக்கலுக்குள் வீட்டைப் பார்ப்பதா நாட்டைப் பாரப்பதா என்ற குழப்பத்தில் அப்பா! அப்பப்பா கண்ணைக் கட்டுதே என்கிறாராம்!





எங்கள் மலிவு விற்பனையில் நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் திருமணபட்டுப்புடவைகள், பட்டு வேஸ்டிகள், மற்றும் புத்தம் புதிய பஞ்சாபி வகைகள், சோளிஹறிட் வகைகள், சீகுயின்ஸ் சாறிகள், புதிய RAJGURU (2012) சாறிகள் மற்றும் சிறுவர்களுக்கான கோட், சூட், சேட், சர்வாணி வகைகள் அனைத்தும் நீங்கள் இதுவரையில் எங்கும் பெற்றுயிருக்காத வகையில் மிகுந்த மலிவு விலையில் கொள்வனவு செய்ய ஒரே சந்தர்ப்பம் ஒரே இடம்... அது அபிரா டெக்ஸ்டைல்.

வெது ஆண்டில் அபிரா டெக்ஸ்டைல்

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

## என்.எஸ். ஜுவலரி

**Neugasse 58**
**8005 Zürich**
**Switzerland**

Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
info@nsjewellery.com

தாலி மற்றும்
பொன்னுருக்குதல்
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்!

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நவீன உயர்தர டிசைன்களில் நகைகளும், திருமண ஆபரணங்கள், ஓடர்நகைகள், திருத்த வேலைகள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

தாலிக்குப் பொன்னுருக்குதல், காது, மூக்குக்குத்துதல் போன்ற நல்ல காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வருடமும் தை மாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100CHF என 12 மாதம் 1200CHF. இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.






# புது யுகம்

இரா. அருணாச்சலம்

தங்கம்மா பாட்டி வழமை போல் இன்றும் நடந்தாள். கண்களைக் கருக்கும் கானல் வெயில், முக்காட்டை இழுத்து விட்டுக்கொண்டு, இடுப்பில் ஏற்றிய சுமையுடன், வறுத்துக்கொட்டிய புழுதி மண்ணை அழுத்தி மிதித்தவாறு ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நடந்தாள். பாட்டிக்கு வயது 78 , 80 என்றாலும் சாரீரம் திடமாய்த்தான் இருந்தது. மூப்பினால் ஏற்பட்ட களைப்பும், இளைப்பும் வீட்டிற்கு போன பின் தானே தெரியும். சிறுவர்கள் பாடைசாலை முடிந்து ஓடிக்கொண்டிருந்தார்கள். மழையும் வெயிலும் மனிதனை விரட்டுகின்ற அவலம். இயற்கை மட்டுமா? சிங்கள இராணுவமும், பகல் கொள்ளையர்களும்தான்! இவைகளை எண்ணிப் பார்க்க, பாட்டிக்கு சிரிப்பும் கவலையும் சேர்ந்து வந்தது. அவளுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டா. வெள்ளமாய் பெருகிய வாழ்வின் கழிப்பிலும், பின் திடீரென வரண்ட பாலை வனமாய் மாறிப்போன வாழ்க்கை. வெள்ளம், மழை, வெயில், நோய், வறுமை, இராணுவக் கெடுபிடி, இது மட்டுமா? இன்னும் எத்தனை இடப்பெயர்வுகள். கைதடியில் ஆரம்பித்து வன்னியில் சில காலம். வன்னியில் ஆரம்பித்து வவுனியா வரை எத்தனை சிரமங்கள், கறும வேதனைகள், மாறி மாறி இழப்புக்கள்- இன்னமும் முடிந்த மாதிரியில்லை. மீண்டும் வன்னியில், புதுகுடியிருப்பில் மீள் குடியேற்றம். சிறிய குடில் அமைத்து நாலு பேர்- அக்குடிசையில் வாழ்ந்து வருகிறார். என்ன கொடுமை என்றால் மூத்த மகளிற்கு கண் பார்வை முள்ளிவாய்க்காலில் தொலைந்து விட்டது. மருமகனை இராணுவத்தினரர் அடித்தே அங்கயீனமாக்கிவிட்டனர். சின்ன பேத்தி, அவள் சித்தம் கலங்கிய சிறு மலர். மூத்த பேத்தியை இராணுவத்தினர் அழைத்துச் சென்றார்கள். ஆறு மாதங்களாக தேடினோம். காணாமல் ஓய்ந்த பின், அவளாகத்தான் ஒரு நாள் தொடர்பு கொண்டாள். சென்ற வாரம் ஓர் கடிதம் மூலமாக. மட்டக்களப்பில் ஓர் முகாம் ஒன்றில் விட்டிருப்பதாக.

உண்மை சரியாகத் தெரியாது, ஏதோ நடப்பதை பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். அப்படியே போகங்கள் விரைந்தோடியது. பாட்டியும் தன்னால் முடிந்தவரை பக்கத்து பெரிய காணிக்காரரிடம் கூலி வேலைக்குப் போய்த்தான் நாலு பெயரும் சாப்பிட வேண்டும். அப்பப்ப கொஞ்ச பணம் அனுப்புவாள் பேத்தி. யாரோ ஒரு புண்ணியவான், வெளி நாட்டிலுள்ள ஒருவர் உதவி செய்வதாகவும், அதில் மிச்சம் பிடித்து அனுப்புவதாகவும் எழுதியிருந்தாள். அந்தப்பணத்தால் பாட்டியிற்கு ஓரளவு உதவியாக இருக்கும். இன்றும் அப்படித்தான் பெரிய பேத்தியிடமிருந்து பதிவுத்தபாலும், மூவாயிரம் ரூபாய் காசும் வந்திருந்தது. அதை எடுப்பதற்கு புதுகுடியிருப்பு சந்திக்கு புறப்பட்டாள். பாட்டியின் பொன் நிற மேனியில் அதிக நிறப் பேதம் காட்டாது , நார் பட்டுப் புடவை காற்றில் படபடத்து, புடவையால் இட்ட முக்காட்டில் விழிம்பெல்லாம் குத்துக்குத்தாய் தலைகாட்டும் லேசான கிழிசல்கள். வயதான பின் வளர்ந்து சுருண்ட வெள்ளி முடியால், சுருட்டி ஒரு கொண்டை போட்டிருப்பாள். நெற்றியின் வியர்வையால் நனைந்த விபூதிப்பூச்சு அதுவும் அவளின் ஏழ்மையை சுட்டிக்காட்டும். பாட்டி நடந்த களைப்பில் வீதி ஓரமாக நின்ற பலா மரத்தின் நிழலில் சிறிது உட்கார்ந்தாள். கடந்த காலம் பாட்டியின் நினைவில் பிறந்தது. தனது மூத்த மகள் சந்திராவின் வாழ்க்கை சுரந்தது. அவள் திருமணக் கோலம் பூண்டு, பத்தே மாதங்களில் தரித்திருந்த சுமங்கலி வேடத்தை நாடக பூச்சை கலைப்பது போல், கலைத்து விட்டு பெரும் சோகமாய்க் கதறிக் கொண்டு தன் மடியில் வந்து வீழ்ந்து, குமுறி அழுத நாள் இன்னமும் அவளின் கண்களில் தங்கிக் கொண்டே இருந்தது. அந்த நாளே தனது வாழ்க்கையில் நிகழ்ந்த கடைசி சோகமாய், அவளை தாங்கிக் கொண்டாள். தனது ஒட்டுதலில் அவளை இருத்திக் கொள்வதிலே தன் கடமையாக ஏற்றுக் கொண்டாள். அவளுக்கு பிறந்தவள்தான்- பிரியா.

அவள் அனுப்பிய பதிவுத்தபாலைத்தான் எடுக்கப் போகிறாள் தங்கப்பாட்டி.

ஓய்வில் ஒதுங்கிய நினைவைத் துரத்திவிட்டு மீண்டும் நடந்தாள். கொழுத்தும் வெயில்தான், இருந்தும் அந்த மரங்களை தடவி வரும் காற்றில் ஒரு வித குளிர்மை. பாட்டிக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அள்ளி கொடுப்பதும் பறிப்பதுமாய் இருந்தது.

ஒரு மயிலுக்கு குறைவான தூரம், அரை மணி நேரத்தில் நடந்து வீட்டிற்கு வந்தாள் பாட்டி. வந்து நின்றதை யாரும் கவனிக்காத போது கம்பிக் கதவின் நாதாங்கியை லேசாக ஓசைபடுத்த வேண்டியாயிற்று, அந்தச் சிறு ஒலியில் வீட்டின் பின் புறமாக இருந்து வானத்தை பார்த்துக் கொண்டிருந்த சின்ன பேத்தி திரும்பிப் பார்ப்பதை பின் வாசலூடாக பாட்டி அவளை பார்த்து செய்கையால் அழைத்தாள். பாட்டியின் பாசை மட்டும்தான் அந்த பிஞ்சு மனசுக்கு புரியும். மெதுவாக எழுந்து வந்து பாட்டியின் முகத்தில் தன் முகத்தை புதைத்துக் கொண்டாள். அவளின் செல்லக் குழைவில் பாட்டிக்கு நடந்து வந்த களைப்பெல்லாம் பனியாய்க் கரைந்து விட்டது. "யாரு அம்மாவா? வந்திற்ரீங்களா? என்னவாம், அந்த படிவுக்கடிதம் ?" என்று தூரத்திலிருந்தே வினாவினாள் பார்வையைத் துலைத்த மகள். "என்னமோ தெரியாது நானும் இனித்தான் பார்க்கப்போகிறேன்" என்று கூறியவாறு, கடிதத்தை பிரித்துப் பார்த்தாள் பாட்டி. அந்த வயதில் கூட பாட்டிக்கு கண்பார்வை துரிதமாக இருந்தது. வந்த கடிதம் மூத்த மகள் பிரியாவின் என்றறிந்தாள்.

"என் அன்புக்குரிய பாட்டி! அன்ரி அம்மா, சித்தப்பா, தங்கை குமுதா அனைவருக்கும் நான் நல்ல சுகம். நிற்க இந்த கடிதத்தை எழுதுகையில் ஆறு மாதங்கள் யோசித்து தீர்மானமான ஒரு முடிவிற்கு வந்த பின், தெளிந்த மனதோடுதான் எழுதுகிறேன். இந்தக் கடிதத்திற்கு பிறகு உங்களிற்கும் எனக்கும் கடிதப் போக்குவரத்து முகபோவனவோ கூட அற்றுப்போகலாம், என்பது தெரிந்தே எழுதுகிறேன். எங்களை ஒரு கிராமத்தில் குடியமர்த்தியிருக்கிறார்கள். அந்த கிராமத்து எல்லைக் காவலாளியாக கடமை புரியும் ஒருவரை, வருகிற புதன் கிழமை பதிவுத் திருமணம் செய்துகொள்ள நிற்சயித்து விட்டேன். நான் ஏற்கனவே நாலு மாதம் கற்பமாக இருப்பது தெரிந்தும் என்னை திருமணம் செய்வதாக முன்வந்துள்ளார். இருந்தும் இது பாபகரமான காரியம் என்ற ஓர் அர்த்தமெற்ற உணர்ச்சியோடு போராடித்தான் இம் முடிவுக்கு வந்தேன். உணர்வு பூர்வமான வைதல்ய விரதத்திற்குக் ஆட்படமுடியாமல் வேசம் கட்டியிருந்து பிறகு அவப்பெயர்க்கு.

ஆளாகிக் கொள்வதையும், அவமானப் படுத்தாமல் இருப்பதே சிறந்த ஒழுக்கம் என்று உணர்ந்திருக்கின்றேன். இந்த இருபது வயதில் இவ்வளவு பெரிய சோதனைகளையே தாங்காமல் இன்னும் ஐந்தாண்டுகளிற்குப் பின் இதே முடிவிற்கு வர நேரிடுமே என்று உள் மனதில் ஒரு பயம் பிறந்தது. அதனால் இதுவே சரி என்று முடிவுக்கு வந்துள்ளேன். நான் தவறான முடிவை எடுத்ததாகவோ, இதற்காக வருந்த வேண்டுமென்றோ எனக்கு தோன்றவில்லை. உங்கள் உறவை, அன்பை இழந்து விடுவேன், என்ற அச்சம் வாட்டுகிறது. இருந்தும் ஒரு புதிய வாழ்க்கையை, ஒரு புது யுக பிரயையாக சஞ்சிரிக்கப் போகிறேன் என்று எனது அடிமனதில் உறைந்திருக்கும் இலட்சியம் நிறைவேற்பதில் நான் ஆறதலும் மட்டற்ற மகிழ்ச்சியையும் அடைகிறேன். இந்தக் காலத்தில் யார் மனம், எப்படி மாறும் என்று சொல்ல முடியாது. ஒரு வேளை என் முடிவை நீங்கள் ஏற்கவில்லையென்றால் உங்கள் அன்புப் பிரியா இறந்து விட்டாள் என்று தலைமுழுகி விடுங்கள். ஆமாம்! ரெம்பவும் சுயநலத்துடன் செய்த முடிவுதான். அதை விட முக்கியமான உதவி. எனக்கு யேர்மனியிலிருந்து ஓர் அண்ணா பணம் அனுப்பிரவர். அவரும் எவ்வளவோ பிரச்னைகளின் மத்தியில்தான் இந்த உதவியை செய்கிறார். என் மீது அளவு கடந்த நம்பிக்கையும் பாசமும் வைத்திருக்கின்றார். அந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்து விட்டேன். அவரை பொறுத்த வரை ஏற்றுக் கொள்ளமுடியாத துரோகம்தான். ஆனால் என்னை பொறுத்தவரை இதற்கு வேறு பெயர். அதை என்றாவதொரு நாள் நீங்களும் அவரும் புரிந்துக்கொள்வீர்கள். எனவே! நான் இந்த முடிவை எடுத்ததாக அந்த யேர்மன் அண்ணாவிற்கு தெரிவிக்க வேண்டாம். அவர் அனுப்பும் பணத்தை உங்களிற்கு அனுப்பி வைப்பேன். அன்ரி, சித்தப்பா, பிள்ளை குமுதா அனைவரையும் கவனமாக பாருங்கள். இத்தோடு அந்த அண்ணாவின் பெயரையும் அனுப்பி வைக்கின்றேன். கவனமாக பாதுகாக்க வேண்டும். காரணம்! எங்கள் எதிர்கால சந்ததிக்கு தெரிய வேண்டிய சில உண்மைகள். நாம் எந்த நிலையிலும் அன்னியரிடம் கையேந்தி வாழவில்லை. எனவே இவைகள் ஆதாரம்! நான் தேடிய புது யுகம், எங்கள் இனத்திற்கான புதிய யுகம் என்றே கருதுகிறேன். எனவே நான் எடுத்த முடிவு தவறாக இருப்பின் அனைவரும் முடிந்தால் என்னை மன்னித்து விடுங்கள். இப்படிக்கு புதுயுகம் கொண்ட உங்கள் பிரியா!."

# PAGEVISION IT AG

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்.

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch
info@pagevision.ch



CHF 109.- inkl. MwSt.

எம் ஊடாக VOIP TELEFON இணைப்பை ஏற்படுத்தினால், இலவசமாகவும் மிகக் குறைந்த கட்டணத்திலும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

Tellstr. 31/ Ecke Militärstr. 106
8004 Zürich

உலக ஓட்டத்திற்கு ஏற்ப உங்கள் வீடுகளிலும் நவீன கணனி முக்கியம் என்பதை நாம் அறிவோம்.



- Intel Core i5 2400
- 4x 3.10GHz, 6MB Cache
- 4GB DDR-3 Ram, Markenprodukt
- 1000GB Festplatte
- Nvidia GeForce GTX550 PCI-Express Grafikkarte mit 1GB DDR-5 Ram
- Windows 7 Home Premium

CHF 1'190.- inkl. MwSt.

# return'IT

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken
www.pckaufen.ch



CHF 110.- inkl. MwSt.

DELL Precision 380
Intel Pentium IV - 2.80GHz
160GB Festplatte, 7200RpM, S-ATA
RAM 1GB DDR2 RAM
DVD/CD-RW, Floppy
Grafikkarte: Nvidia Quadro FX1400 - 128MB
Windows XP Professional Lizenzkleber

HP DC7700

CHF 120.- inkl. MwSt.

Intel Core 2 Duo E6300
2x 1.86GHz
1GB DDR-2 RAM
80GB Festplatte
DVD/CD-Brenner
Integrierte Intel Q965 Grafik
Anschlüsse: 8x USB 2.0
VGA, 5x Audio, GLAN, 2x PS/2
Windows XP Professional Lizenz



HP Compaq NC8430

CHF 270.- inkl. MwSt.

15.4" WSXGA+ Display
Intel Core 2 Duo T7200
2x 2.00 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
ATI Mobility Radeon X1600
120GB Festplatte SATA
54Mbit WLAN
Fingerprint Reader, Bluetooth
Akkulaufzeit: 46-60 Minuten
Windows XP Professionaler



!! REPARATUREN ALLER MARKEN !!

für Neuware besuchen Sie
WWW.PAGEVISION.CH

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50

HP Compaq 8510W

CHF 360.- inkl. MwSt.

Intel Core 2 Duo T7500
2x 2.20 GHz
2GB DDR-2 RAM
DVD-RW Laufwerk
Nvidia Quadro FX 570M
250GB Festplatte SATA
300Mbit WLAN
Schweizer Tastatur,
Fingerprint Reader,
Bluetooth
*Windows VISTA Business Lizenz*



# Lycamobile



# ஜெர்மனி

சர்வதேச நாடுகளுக்கான தரம் வாய்ந்த அழைப்புக்கள் மிக குறைவான கட்டணத்தில்..!

மலேசியா
இந்தியா
கனடா
அமெரிக்கா

வீட்டு தொலைபேசி + கைத் தொலைபேசி

1 ct/min

Lycamobile இல் இருந்து Lycamobile க்கு

இலவச அழைப்புக்கள்

இலங்கை

வீட்டு தொலைபேசி 5 ct/min

கைத் தொலைபேசி 9 ct/min

ஐரோப்பா

1 ct/min இல் இருந்து

* வெளி நாடு இணைப்புக்கட்டணம் 15 ct
இச் சலுகை 30/06/2012 வரை செல்லுபடியாகும்.

*சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. மேலதிக விபரங்களுக்கு www.lycamobile.de

www.lycamobile.de 069 33399-322

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

LOTTO LOTTO LOTTO LOTTO Raiffeisen k kiosk AVIA DTV TABAK Westfalen ORLEN Esso



# யார் இந்த இராசதுரை ?

-பூமிபுத்ரன்-

'மட்டக்களப்பின் முடிசூடா மன்னன்', 'சொல்லின் செல்வர்' என்றெல்லாம் ஒரு காலத்தில் அழைக்கப்பட்டு, பின்னர் செல்லாக் காசாகிப் போன மட்டக்களப்பு மாவட்ட முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் பிராந்திய அபிவிருத்தி மற்றும் இந்துக் கலாசார அமைச்சுப் பதவிகளை அலங்கரித்தவரும், பின்னாளில் மலேசிய நாட்டுக்கான சிறி லங்காத் தூதுவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான செல்லையா இராசதுரை பற்றி அண்மைக் காலமாக ஊடகங்களில் செய்திகள் அடிபட்டு வருகின்றன.

33 வருடங்களாகத் தன்னை அரியணையில் அமர்த்தி வைத்திருந்த மக்களை அடியோடு மறந்துவிட்டு "சாயி சரணம்" எனக் கூறியவாறு மலேசியாவிலும் தமிழ்நாட்டிலும் காலந் தள்ளி வந்த அவர் நீண்ட நாட்களின் பின்னர் மட்டக்களப்புக்கு, தனது சொந்த இல்லத்திற்கு வந்த போது கிழக்கின் முதலமைச்சர் பிள்ளையான் அவரைச் சந்தித்த புகைப்படம் பல மாதங்களுக்கு முன்னர் இணையத் தளங்களில் உலாவியது. அதனைத் தொடர்ந்து மீண்டும் அரசியலில் அவர் குதிக்கப் போகின்றார் என்ற வதந்தி ஒரு சிலரால் கிளப்பி விடப்பட்டிருந்தது. ஆனால், அந்த வதந்தி ஒரு சில நாட்களில் காணாமற்போய் விட்டது.

தற்போது தந்தை செல்வா நினைவு தின நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக அவர் யாழ்ப்பாணம் சென்ற போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் அவரது வருகைக்குத் தெரிவித்த எதிர்ப்பு இராசதுரை தொடர்பான செய்திகள் மீண்டும் ஒருமுறை ஊடகங்களில் இடம்பிடிக்கக் காரணமானது.

அது தொடர்பான எனது கருத்தை அகரத்தின் கடந்த இதழில் நான் எழுதிய 'மறந்திருத்தல், மறைத்து வைத்தல்' என்ற தலைப்பிலான கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்.

*அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவு தினத்தின் போது மட்டக்களப்பு மாவட்ட முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராசதுரைக்கு மற்றொரு முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.கே. சிவாஜிலிங்கம் காட்டிய எதிர்ப்பைக் குறிப்பிட முடியும். சிவாஜிலிங்கம் நடந்துகொண்ட விதம் சரியா, ரெலோவின் உறுப்பினராக இருந்து கொண்டு மற்றொருவருக்குத் துரோகிப் பட்டம் கட்ட முடியுமா என்ற கேள்விகளைத் தள்ளி வைத்துப் பார்த்தால், செ. இராசதுரை அவர்களின் கடந்தகாலச் செயற்பாடுகளைத் தள்ளிவைத்து விட்டு அவரைப் 'புனிதராகத் திருநிலைப்படுத்துவது' முறையா என்ற கேள்வியை எழுப்பிப் பார்த்தல் நல்லது. தந்தை செல்வா மீது அவருக்கு உண்மையான மரியாதை இருந்திருந்தால் அவருடைய இலட்சியத்தை வென்றெடுக்க அவர் போராடியிருக்க வேண்டும். அதனைச் செய்யாதது மட்டுமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டு வெளியேறிய நாள் முதல் இன்றுவரை தந்தை செல்வா நினைவை அனுட்டிக்கவோ அல்லது அவரை நினைவு கூர்ந்து ஒரு அறிக்கை விடவோ கூட அவர் முயற்சிக்கவில்லை என்பதே குறித்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அவரது தகுதியைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றது.*

*விமர்சனங்கள் எதுவும் இன்றி செ. இராசதுரையை உள்வாங்குதல் என்பது அவரது கடந்த காலத்தை மறைத்து விடுவதற்கு ஒப்பானதாகும். இது பலருக்குப் பொருந்தும்.*

*மறப்போம், மன்னிப்போம் என்பது நல்லதொரு தத்துவமாக இருக்கக் கூடும். ஆனால், அதற்கூடாக வரலாறு மாற்றியெழுதப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.*

இக் கட்டுரை தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட நண்பர்கள் இந்த விடயத்தை விரிவாக எழுதும்படி கேட்டுக் கொண்டார்கள். அதே சமயம், யாழ் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், சீ. யோகேஸ்வரன் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களையும் வாசிக்க முடிந்தது.

அதே மாத்திரமன்றி, செ.இராசதுரை அவர்களைப் புகழ்ந்தும், அவர் 'கிழக்கின் விடிவெள்ளி' என வர்ணித்தும் மட்டக்களப்புப் பிரதேசவாதம் பேசும் சிலர் ஊடகங்களில் எழுதிய கட்டுரைகளும் மின்னஞ்சல் ஊடாக எனக்கும் கிடைத்தன. அவற்றை வாசித்த பின்னர் இராசதுரையைப் பற்றி எழுதியே ஆக வேண்டும் என்ற உந்துதல் எனக்கு மேலும் அதிகரித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவனான எனக்கு முன்னைய காலங்களில் இராசதுரையை மிகவும் பிடிக்கும். மிகவும் வறிய குடும்பச் சூழ்நிலையில் இருந்து எழுத்துத் துறையின் ஊடாகப் பொதுவாழ்வில் பிரவேசித்து, நாடாளுமன்ற உறுப்பினராகி, தானாகப் பதவி விலகும்வரை அந்தப் பதவியைத் தக்க வைத்துக் கொண்டிருந்தவர் அவர். 1956 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்த அவர் தனது இறுதித் தேர்தலில் 1977 இல் வெற்றி பெற்று 1989 வரை 33 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார். தமிழ்த் தேசிய அரசியல் கிழக்கில் பிரவேசிக்க வழி தெரியாது தவித்து நின்ற காலத்தில் கரம்பிடித்து அழைத்து வந்து களம் அமைத்துத் தந்தவர் அவர்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் அவர் பேச்சுத் திறமை மிக்கவர். அவரது கணீரென்ற குரலும், அலாதியான சரளமான பேச்சும் கேட்போரைக் கிறங்கடிக்கும். பேசிப் பேசியே தமிழ் மக்களைக் கட்டிப் போட்ட தமிழரசுக் கட்சிக்கு இராசதுரை போன்றோர் கிடைத்தமை ஒரு வரப்பிரசாதம்.

இத்தனை தகுதிகளையும் கொண்டிருந்த இராசதுரை "சேராத இடத்தில்' சேர்ந்து அத்தனையையும் கெடுத்துக் கொண்டார். 1989 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கி பேட்டியிட்டுத் தோல்வியடைந்து "போட்டியிட்ட அத்தனை தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர்' என்ற தன்னுடைய சாதனையைத் தானே முறியடித்துக் கொண்டார். அப்போது அவரிடம் வேறு தெரிவுகள் இருக்கவில்லை என்பது வேறு விடயம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டு அவர் வெளியேறியமைக்கு அவரது சொந்தப் பிரச்சினையே காரணமாக இருந்தது. தந்தை செல்வாவின் மறைவின் பின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அமிர்தலிங்கம் தன்னை ஓரங் கட்டுகிறார் என்ற ஒற்றைக் காரணத்துக்காக தன்னை நம்பி வாக்களித்த மக்கள் தந்த தமிழீழம் அமைப்பதற்கான ஆணையைப் புறந் தள்ளிவிட்டு அவர் தமிழீழ இலட்சியத்தையே அழித்துவிடக் கங்கணங் கட்டிநின்ற ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் அரசாங்கத்தில் பங்காளியாகச் சேர்ந்து கொண்டமை தமிழ் மக்களுக்குச் செய்த துரோகமே அன்றி வேறில்லை.

கொண்ட கொள்கைக்காகப் போராடும் ஒருவராக அவர் இருந்திருந்தால் கட்சிக்கு உள்ளேயே அவர் போராடியிருக்க வேண்டும். முடியாத பட்சத்தில் கட்சிக்கு வெளியே வந்து அவர் போராடியிருந்திருக்க வேண்டும. இரண்டையுமே அவர் செய்யவில்லை.

தந்தை செல்வா தன்னுடைய இலட்சியத்துக்காக இறுதிவரை பாடுபட்டார். அவரையே தன்னுடைய அரசியல் குருவாக ஏற்றுக் கொண்ட இராசதுரை அவரது மறைவிற்கு அஞ்சலி செலுத்துவதற்கே தாமதமாகவே வந்து சேர்ந்தார் என்பதே உண்மை. 1977 ஏப்ரலில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து உடலத்துக்கு அஞ்சலி செலுத்திய அவர் தற்போது 35 வருடங்களின் பின் 2012 ஏப்ரலிலேயே மீண்டும் அவரின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தச் சென்றிருக்கின்றார். இடைப்பட்ட காலத்தில் - தான் 10 வருடங்களாக அமைச்சராக இருந்த காலத்தில் கூட - அவர் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல முயலவில்லை. முன்னெரெல்லாம் தனது பேச்சைக் கேட்பதற்காகக் கண்விழித்துக் காத்திருந்த யாழ் குடாநாட்டு மக்கள் தற்போது தன்னைக் கால்தூசுக்குக் கூட மதிக்க மாட்டார்கள் என்ற உண்மை சில வேளைகளில் அவருக்குப் புரிந்திருக்கக் கூடும்.

**“மட்டக்களப்புச் சந்தையில் கொச்சிக்காய் (மிளகாய்) விற்ற செல்லையாவின் மகனை பாராளுமன்றக் கதிரையில் அமர வைத்த தந்தை செல்வாவை மறக்க முடியாது” என்று மேடைகளில் முழங்கிய அவரால் 35 வருடங்கள் தந்தை செல்வாவையும் அவரது இலட்சியத்தையும் எவ்வாறு மறந்திருக்க முடிந்தது?**

அதைவிடவும் இராசதுரையின் வாழ்வின் கடைசி 35 வருட வாழ்க்கையைப் பற்றி எழுதுவதற்கு நிறையவே உள்ளன. ஆனால், அது தேவையற்றது. எதுவுமே வேண்டாம் என்று ஒதுங்கியிருக்க நினைக்கும் அவரை சிவாஜிலிங்கம் எதனையோ சொல்லி விட்டார் என்பதற்காகத் தலையில் தூக்கி வைத்து ஆடவோ, ஒரு "மட்டக்களப்பானை யாழ்ப்பாணத்தான்' ஏசி விட்டான் எனக் கூறிக் கச்சை கட்டுவதையோ இத்துடன் நிறுத்தி விடுவதே நல்லது. ஏனெனில், தமிழ் மக்களைப் பொறுத்தவரை கவலைப் படுவதற்கு வேறு ஆயிரம் விடயங்கள் உள்ளன.

அதேவேளை, தந்தை செல்வாவின் மகனாக இருந்து கொண்டே இந்திய அரசாங்கத்தின் முகவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் செல்லாக் காசான சந்திரகாசன், மற்றொரு செல்லாக் காசான தன்னை எதற்காக அழைக்கிறார் என்பதைக் கூடப் புரிந்து கொள்ளாமல் அரிதாரம் பூசிக் கொண்டு அரங்கேற நினைப்பது மதிகெட்ட செயல் என்பதை இராசதுரையும் புரிந்து கொள்ள வேண்டும்.

‘கையிருக்கும் பணத்தில் கடலளவு பொருட்கள்’

Dortmund மாநகரில் கடலுணவு வகைகளின்
மலிவு விற்பனை அங்காடி

# KAILAS
## FISCH - FEINKOST



ஆசியாவிலிருந்து இறக்குமதி
செய்யப்படும் மீன்வகைகள்,
இலங்கையிலிருந்து இறக்குமதி
செய்யப்படும் மீன், நண்டு, இறால்,
கணவாய் வகைகள்
உடன் மீன் மற்றும்
கருவாடு வகைகள்

உடன் ஆட்டிறைச்சி, உடன் மரக்கறிவகைகள்,
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும்
தரம்வாய்ந்த அரிசிவகைகள்,
உங்கள் வீட்டிற்குத் தேவையான மளிகைப்
பொருட்கள் அனைத்தும் மலிவுவிலையில்!



**KAILAS**
**Adler Str. 5**
**44137 Dortmund**
**Germany**

Tel: 0231 137 433 95
www.kailas-fisch.de

Super Market

# JALLAHAM GmbH

# யாழகம்

இலங்கையில்லிருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் உடன் மீன்வகைகள்.

இலங்கை இந்திய டொமினிக்கன்
நாடுகளில்லிருந்து இறக்குமதி
செய்யப்படும் உடன்மரக்கறிவகைகள்.

மிகக்குறைந்த விலையில்
பொருட்க்களைப் பெற்றுக்கொள்ளலாம்.







100CHF மேல்
பொருட்கள்வாங்கினால்
5KG அரிசி
இலவசம்

குறை இருப்பின் எம்மிடம் சொல்லவும்
நிறை இருப்பின் நண்பரிடம் சொல்லவும்

Avenue de Marges 88
1004 Lausanne
021 624 38 10

Bernstrasse 24A
3072 Ostermundigen
031 931 14 14



சுபத்திரா

# இருதலைக்கொள்ளி எறும்பாக சிறிலங்கா

போரின்போதும், போருக்குப் பின்னரும் சீனாவின் அரவணைப்பில் இருந்து வந்த சிறிலங்கா, இப்போது அமெரிக்க - இந்திய அணியின் பக்கம் சாரத் தொடங்கியுள்ளதா என்ற கேள்வி எழ ஆரம்பித்துள்ளது.

கடந்தமார்ச் மாதம் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் சிறிலங்காவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் பின்னர் சிறிலங்கா அரசின் நிலைப்பாட்டில் தெரியும் சிறிய மாற்றம் தான் இதற்குக் காரணம். கடந்த மே மாதம் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனைச் சந்திக்க வொசிங்டன் சென்றிருந்தார்.

அப்போதே சிறிலங்காவின் அணுகுமுறைகளில் ஒரு தளம்பலை உணர முடிந்தது. ஜெனிவா தீர்மானத்துக்கு அடங்கிச் செயற்படப் போவதில்லை என்று நாடாளுமன்றத்தில் கூறிய ஜி.எல்.பீரிஸ், அமெரிக்காவுக்குப் போய் ஹிலாரி கிளன்ரனிடம் அந்தத் தீர்மானத்தை - அதாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறோம் என்று விளக்கமளித்து விட்டு வந்தார். ஹிலாரியிடம் இது தொடர்பான ஒரு திட்டத்தைக் கொடுத்தார் என்றும் - இல்லை என்றும் வாதப்பிரதிவாதங்கள் இன்னமும் தொடர்கின்றன.

அமெரிக்காவின் சொல்லை எடுத்தெறிந்து வந்த சிறிலங்கா, தற்போது அதனை சற்றேனும் மதிக்கின்ற போக்குத் தென்படுகிறது என்பதை இது வெளிப்படுத்தியது. இதற்குப் பின்னர், சிங்கப்பூரில் ஜூன் முதல்வாரம் நடைபெற்ற 11வது ஆசிய பாதுகாப்பு மாநாட்டின் போது, சிறிலங்கா தொடர்புடைய இரண்டு சந்திப்புகள் இடம்பெற்றன. இந்த மாநாட்டில் சிறிலங்காவின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஸ, கூட்டுப்படைகளின் தளபதி எயர் சீவ் மார்ஷல் றொஷான் குணதிலக ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இவர்கள் முதலில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியைச் சந்தித்துப் பேசினர். அடுத்து அமெரிக்கப் படைகளின் தலைமை அதிகாரியான ஜெனரல் மார்ட்டின் டெம்சியை சந்தித்தனர்.

ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர் இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையிலான இடைவெளி அதிகமாகியுள்ள சூழலில் தான், ஏ.கே. அந்தோனியுடனான சந்திப்பு நடந்துள்ளது. இது இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசலைக் குறைக்குமா என்பது சந்தேகம் தான்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சருடனான சந்திப்பின் போது, கோத்தாபய ராஜபக்ஸவும், ஜி.எல்.பீரிசும் சிறிலங்காப் படையினருக்கு பயிற்சிகள், உதவிகளை வழங்க வேண்டும் என்று கோரியிருந்தனர். அதற்கு அவரும் இணக்கம் தெரிவித்ததாகத் தகவல்.இதனை இந்தியா உறுதிப்படுத்தவில்லை. சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சே கூறியது. இந்தியா உதவ முன்வந்ததா இல்லையா என்பது இங்கு முக்கியமல்ல. இந்தியாவிடம் உதவி கோரப்பட்டது தான் முக்கியமானது. அதேபோன்று அமெரிக்க இராணுவத் தலைமை அதிகாரி ஜெனரல் மார்ட்டின் டெம்சியிடமும் பயிற்சி உள்ளிட்ட உதவிகளை சிறிலங்கா கோரியுள்ளது. அதற்கு அவரும் இணங்கியதாக கூறியுள்ளது சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு. அதுபற்றி அமெரிக்காகவும் எதையும் கூறவில்லை. இது உண்மையா பொய்யா என்பது முக்கியமல்ல. அமெரிக்காவிடம் உதவி கோரப்பட்டது தான் முக்கியமானது. ஜெனிவா தீர்மானத்தைக் கொண்டு வந்த அமெரிக்காவிடமும், அதற்கு ஆதரவளித்த இந்தியாவிடமும் சிறிலங்கா உதவி கோரியுள்ளது தான் முக்கியம்.

இந்து சமுத்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தமது நாட்டுக் கடற்படையை வலுப்படுத்த வேண்டும் என்றே சிறிலங்கா கோரியிருக்கிறது. இந்து சமுத்திரத்தில் மிகமுக்கியமான இடத்தில் சிறிலங்கா உள்ளது. அதனால் தான் சிறிலங்காவை வளைத்துப் போட சீனா முனைகிறது.

அதபோல, சிறிலங்காவில் தனக்கு விரோதமான சக்திகள் எதுவும் கால் வைத்து விடாதபடி கண்காணிக்கிறது அமெரிக்கா. ஆனாலும் சிறிலங்காவில் அதிகரித்து வரும் சீனத் தலையீடு, அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் தலைவலியாகவே மாறிவிட்டது. ஆசிய - பசுபிக் கடற்பகுதியைத் தான் அமெரிக்கா தனது எதிர்காலப் பாதுகாப்புத் திட்டத்தின் மையமாக மாற்றியமைக்க எண்ணியுள்ளது.

இதற்காக தனது பெருமளவு கடற்படை வசதிகளை ஆசியா நோக்கி நகர்த்தப் போகிறது. அவுஸ்ரேலியப் பெருநிலப்பரப்பில் அமையும் அமெரிக்கத் தளம் தவிர, கொகோஸ் தீவில் உருவாகும் ஆளில்லா வேவு விமான அணியும் இந்தப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

அமெரிக்காவின் இந்த நகர்வுகளை, தனக்கு எதிரானதாகவே சீனா கருதுகிறது. இது உண்மையும் கூட. ஆனால் அமெரிக்காவோ இது சீனாவுக்கு எதிரானது அல்ல என்கிறது. செசெல்ஸ் தீவு, மாலைதீவு, பாகிஸ்தான், சிறிலங்கா, பர்மா என்று ஒரு முத்துமாலை வியூகத்தை வகுத்து- இந்தியா மீதான பிடியை இறுக்கத் தொடங்கிய சீனா, அடுத்து ஆப்கானிஸ்தானையும் குறிவைத்துள்ளது.

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் வழியாக ஆப்கானிஸ்தானுக்கு மலையைக் குடைந்து பாதை அமைக்கும் பணியை சீனா மேற்கொண்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் இந்தியா கொண்டுள்ள செல்வாக்கையும், முக்கியத்துவத்தையும் உடைக்கும் வகையில் சீனா இதைச் செய்து வருகிறது. 220 கி.மீ. தூரமும், 64 மீற்றர் அகலமும் கொண்ட இந்தப் பாதையின் பாதித் தூரம் சுரங்கப் பாதையாகவே இருக்கப் போகிறது. இந்தப் பாதையை அமைத்து முடித்து விட்டால், ஆப்கானிஸ்தானில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து விடும். இதெல்லாம் இந்தியாவுக்கு மிகவும் அச்சுறுத்தலான விடயங்கள்.

இந்தியாவைப் போலவே, தெற்காசியாவில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதை விரும்பாத மற்றொரு நாடு தான் அமெரிக்கா. ஏனென்றால், தெற்காசியக் கடற்பிராந்தியம் சீனாவின் கைக்குள் போய்விட்டால், கிழக்கின் மீது அமெரிக்கா கொண்டுள்ள ஆதிக்கம் கேள்விக்குள்ளாகி விடும். இதனைக் கருத்தில் கொண்டு தான் இந்தியாவும் அமெரிக்காவும், சீனாவின் எழுச்சியை முறியடிக்கக் கைகோர்க்கின்றன.

"இந்தியா, எப்போதுமே அமெரிக்காவின் நம்பிக்கையைப் பெற்றது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மிக முக்கியமான நாடு என்ற முறையில் அவர்களுடன் மிகச்சிறப்பான உறவு உள்ளது. இராணுவ ரீதியாக இதனை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள அமெரிக்கா விரும்புகிறது." இவ்வாறு கூறியுள்ளார் அமெரிக்காவின் இராணுவ தலைமை அதிகாரியும், ஒபாமாவின் பாதுகாப்பு ஆலோசகருமான ஜெனரல் மார்ட்டின் டெம்சி. இந்தியாவும் அமெரிக்காவும் மிகவும் நெருக்கத்துக்குரிய அமெரிக்காவும் மிகவும் நெருக்கத்துக்குரிய நாடுகளாகி விட்டதால், சீனாவின் வியூகத்துக்கு தடைகள் ஏற்படத் தொடங்கி விட்டன.

இந்திய-அமெரிக்க கூட்டு சீனாவுக்கு நேரடி அச்சுறுத்தலாகவே கருதப்படுகிறது.இந்தக் கூட்டு உருவாகி வருவதையிட்டு கலக்கம் கொண்டுள்ள மற்றொரு நாடு தான் சிறிலங்கா. போர்க்காலத்திலும், போர் முடிந்த பின்னரும் சீனாவின் வாலில் தொங்கிக் கொண்டிருந்த சிறிலங்காவுக்கு மாற்று சக்தி ஒன்றின் கை ஓங்குவது அச்சத்தைக் கொடுத்திருப்பதையிட்டு ஆச்சரியப்பட முடியாது. ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, சீனாவினால் அதைத் தோற்கடிக்க முடியவில்லை. சீனாவின் நிழலில் இருந்து கொண்டு- சிறிலங்காவினால் பொருளாதார உதவிகளைப் பெறலாம், படைபலத்தைப் பெருக்கலாம், பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம். ஆனால் சர்வதேச ஆதரவைப் பெற முடியாது. இது ஜெனிவா தீர்மானம் சிறிலங்காவுக்கு கொடுத்துள்ள பாடம்.

இதே பாடத்தை கற்றுக்கொண்ட பின்னர் தான் மியான்மரும் சீனாவின் நிழலில் இருந்து விலகி மேற்குலக விருப்பங்களுக்கேற்ப நடக்க இசைந்தது. அத்துடன் சீனாவின் முத்துமாலை வியூகத்தை இந்திய - அமெக்க கூட்டு உடைத்து விடுமேயானால், சிறிலங்காவின் முக்கியத்துவம் சர்வதேச அரங்கில் பறிபோய் விடும். இதையுணர்ந்தே, இந்திய - அமெரிக்கத் தரப்புகளை சமாதானப்படுத்திக் கொள்ள சிங்கப்பூரில் சிறிலங்கா உதவிக் கோரிக்கைகளை முன்வைத்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

இதற்கு இந்த இரு நாடுகளும் இணங்கியிருந்தாலும் கூட, அது இந்த இரு நாடுகளினதும் இராணுவ மூலோபாயத்திற்குட்பட்டதாகவே தெரிகிறது. இது இந்த நாடுகளினது பிரதான அரசியல் மூலோபாயத்தில் தாக்கத்தை அல்லது மாற்றத்தை ஏற்படுத்துமா என்பது சந்தேகம் தான்.

அமெரிக்காவுக்கும் சிறிலங்காவுக்கும் இராஜதந்திர நெருடல்கள் இருந்தாலும் கூட, இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளில் அது பாதிப்பை ஏற்படுத்தவில்லை. குறிப்பாக, எந்த நெருக்கடியான நிலையிலும், அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடம் சிறிலங்கா பாதுகாப்புத் தரப்புடன் கிரமமான தொடர்புகளைப் பேணியே வந்துள்ளது. அதுபோலவே சிறிலங்காவுக்கு பாதுகாப்பு உதவிகளையோ, பயிற்சிகளையோ அமெரிக்கா வழங்க முன்வரலாம். ஆனால்,

அமெரிக்காவின் அரசியல், இராஜதந்திர மூலோபாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று உறுதியாகக் கூறமுடியாது. அதேவேளை, சிறிலங்கா மெல்ல மெல்ல அமெரிக்காவின் பக்கம் நகர்வது சீ-னாவைச் சினங்கொள்ள வைத்துள்ளது. சங்கிரிலா கருத்தரங்கு முடிந்த சில நாட்களிலேயே அதை உணரமுடிந்தது.

சிறிலங்காவில் இருந்து இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தலைமை-யிலான உயர்மட்டக் குழுவொன்றை பெய்ஜிங்கிற்கு அழைத்தது. அங்கு சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லீ சிறிலங்கா இராணுவத் தளபதியைச் சந்தித்தார்.

சிறிலங்கா இராணுவத் தளபதிகள் பலரும் இதற்கு முன்னர் சீனாவுக்குச் சென்று வந்துள்ளனர். ஆனால் அவர்கள் எவரையுமே சீனப் பாதுகாப்பு அமைச்சர் தனியாகச் சந்தித்து கிடையாது. இம்முறை லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவை சீனப் பாதுகாப்பு அமைச்சர் சந்தித்தார். எந்த அவசர நிலையிலும் எத்தகைய இராணுவ உதவிகளையும் சிறிலங்காவுக்கு வழங்க சீன இராணுவம் தயாராக உள்ளதாக அவர் உறுதியளித்தார். சீனா இதுவரை எத்தகைய உதவிகளையும் வழங்கத் தயார் என்று தான் கூறிவந்துள்ளது. ஆனால் இப்போது, சீன இராணுவம் உதவத் தயார் என்று கூறியுள்ளது. இது தனியே படைக்கல உதவிகளை மட்டும் குறிக்கவில்லை படை உதவிகளையும் தான் குறிக்கிறது. அதாவது, தேவையான நேரத்தில் சிறிலங்காவுக்கு உதவ சீனா படைகளையும் அனுப்பத் தயாராக உள்ளது என்ற செய்தி இதன் மூலம் பரிமாறப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் ஒரு இயற்கைப் பேரழிவோ அல்லது வேறு எந்த அவசர நிலையோ ஏற்படும்போது-உதவி கோரினால், இனிமேல் அமெரிக்கப் படையினரோ இந்தியப் படையினரோ வந்திறங்கப் போவதில்லை. ஜவிபி கிளர்ச்சியின் போது ஒருமுறையும், அமைதிப்படை என்ற பெயரில் மற்றொரு முறையும் சிறிலங்காவுக்கு உதவ இந்தியா படைகளை அனுப்பியது. 2004இல் சுனாமிப் பேரழிவின் போது மீட்புப் பணிகளுக்கு உதவ, அமெரிக்கப் படைகளும் வந்தன.

ஆனால் இனிமேல் சீனப் படையினர் தான் சிறிலங்கா வரப் போகின்றனர் என்பது இப்போது உறுதியாகி விட்டது. சீனாவின் இந்த அறிவிப்பு இந்திய, அமெரிக்க கூட்டுக்குள் சிறிலங்கா சிக்கிவிடக் கூடாதென்பதை மையப்படுத்தி விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை தான். சிறிலங்கா மெல்ல தன்னை விட்டு விலகத் தொடங்கியதும் அதற்கு, கட்டைபோட்டு இறுக்கி விட்டது சீனா.

ஏற்கனவே சிறிலங்காவில் பொருளாதார ரீதியாக சீனா நிறையவே முதலிட்டுள்ளது உதவிகளை வழங்கியுள்ளது. இப்போதும் கூட மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் கட்டுமான ஒப்பந்தத்தையும் சீனாவே பிடித்துள்ளது.

இத்தகைய சூழலில், பொருளாதார நலன்களையெல்லாம் தன்னிடம் பெற்றுக் கொண்ட சிறிலங்கா, அரசியல் நலனுக்கு மட்டும் அமெரிக்க-இந்தியக் கூட்டின் பக்கம் சார்வதை சீனாவினால் ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது.

சீனா இந்தளவு பொருளாதார உதவிகளை சிறிலங்காவுக்கு அள்ளிக் கொடுத்ததன் அடிப்படை நோக்கமே சிறிலங்காவைத் தனது இராணுவ நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தான். இப்படிப்பட்ட நிலையில் தனது பாதுகாப்பு நலன்களுக்கு விரோதமான கூட்டணியுடன் சிறிலங்கா இணைவதை சீனாவினால் ஜீரணிக்க முடியவில்லை. இதனால் தான் சிறிலங்காவுக்கு தெளிவான சமிக்ஞை ஒன்றை சீனா காண்பித்துள்ளது. இந்தநிலையில், சிறிலங்கா அரசியல், இராஜதந்திர நலன்களைக் காப்பாற்ற வேண்டுமானால் அமெரிக்க – இந்தியக் கூட்டின் பக்கம் செல்ல வேண்டும். அது சீனாவுக்குப் பிடிக்காது என்ற நிலையில், சிறிலங்கா தனது நிலையைத் தெரிவு செய்வதற்காக இனி மண்டையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

தமிழ் அருள்
TAMILARUL.COM
தமிழ் இணையத்தள சேவை
www.tamilarul.com
செய்திகள், நிகழ்வுகள், சினிமா, மருத்துவம், அறிவித்தல்கள், காணொளிகள்



# இளம் ஈழக் கர்ப்பிணித் தாயும் 2 பிள்ளைகளும் ஆயுட்காலமும் சிறையிலா? அவுஸ்திரேலிய சிறையில் கேட்பாரில்லையா?

அவுஸ்திரேலியச் சிறையில் இன்னொரு இரண்டு பிள்ளைகளின் அப்பாவித் தாய் அவரது கருவிலே மூன்றாவது குழந்தை வளர்கிறது. முள்ளி வாய்க்கால் படு கொலைகளில் தப்பி 2 பிள்ளைகளுடன் 2010ல் கிறிஸ்துமஸ் தீவில் அவுஸ்திரேலியாவில் அகதித் தஞ்சம் கோரினார் 33 வயதான றஞ்சனி. அவருக்கு அதிஷ்டம் கை கொடுக்க அவரது 2 பிள்ளைகளையும் ஏற்கும் 36 வயது இலட்சியவாதியாக 2004ல் அவுஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்த கணேசன் என்பவர் காதலித்து மணந்து மெல்பேர்ண் கிராமம் ஒன்றில் அமைதியாக மணவாழ்வை அனுபவித்தார்.

இந்த இன்பம் நீடிப்பது கடவுளுக்கு விருப்பம் இருந்தாலும் அவுஸ்திரேலிய உட்துறைப் பாதுகாப்புப் பிரிவுக்கு விருப்பம் இல்லைப் போலும். யார் செய்த சதியோ அல்லது ரஞ்சனியின் விதியோ அவரால் அவுஸ்திரேலிய அரசுக்கு ஆபத்து என பாதுகாப்பு அலுவலகம் அவரை அறிவிக்கும் வரை அவர் ஒரு உண்மையான அகதியாகவே ஏற்கப்பட்டிருந்தார்.

இப்போது உள்ள அகதிகள் பட்டியலில் றஞ்சனி 47வது ஆபத்தான பேர்வழி ஆக்கப்பட்டுள்ளார். அதற்கான காரணம் எதுவும் சொல்லப்பட மாட்டாது. ஆனால் அவ்வாறு பிரகடனப் படுத்தப்பட்டவர் ஆவார்.

இந்த அதிர்ச்சி ஒருநாட் காலை அகதித் தஞ்சக் குடிவரவு உத்தியோகத்தரின் தொலை பேசி அழைப்பாக வந்தது. அழைப்பை எடுத்தவர் கணேசன். மறுநாள் நடைபெற இருந்த மாதாந்த சந்திப்பு அன்றைய தினம் பிற்பகலுக்கு மாற்றப் பட்டுள்ளது இரண்டு ஆண் பிள்ளைகள் பிறை வயது 8 கதிர் வயது 6 இருவரும் கூட்டி வரப்பட வேண்டும் என்றது அழைப்பு.

இரு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் இப்படித் திடீர் அழைப்பும் பிள்ளைகளும் சேர்க்கப் பட்டமை திகிலை ஏற்படுத்தவே செய்தது. ஆயினும் பிள்ளைகளைத் தொடக்கப் பள்ளியிலிருந்து கூட்டிவந்த கணேஸ் மனைவியையும் அழைத்துக் கொண்டு கூட்டத்துக்குப் போனார்.

வரவேற்பறையில் அரை மணிநேரம் காக்க வைத்த பின்னர் கணேசனை வெளியே காத்திருக்க வைத்துவிட்டு றஞ்சனியும் 2 பிள்ளைகளையும் உள்ளே அழைத்துப் போன அதிகாரிகள் 10 நிமிடம் கழித்து ஒரு அதிகாரி வெளியே வந்து றஞ்சனி ஆபத்தானவர் என அடையாளம் காணப்பட்டதால் அவரும் அவரது 2 பிள்ளைகளும் விலாவூட்டில் உள்ள தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப் படுகிறார்கள் எனச் சொன்னார். 6-7 பாதுகாப்பு அதிகாரிகளின் மத்தியில் ரஞ்சனியும் பிள்ளைகளும் அழுதபடியே இழுத்துச் செல்லப்பட்டனர்.

2 நாட்களின் பின்னர் றஞ்சனி தலைசுற்று வாந்தி காரணமாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டபோது கர்ப்பமாக உள்ளார் என்று தெரியவந்துள்ளது.

மீள முடியாத சிறையின் கதவுகள். எதற்கு உள்ளே வைக்கப் படுகிறோம் என்ற காரணம் அறியப் படாமலே மரணம் அழைக்கும் வரை சிறைவாசம். காரணமும் தெரியாது காரணத்தின் உண்மைத் தன்மையும் தெரியாது. ஆனால் சிறைவாசம் மட்டும் கண் முன்னால். இது இலங்கை என்றால் காரணம் காரியம் இரண்டும் உலகமே அறியும். ஆனால் வெள்ளைக் காரர் தேசத்தில் இப்படி ஒரு கறுப்புச் சிறையா? கறுப்புச் சட்டமா? சட்டம் ஒரு இருட்டறை என்பது இதுவா? விளக்கமும் கிடையாது விடுதலையும் கிடையாது.

சுதந்திரமான மீளாய்வுக்கான வழி முறைகளும் இல்லை. வெளிப்படைத் தன்மை இல்லாது நீண்ட கால வரையறை அற்ற சிறைவாசம் மனக் குழப்பங்கள் மனச் சிதைவுகளுக்கும் தற்கொலைகளுக்கும் இடமளிக்கிறது. அவுஸ்திரேலிய பாராளுமன்றம் இது பற்றி விவாதத்துக்கு எடுத்துள்ள போதிலும் உருப்படியாக எதுவும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. ஈழத் தமிழனாய் பிறந்தது பாவமா? அல்லது ஈழத் தமிழனுக்கு உதவ ஈழத் தமிழனே தயங்குகிறானா? உரிமைக்காகவும் போராடத் தெரியாது, நீதிக்காகவும் போராடத் தெரியாத இனமா நாம் ? கருவில் உள்ள பிள்ளை செய்த குற்றம் என்ன?


ஈழவிடுதலைப் போராட்டத்தின் பதிவுகள், ஈழமண்ணில் சிங்கள அரசாங்கத்தினால் அழிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் புதிய தலைமுறைகளிற்கான பாடமாக, தமிழீழமண்ணில் நடைபெற்ற விடுதலைப்போரின் அத்தியாயங்களைப்பதிவுசெய்வதன் மூலம், இனிவரும் சமுதாயம் எமது நியாயப்பாடுகளை இலகுவாக விளங்கிக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் அகரம் இதழ் இவ்வரைவுச் சித்திரங்களை வெளியிடுகிறது..!

தொகுப்பு - திரு. ஆ. புலேந்திரன்




தொடர்-03

*தொடரும்...*



# அரியாலை

*வண்ணை தெய்வம்*

"சிரித்திரன்" பத்திரிகையின் ஆசிரியராக இருந்த அமரர் சிவஞான சுந்தரம் அவர்கள் தனது சிரித்திரன் பத்திரிகையின் ஒரு இதழில் அரியாலையைப் பற்றிக் குறிப்பிடும்போது எழுதுகின்றார் "அரிய கலை-களைக் கொண்ட ஊர்தான் அரியாலை" என்று! ஆம் அரியாலை கல்வி, சமயம், வரலாற்றுப் பதிவுகள் எனப் பல சிறப்புக்கள் இருந்தாலும் அரிய கலைகளின் அழியாத இருப்பிடம் அரி-யாலை எனக் கூறினால் மிகையாகாது! இதற்கு ஒரு உதாரணம் அரியாலையின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் காசிப்பிள்ளை கலை அரங்கம்! வருடம் பன்னிரண்டு மாதங்களும் இந்த அரங்கில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றுக்கோண்டே இருப்பது அரியாலை நகரின் தனிச் சிறப்பாகும்!

யாழ் மாநகரசபையின் கிழக்கு எல்லையாகத் திகழும் இச் சிறிய நகரம் யாழ்ப்பாண மாந-கரசபையின் பெரும் பாகத்தையும், நல்லூர் பிரதேச சபையின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாகும். ஏறக்குறையப் பத்து சதுர கிலோமீற்ரர் பரப்பளவாகவும், சுமார் முப்பதினாயிரம் மக்கள் வாழும் வசிப்பிடமாகவும் அமைந்த நிலப்பரப்பில் சைவமும் தமிழும் கொஞ்சி விளையாடுவதோடு, பல சைவப் பேராலயங்களும், சில கிறிஸ்த்தவ தேவாலயங்களும், பிரசித்தி பெற்ற பாடசாலைகளும், சமூகத்தின் பெருமைதனை எடுத்தியம்பும் சனசமூக நிலையங்களும் அதிகமாகவே இருக்கின்றன.

அரியாலையின் வட திசையில் உப்பு விளைகின்ற கடல் நிலமும், கிழக்கில் பெரு மழையை நம்பி நெல் விளையும் கழனித் தரைகளும், இவை தவிர நகரின் பல பாகங்களிலும் இதோ வானத்தை எட்டிப் பிடிக்கப்போகின்றோம் எனச் சொல்லாமல் சொல்லியபடி உயர்ந்து வளர்ந்து நண்பர்களைப்போல அக்கம் பக்கமாக நிற்கும் பனை மரங்களும், தென்னை மரங்களும், கடற்கரையை ஒட்டி உயர்ந்து சிறு சிறு புட்டிகளாக இருக்கும் வெண் மணற் திட்டிகளும், (அரியாலை மண் பால் போன்ற வெண்மையாக இருக்கும்) இவற்றோடு தென் திசையில் பண்டியன்தாழ்வு கொழும்புத்துறையைச் சென்றடையும் வீதியும், மேற்கே கச்சேரி-நல்லூர் வீதியும், வடக்கே செம்மணி வீதியும் அரியாலை மண்ணின் அடையாளங்களாகும்.

யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்தின் இராசதானியாக அக்காலத்தில் விளங்கிய நல்லூரில், ஒன்பதாம் நூற்றாண்டின் காலப்பகுதியில் ஆட்சி செய்த உக்கிரசிங்கனின் மகன் வாலசிங்கனின்



ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் சோழ சாம்ராச்சியத்திலிருந்து இரண்டு கண்களும் குருடான பாணன் என்னும் கலைஞன் தான் இயற்றிய பாடல்களுக்குத் தானே யாழ் இசைத்துப்பாடி மன்னனை மகிழ்விக்கவென இந்தியாவில் இருந்து வருகை தந்து மன்னனின் அரச சபையில் பாடி தானே யாழ் இசைத்து மன்னனை மகிழ்வித்திருந்தான்.

இரு கண்களும் இல்லாத பாணனின் நின் புலமையும், யாழ் இசையின் வல்லமையையும் கௌரவித்து மன்னன் பாணனுக்குப் பல பெறுமதியான பரிசில்களுடன் தென் கிழக்கே பரந்து விரிந்த பெரு நிலப்பரப்பாக இருந்த வெண் மணல் திடலினை அன்பழிப்பாக வழங்கியதாகவும், யாழ்பாடி பாணன் பரிசு பெற்ற அந்த நிலமே யாழ்ப்பாணம் என்று பெயர் பெற்றதாகவும், அதன் ஒரு பகுதியில்த்தான் அரியாலை இருந்ததாகவும் வரலாற்று ஆராட்சியாளர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்குச் சான்றாகப் பாணன் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்ட குளம் (கச்சேரி-நல்லூர் வீதிக்கு அண்மையில்) பாணாங்குளம் என்றே அழைக்கப்படுகின்றது. (தற்பொழுது அந்தக் குளம் மூடப்பட்டுவிட்டது)

அரியாலை கோயில்களும் குளங்களும் நிறையவே பெற்றது. சில கோவில்களுக்கு அருகே உள்ள குளங்கள் குடியிருப்புகளால் அழிந்துபோனாலும் அக் குளங்களுக்கு அருகில் இருந்த கோவில்களுக்கு அருகில் உள்ள குடியிருப்புக்கள் அந்தக் குளங்களின் பெயர்களைக்கொண்டே அழைக்கப்படுகின்றது. இப்பொழுது அழியாமல் இருக்கும் குளங்களும் கோவில்களும் பின்வருமாறு

கிழக்குஅரியாலையில் அண்ணமார் கோவிலும், அதன் அருகில் உள்ள அண்ணமார் குளமும். அதே இடத்திற்கு முன்பாக உள்ள மட்டை விரிச்சான் அம்மன் கோவிலும், அதன் அருகில் உள்ள நெடுங்குளமும். அரியாலை மத்தியில் காணப்படும் ஆதி வைரவர் ஆலயமும் அதன் அருகில் காணப்படும் பிரப்பங்குளமும். அரியாலை மேற்குப் பகுதியில் காணப்படும் அரசடி விநாயகர் கோவிலும் அதன் அருகினில் காணப்படும் நாயன்மார்க்கட்டு குளமும் பிரசித்தி பெற்றவைகளாகும்.

இதில் நாயன்மார்கட்டு குளம் சங்கிலியன் மன்னன் நல்லூரை ஆண்ட காலத்தில் அரசகேசரிப் புலவர் அவர்களும், நாயன்மார்களும் வாழ்ந்த மனைகளை அண்டி அமைந்திருந்ததால் நாயன்மார்க்கட்டு குளம் என அழைக்கப்படுவதாக வரலாறுகள் கூறுகின்றன.

அரியாலை மேற்குப் பகுதியில் புவனேசுவரி அம்மாள் கோவில் இருக்கின்றது. இதனை நாச்சிமார் கோவில் என்றும் அழைப்பார்கள். இதன் அருகே இருந்ததாகச் சொல்லப்படும் வெட்டுக்குளம் இப்பொழுது குடியிருப்புக்களால் குளம் இருந்த இடமே இல்லாமல்ப் போய்விட்டது. இருந்தபோதும் இக்குளம் இருந்தமை பற்றி இன்றும் உயிருடன் இருக்கும் அக்காலத்தில் வாழ்ந்தவர்களால் வியந்து பேசப்படுகின்றது.

நல்லூர் கிராமத்தின் கிழக்கு எல்லை சங்கமிக்கும் இடத்தில் வேரம்பரை பெரிய நாச்சியார் கோவில் இருக்கின்றது. இதன் அருகில்த்தான் பாணன் குளம் இருந்தது. காலப்போக்கில் இது பாணாங்குளம் என்றும் அழைக்கப்படலாயிற்று. கோவிலின் தெற்குப் பகுதியில் இருந்த இக்குளத்தைக் கோவிலின் வீதி வசதிக்காக ஆலய நிர்வாகிகளாலேயே மூடப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் குளத்தினை இதன் பெருமை அறியாமல் இருந்த சுவடுகளே தெரியாமல் அழிக்கப்பட்டமை வருத்தத்திற்குரிய நிகழ்வாகும். (தொடரும்...)



# Milin Impex

*Asiatische Lebensmittel Groß und Einzelhandel*

## ஜேர்மனி டோட்முண்ட் மாநகரில் தலைமுறை தலை முறையாக தரமான ஆசிய, ஆபிரிக்கா உணவுப்பொருட்களின் இறக்குமதியாளரும் மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான
தரமான இலங்கை, இந்திய, மற்றும் ஆபிரிக்கா உணவுப்
பொருட்களைச் சிரமம்மின்றி ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
ஒரு 20 வருட அனுபவமிக்க நிறுவனம்.

**Web: www.milinimpex.de E-Mail: info@milinimpex.de**

அத்துடன் உங்கள் வசதிக்கு ஏற்ப
நீங்கள் வீட்டில் இருந்தபடியே எம்மிடம்
பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளலாம்!

**Tel: 0231 45 96 17 / 28**

Dortmund நகரில்
Westendorfstr. 41
44287 Dortmund
Tel: 0231 459617/28
Fax: 0231 1815288

Wuppertal நகரில்
Aue – 94
42103 Wuppertal
Tel: 0202/29995869

Lüdenscheid நகரில்
Höchstr. 8a
58511 Lüdenscheid

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 - 16:00 Uhr




நேரடி! அதிரடி! மலிவு விற்பனை
Hamm ஸ்ரீ காமாட்சி அம்மன் தேர்த்திருவிழா மலிவு விற்பனை வெற்றியை தொடர்ந்து
24-06-2012 ஞாயிற்றுக்கிழமை அன்று
நெதர்லாந்து, டென் ஹெல்டர்
ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர்ஆலயத்
திருவிழாவை முன்னிட்டு
உங்கள் முல்கைம் P.S. பவான் அண்ணாச்சி
Indische Textilien & Schmuck
Tel : 0208-444 89 53 Mobil : 0172-2607388
Den Helder ஸ்ரீ வரதராஜ
செல்வவிநாயகர் கோவில் திருவிழா
24-06-2012 அன்று
Non Stop
நேரடி! அதிரடி!
மலிவு விற்பனை
Parking
50 Parkplätze vor dem Laden
Öffnungszeiten Mo.-Sa. 10.00 - 20.00
Non Stop
நேரடி! அதிரடி!!
மலிவு விற்பனை
இந்தியாவில் சென்னை, பெங்களூர், பாம்பே, சூரத், இண்டூர், ஜபல்பூர், வாரணாசி, காசி போன்ற நகரங்களில் உள்ள நமது
P.S. பவான்®
அண்ணாச்சியின்
சொந்த ஆலைகளில் உயர்ரக பட்டாடைகள் தேர்த்திருவிழாவுக்கென்றே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.
முந்துபவர் கையில் இருப்பு உள்ள வரை மட்டும்
மேலதிக விபரங்களுக்கு
www.lankasri.com
www.ps-import-export.com
Tel : 02084448958
H.P : 01722607388
01724406514
மூன்று பஞ்சாபிகள் 50€
மூன்று சாறிகள் 50€
எவரும் தர முடியாத விலையில்
அண்ணாச்சியின் சொந்த ஆலைகளின் தயாரிப்பு

புதிய
லைக்காமொபைல்
ப்ள்ஸ்
சிம்முடன்!

# Lycamobile

## சுவிட்சர்லாந்து

CHF **100.-**
வரை
இலவசம்!

**லைக்காமொபைல்** ப்ள்ஸ் இல் இருந்து **லைக்காமொபைல்** ப்ள்ஸ் க்கு

# வரம்பற்ற இலவச அழைப்புக்கள்

(இணைப்புக் கட்டணம் இல்லை)

இந்தியா

கனடா

அமெரிக்கா

சிங்கப்பூர்

வீட்டுத் தொலைபேசி + கைத் தொலைபேசி

CHF **0.01** /min



| | வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி |
|---|---|---|
| இலங்கை | CHF 0.09 /min | CHF 0.12 /min |
| ஐரோப்பா | CHF 0.01 /min | |

இல் இருந்து

தேசிய, சர்வதேச அழைப்புக்களுக்கான
இணைப்புக் கட்டணம் 19Rp

மேலதிக விபரங்களுக்கு

**www.lycamobile.ch** 077 900 01 22
044 555 23 23

Lyca mobile
Call the world for less

Lycamobile வாங்கக்கூடிய இடங்கள்:

SBB CFF FFS, MediaMarkt, Interdiscount, k kiosk, SWISS POST, COOP, Fust, TELEFONCORNER, NAVILLE, Presseweb, RELAY